தமிழ்க் கடல் வாசகம்

மூன்றாம் புத்தகம்

சென்னை
இராஜதானிக் கலாசாலை மாஜித் தமிழாசிரியரும்
'தமிழ்க் கடல்' வெளியீட்டுப் பதிப்பாசிரியரும் ஆகிய
கா. நமச்சிவாய முதலியார்
எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :
தமிழ்க் கடல் ஆபீஸ்
சாந்தோம், மயிலை

பதிவு செய்தது] [விலை 8 அணா

Printed at
The 'Tamil Kadal' Press,
Madras


முன்னுரை

இவ் வாசக புஸ்தகத்தில் வந்துள்ள பாடங்கள் படங்கள் அச்செழுத்து முதலிய அனைத்தும் புதியவை. வகுப்பிற்கு ஏற்க, உரை நடை நன்கு அமைந்துள்ளது.


வசன பாடத்திலும் செய்யுட் பாடத்திலும் வந்துள்ள அருஞ் சொற்களுக்குக் குறிப்புரைகள் இற்றில் சேர்க்கப்பட் டுள்ளன; அவை மாணுக்கருக்குப் பெரிதும் பயன்படுவன வாகும். வசன-பாடத்தின் குறிப்புரை அகராதி முறைப்படி அமைத்திருத்தலின், மாணுக்கர் அகராதி பார்க்கும் வழக்கமும் அடைவர்.

'கடலகம்'
சாந்தோம், சென்னை. } கா. நம.

அடக்கம்



[திருச்சிராப்பள்ளி — தி



வாஆனைக்கா : பக்கம் 99]

தமிழ்க் கடல் வாசகம்

மூன்றாம் புத்தகம்

1. இமய மலை - I

செய்யுள்

உலகி லெங்கணும் உயரிய வரைகளின் ஓங்கி
அலகி லாவளம் உடையதாய் அழகிதாய் அறவோர்
நிலவ நின்றதாய் நீடிய நெறியதாய் நிலையாய்
இலகு பற்பல வனத்ததாய் எழிலுறும் இமயம். (1)

வெய்ய வன்கதிர் வீசினும் விலகிடா தென்றும்
துய்ய தண்பனிப் படைகொடு துலங்குற விளங்கும்
செய்ய வானளாஞ் சிகரிகள் பலப்பல சிறப்ப
மைய ளாவிய வுடலது மால்வரை இமயம். (2)

பொன்னின் கோட்டது புனிதவெண் கோட்டது புரைதீர்
மன்னு மானச வாவியும் உடையது வரைப்பில்
துன்னும் ஆனினம் மானினம் முதலிய துலங்கப்
பன்னு சீரது பேரது பனிவரை இமயம். (3)

கங்கை யென்றுல கேத்திய கடவுள்மா நதியும்
பொங்கு நான்முகன் புத்திரி எனும்பெயர்ப் புன
மங்கி டாதுபாய் சிந்துவும் வளம்பல மலிய [லும்
எங்க ணும்பரந் திழிபுன லுடையதால் இமயம். (4)

இன்ன மால்வரை ஏற்றமிங் கென்னென இசைப்பே
மன்னு மானிடர் அடிபடா முடியதாய் வானில் [ம்
துன்னு சீரதாய்ச் சொன்முடி பற்றதாய்த் தூய்தாய்
உன்னும் ஓரறி வுயிர்களும் இல்லதவ் வோங்கல். (5)

இத்தகைய இயற்கை வனப்பு எய்தப்பெற்ற இமயமலையின் சிறப்பை என்னென்று எடுத்துக் கூறுவது! இவ்வுலகிலுள்ள உயர்வரைகள் எவற்றினும் உயர்ந்து ஓங்கிய கொடுமுடியை யுடையது இமயமலையே. இமயமலை என்னும் அளவில் இதயம் குளிர்கின்றது; பெருமிதம் பெருகுகின்றது; மகிழ்ச்சி மலிகின்றது.


இமயமலை, இந்து தேசத்தின் வடவெல்லையாக அமைந்துள்ளது. அது, மேற்குக்கோடி முதல் கிழக்குக் கோடி வரையில் ஆயிரம் மைல் நீண்டுள்ளது. 20,000 அடிக்குக் குறையாத உயரமுள்ள ஒரே தொடர் ஆயிரம் மைலுக்கும் பரவி யிருக்கின்றது!

இமயமலையின் அடிவாரத்தில் உள்ள அடர்ந்த காடுகளில் வாழும் மாந்தர், அம் மலை, ஆங்காங்கே உயர்ந்திருப்பது கண்டு, வானளாவிய அதன் கொடுமுடிகளை உற்று நோக்கி,

'இவைதாமோ வானத்திற்குச் செல்லும் வழி' என்று நினைத்து வியப்புறுகின்றனர். இத்தகைய பெருமலையின் மாண்பை நாம் ஒரு சிறிதேனும் உணர்ந்துகொள்வது நமக்குற்ற கடமை யன்றோ!

இமயமலையின் அடிவாரம் முழுதும், 20 மைல் அகலமுள்ள தாழ்வரையாகும். மலைமேற் பெய்யும் மழைநீரெல்லாம் திரண்டு புரண்டு ஓடிவந்து, அத் தாழ்வரையில் வீழும். அதனால், அந் நிலமெல்லாம் சதுப்புநில மாகவே இருக்கின்றது. வசந்த காலத்தில் சூரிய கிரணம் உறைக்க உறைக்க, அழகிய செடிகள் அடர்ந்து வளர்ந்து, தரையை மூடிக்கொண்டு, மாந்தர் நடந்து செல்ல வழியில்லாமல் செய்துவிடும். அப்போது அங்கு இருள்மூடி, எவர்க்கும் அச்சத்தை விளைவிக்கும். அன்றியும், சிற்சில காலங்களில் அங்கே ஒரு வகையான ஆவி உண்டாக, அதனால் உயிர்ச்சேதமும் நேரும். யானை புலி முதலிய காட்டுவிலங்குகள் அனைத்தும் அங்கே உண்டு.

அத் தாழ்வரையினின்றும் மேலோங்கி விளங்குகின்ற மலைத்தொடரின் காட்சிகள் மனத்தில் வியப்பை உண்டாக்கும். அங்கே பலப் பல கணவாய்களும் கொடுமுடிகளும் காண்கின்றன. அந்த இடங்கள் அனைத்தும் உயரிய மரங்கள் அடர்ந்த காடாகவே யிருக்கும். கங்கைக்கரையின் இரு மருங்கிலும் தேவதாரு



முதலிய சிறந்த மரங்கள் செறிந்து விளங்கும். பல வகையான அழகிய புற்களும் பூண்டுகளும் பூஞ்செடிகளும் அடர்ந்து தோன்றும்.

இவ் வகையான அடுக்குநிலத்துக்குமேல் பெரிய மலைத்தொடர்களும், வெள்ளிய பனி மூடிய கொடுமுடிகளும் பற்பலவாக அடர்ந்து, காட்சிக்கு இனிமையாக விளங்கும். இடையிடையே கணவாய்களும் நீரோடைகளும் காண்கின்றன. அவற்றைக் காணின் மனத்தில் கலக்கமே யுண்டாகும்.

அதற்குமேல் மேடும் பள்ளமும் பாறைகளும் செறிந்து, பருக்கைக் கற்களும் முட்செடிகளும் அடர்ந்து, நடந்து செல்வோர்க்கு இன்னல் விளைக்கும். அங்கு நின்று பார்த்தால் மிக்க ஆழமான பள்ளத்தாக்குக்களும் பாறைகளுமே புலப்படும். உச்சியினின்றும் பெருங் கற்கள் உருண்டு புரண்டு கீழே வந்து விழும். சில இடங்களிலிருந்து ஊற்றுச் சுரந்து வெள்ளிய அருவியாகப் பாயும்.

2. இமய மலை - II

இமய மலையின் இயற்கை அமைப்பை உற்றுநோக்கினால், அதனை மூன்றாகப் பிரிக்கலாம். அடிவாரந் தொடங்கி 5,000 அடி உயரம் வரையில் முதற் பிரிவாகும். அங்கே ஞாயிற்-

றின் ஒளி நன்கு உறைப்பதனாலும், மழை ஒரே நிலையாய்ப் பெய்வதனாலும் மரம் செடி கொடிகள் மிகச் செழிப்பாய் வளர்கின்றன. அம் மலையின் அடிவாரத்திலுள்ள நேப்பாளம் முதலிய நாடுகளில், கோடைக் காலத்தில் நெற் பயிரும், மாரிக் காலத்தில் கோதுமைப் பயிரும், செழிப்புற வளர்ந்து பலன் தரும். மா பலா முதலிய மரவகைகள் அங்கே வளர்வதில்லை. ஐரோப்பிய நாட்டுக் காய்கறிகளும், இந்நாட்டுக் காய்கறிகளும் செழிப்புற விளையும். அப் பகுதியில் பனி அவ்வளவாக இராது.

அப் பகுதிக்குமேல் 9,000 அடி வரையில் இரண்டாம் பிரிவாகும். அங்கு, மாரிக்காலத்தில் பனி மிகுதியாகப் பெய்து தோய்ந்து கிடக்கும். வெயிற்காலம் வந்த பின்னர், அப் பனிக் கண்டங்கள் உருகத் தொடங்கும். மரவகைகள் அனைத்தும் மிகச் செழிப்பாக வளரும். நெற்பயிரும் கோதுமைப் பயிரும் நீரோடைகளின் அருகிலும் கணவாய்களிலும் மிக்க செழிப்பாய் விளையும். உயர்மரங்களெல்லாம் ஒரே நிலையாயிராமல், காலத்துக்குத் தக்கவாறு, செழித்தும் சிதைந்தும் மாறிப்போகும்.

மேற்குறித்த அளவுக்கு மேற்புறமெல்லாம் மூன்றாம் பிரிவாகும். அப் பகுதி முழுவதும், எப்போதும் பனிதோய்ந்து மூடிய பாகமேயாகும். ஆனி, ஆடி மாதங்களில் அப் பனி உருகி ஓடத் தலைப்படும்.

இமய மலையின் தொடரில் பற்பல பறவைகளும் விலங்குகளும் வாழ்கின்றன. ஓரிடத்தில் காணும் விலங்குகளை மற்றோரிடத்திற்காண்பது அரிது. காட்டு விலங்குகளுட் சிறந்த யானை, புலி, காடி முதலிய விலங்குகள் அடிவாரங்களில் மட்டும் காண்கின்றன. காட்டுப்பூனை, காட்டுப் பன்றி முதலிய விலங்குகளே, அவ்விடத்திற் செய்யும் அப் பயிர்களை நாசஞ் செய்கின்றன; வரையாடுகள் பாறைக்குப் பாறை தாவிக் குதிக்கின்றன; மான்கள் மந்தை மந்தையாக



மேய்கின்றன. அவற்றுள் கஸ்தூரிமான் மிகச் சிறந்தது. அவை, மாந்தர் அணுகுதற்கரிய பாறைகளின் உச்சியில் பெரும்பாலும் வாழும். அவற்றிற்கு மிக்க குளிர்ச்சியான இடமே


வேண்டும்; வெப்பம் மிக்க இடங்களில் அவை வாழமாட்டா.

பற்பல விதமான பறவைகள் இமயமலையில் வாழ்கின்றன. ஒருவகைப் பறவை, வேட்டைக்காரர்களுக்கு அருகில் நின்று அகப்படுவதுபோற் காட்டி, அக் காடு முழுதும் ஓடித்திரிந்து, அவர்களை அலையச் செய்யும். அவை பறப்பது அருமையாதலால், துப்பாக்கியாற் சுடவும் முடிவதில்லை; மலையடிவாரங்களில் மயில்கள் தம் தோகைகளை விரித்து அழகாக ஆடாநிற்கும்; கழுகுகள் செங்குத்தான மலையுச்சிகளில் கூடுகட்டி வாழும்.



இமய மலையில் வாழுங் குடிகள் பசுக்களையும் காட்டு எருமைகளையும் காப்பாற்றிப்

பிழைக்கின்றனர். வெள்ளாடு, செம்மறியாடு முதலியவற்றை அன்னார் மிக்க அருமையாகப் போற்றி வளர்க்கின்றனர். அவை சாமான்களைக் கொண்டுபோகப் பெரிதும் பயன்படுகின்றன. மூட்டைகளைச் சுமந்து செல்ல, அவ்வாடுகளாலன்றி வேறு எவற்றாலும் ஆகாது. ஆட்டின் மயிர் அழகிய கம்பளம் நெய்ய மிக்க பயனுடையதாம். அங்கு வேறொரு வகையான ஆடும் உண்டு. அது நீண்ட கால்களையுடையதாய், வலிமை மிக்கதாய், பெருஞ் சுமையைச் சுமந்துசெல்லக் கூடியதாய் இருக்கின்றது.



இமயமலையில் 20,000 அடி உயரமுள்ள கொடுமுடிகள் பற்பல உண்டு. அவற்றுள்

26,826 அடி உயரமுள்ள தவளகிரி என்னும் முடியும், 28,156 அடி உயரமுள்ள காஞ்சனசிருங்கம் என்னும் பொற்கோடும், 29,002 அடி உயரமுள்ள கொடுமுடியும் மிகச் சிறந்தவை. அக்கொடுமுடிக்கு 'மலையரசி மணிமுடி' என்று திபேத்தியர் கூறுவர். அங்கிலேயர் அதனை, 'எவெரெஸ்ட்டு' என்பர். எவரெஸ்ட் (Sir George Everest) என்பவர், இந்தியாவில் பூமியளவையில் பெரிய உத்தியோகத்தில் (Director General of Survey) இருந்தார். முதலில் இம் முடியை அவர் காலத்திற் கண்டுபிடித்தனால், அவர் பெயரே இம் முடிக்கு ஏற்பட்டு வழங்குகிறது.

தவளகிரி எப்பொழுதும் பனி மூடிய முடியுடையதாதலால், அதன் வெண்ணிறத்தை நோக்கி, அதனை அப் பெயரால் வழங்குகின்றனர். 'காஞ்சன சிருங்கம்' என்னும் வடமொழிப் பெயருக்குப் 'பொற்கோடு' என்பது தமிழ்ப் பெயர். இதனை அங்கிலேயர் கிஞ்சின்ஜிங்கா (Kinchinjinga) என்பர்.

இமயமலையில் ஆங்காங்கே நாடுகளும், நகரங்களும், சிற்றூர்களும் அழகுற விளங்குகின்றன. அவற்றுள் அடிவாரத்தி லிருப்பது நேபாளம் என்னும் ஒரு திவ்விய தேசமாகும். அதற்குமேல் சிறிது உயரத்தில் ராமசிராய் என்னும் ரம்மியமான தேசம் ஒன்று உண்டு. அங்கே பயிர் பச்சைகள், சிற்றூர்கள்தோறும் செழிப்பாய் வளர்கின்றன. அதற்கு மேல்

கண்ணுக்கு இனிய காட்சியைத் தருவதாகிய காஸ்மீர தேசம் விளங்குகிறது. அதற்குத் தலைநகராகிய ஸ்ரீநகர் என்னும் திவ்விய க்ஷேத்திரம் சிறந்து விளங்குகின்றது. அதற்குமேல் நெடுந்தூரம் வரையில் நாடுகள் கிடையா.

இமய மலையின் வழியாக திபேத்து தேசத்திற்குப்போவது மிக்க வருத்தமான செயலாகும். ஒவ்வோரிடத்தில் 20,000 அடி உயரமும் ஏறும்படி நேரிடும்; பல அருவிகளையும் கணவாய்களையும் கடந்து செல்லவேண்டும். கணவாய்களின் இருபுறங்களில் வானளாவிய வரைகளே எல்லையாக நிற்கின்றன. வழிகளில் பெரும் பாறைகள் உருண்டு புரண்டு எப்பொழுதும் விழுந்து கொண்டே யிருக்கும். சில வேளைகளில் அக் கற்கள் இடையிடையே குவிந்து, செல்வோர்க்கு இடையூறாக நிற்பதும் உண்டு. அவை ஆற்று வழிகளை அடைத்துக்கொண்டு, தண்ணீர் ஓடாமல் தேங்கச் செய்யும். வழியிலுள்ள மரங்கள் அடியோடு பெயர்ந்து தலைகீழாய் வீழ்ந்து கிடக்கும்; இவ்வாறான இடையூறுகளை யெல்லாம் கண்கூடாகக் கண்டும், பலர் மனந் துணிந்து அவ் வழியே நடந்து செல்லுகின்றனர்! திபேத்து தேசத்திற்குச் செல்லுவதென்றால் எவ்வளவு இடையூறுகள் உண்டென்பதை இதனா லறிந்துகொள்ளலாம்.

இடையூறுகள் ஒருங்கே கூடிய இவ்வழியில் நடப்பவர்களுக்கு வேறொரு வகையான


இன்னலும் உண்டாகும். காற்று, சில வேளைகளில் கடுங்காற்றாகவும் கொடுங்காற்றாகவும் மாறி வீசும்; வழிப்போக்கர் அவ்விதக் காற்றை உட்கொள்வதனால், அவர்களுக்கு ஒரு விதமான நோய் உண்டாகும். அதனால் அன்னார் பெருமூச்சு விட்டு மேல்மூச்சு வாங்கி, இரண்டு மூன்று அடிக்கு ஒரு முறை நின்று நின்று நடந்து செல்லுவர். சில வேளைகளில் வாயினால் இரத்தமுங் கக்குவர்; அதற்கு மருந்தே கிடையாது. அங்கு ஒரு விதமான மலர் உண்டு. அது நஞ்சுத்தன்மை வாய்ந்தது. அதன்மேல் வீசிவரும் காற்றை உட்கொள்ளுவதனால் அவ்விதமான தீங்கு நேருகின்றது. அம் மலரை எடுத்து மோந்து பார்த்தால், அதற்கு எவ்வித மணமும் இல்லையாம்.

இத்தகைய இமய மலையில் மாந்தர்க்கு இன்பம் விளைவிக்கத்தக்க இடங்கள் இரண்டு உள்ளன. அவை, வட இந்தியா முழுதும் வளம் பெறச் செய்யும் கங்காநதி தோன்றும் இடமும், யமுனா நதி தோன்றும் இடமும் ஆகிய இவ்விரண்டுமே யாம். அந்த இடங்களில்மட்டும், மேற் கூறிய நோய் முதலிய இன்னல்கள் உண்டாதல் இல்லை.

3. காசி நகரம்

காசி என்னும் சொல்லுக்கு, பிரகாசம் உள்ளது, ஒளி உள்ளது, சிறப்புள்ளது என்பது பொருள். இதற்கு வாரணாசி என்னும் பெயரும் வழங்கி வருகின்றது. வாரணை அசி என்னும் இரண்டு ஆறுகளுக்கு இடையே காசி நகரம் அமைந்திருத்தலினால், அப் பெயர் பெற்றது. காசியரசர்களின் பழைய கோட்டை, கங்கையோடு வாரணை கலக்குமிடத்தில் முற்காலத்தில் அமைந்திருந்தது; இப்பொழுது, அது, கங்கையின் எதிர்க் கரையில் இயன்றுள்ளது.

காசி நகரம் மேன்மையுற்று விளங்கும் புண்ணிய நகரங்களுள் ஒன்று. இது வெகு காலத்திற்கு முன்னரே விளக்கம் பெற்றிருந்ததென்று சொல்லுதற்கு ஆதாரம் பல உள. பல புராணங்களிலும் காசியின் சிறப்பைப் பற்றிப் பலபடச் சொல்லி யிருப்பது ஒன்று. கௌதம புத்தருடைய காலம் சுமார் இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது; அக் காலத்திலேயே காசி நகரம் நல்ல நிலையில் விளங்கியிருந்ததென்பது திண்ணம். அதற்கு முன்னர் அஃது எவ்வளவு காலமாக அவ்வாறு இருந்ததென்பதை அறுதியிட முடியாது. பாபிலோன் நகரத்தின் சிறப்பு, பரந்து விளங்குவதற்கு முன்பே, ஏதன்ஸ் நகரம் ஏற்றம் பெறுவதற்கு முன்பே, உரோமாபுரி உயர்-



வடைவதற்கு முன்பே, காசி நகரம் சிறந்த நிலையில் இருந்ததென்பதற்கு ஐயமே இல்லை. எகிப்து தேசத்து பிரமிட் கோபுரங்கள் ஏற்படுவதன் முன்னரே காசி நகரம் விளக்கம் பெற்றிருந்தது என்று கூறலாகும். அத்தகைய நகரங்களும் வரவர நிலைகுலைந்து போகவும், இக் காசி நகரமோ எந்நாளும் ஏற்றம் பெற்று விளங்குவது சிறப்பினும் சிறப்பே யன்றோ!

ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த சீனதேசத்துப் பெரியார் ஒருவர் அக்காலத்தில் காசியைப்பற்றி வரைந்திருக்கின்றார்; அஃதாவது: ‘கங்கைக் கரையை அடுத்தும் அதற்கு மேற்கிலும் ஆறு மைல் நீளமும் இரண்டு மைல் அகலமும் உள்ள ஒரு சிறந்த நகரம் உண்டு. அதில் பதினாயிரத்துக்கும் மிகுதியான வீடுகள் அடங்கி யுள்ளன. ஜனத்தொகை அதிகம்; வர்த்தகர் பலர்; மாந்தர் நாகரிகமும் நல்லொழுக்கமும் வாய்ந்தவர். ஏறக்குறைய எல்லோருக்கும் எழுதப் படிக்கத் தெரியும். நிலவளம் சிறந்தது. அங்கே சற்றேறக் குறைய நூறு கோயில்கள் உள; உலகப்பற்றை அறவே ஒழித்து, கடவுளைத் தம் மனத்தில் எண்ணித் தொழுதுகொண்டு பதினாயிரத்துக்கும் மிக்க துறவிகள் இங்கே வதிகின்றனர்’ என்பதாம்.

இப்போது அஃது 1,200 யாண்டுக்கு மேலாகியும், அக் காசி நகரம் சிறப்பும் செல்வமும் சிறிதும் குறையாமல் விளங்குகின்றது.

இவ்வளவு மேன்மைக்கும் காரணம் கங்கா-நதியே யாகும்.

மெக்காலே என்னும் சரித்திர ஆசிரியர் காசியைப்பற்றிச் சொல்லியிருப்பது எக்காலத்-தும் பொருந்துவதாகும்: 'குடித்தொகையிலும், செல்வப் பெருக்கிலும், நல்லியல் நற்செயல்-களிலும் காசி நகரம், ஆசியாக் கண்டத்தின் சிறந்த நகரங்களுள் ஒன்று. அங்கு மாந்தர் எப்போதும் திரளாக நிறைந்திருப்பர்; தெருக்-களினின்றும் கங்காநதியில் ஸ்நானம் செய்யும் இடங்களுக்குக் கட்டியுள்ள கற்படிகள், மக்கள் நடப்பதனல் தேய்ந்து போகின்றன. அங்கே உள்ள கோயில்களுக்கும் கல்விச் சாலைகளுக்-கும் இத் தேசத்தின் பல நாடுகளிலிருந்து மக்கள் திரள்திரளாக வருகின்றனர். காசியில் உயிர் நீத்தால் மோட்சம் கிடைக்கும் என்று பலர் அங்கே வந்து வசிக்கின்றனர். வர்த்-தகப் பொருள்களை ஏற்றிக்கொண்டு போக, கங்கா நதியில் வந்து தங்கும் கப்பல்களுக்கு அளவேயில்லை' என்று புகழ்ந்து பேசுகின்றார்.

காசி நகரில் பழமையான கட்டடங்களைக் கட்டினவர், அவை நெடுங்காலம் நிலைத்திருக்-கும் வண்ணம், கருங்கல்லினலும் செங்கல்லின-லும் வேலைப்பாடுள்ள பற்பல விஹாரங்கள் கட்டியிருக்கின்றனர். ஒவ்வொரு செங்கல்-லும் பதினெட்டங்குல நீளமும், பதின்மூன்றங்-குல அகலமும், மூன்றங்குல கனமும் உள்ளது.

இந்துக்களுடைய பழமையான கோயில்களும் குளங்களும் கிணறுகளும் இன்ன காலத்தில் ஏற்பட்டவை என்று திட்டமாகச் சொல்ல இயலாது. அவை யனைத்தும் கௌதமபுத்தர் காலத்துக்குமுன் ஏற்பட்டவை என்னலாம்.

காசியில், நாகக் கிணறு என்னும் அற்புதமான வாவி யொன்று உண்டு; அது நாற்புறத்தும் கற்களால் செங்குத்தாகக் கட்டப்பட்டுள்ளது. அதன் நடுவில் சதுரமான பிள்ளைக்கிணறு ஒன்று அமைந்திருக்கிறது. அங்கிருந்து பன்னிரண்டு படி இறங்கினால், தண்ணீரைத் தொடலாகும்; அதன் உள்ளும் ஒரு கிணறு உண்டு; அதன் வழி, இருப்புச் சட்டத்தினால் மூடப்பெற் றிருக்கின்றது.

அவுரங்கஜேப் என்னும் மொகலாய சக்கரவர்த்தி ஒரு பெரிய கோயிலை இடித்து, ஒரு பள்ளிவாசலைக் கட்டியிருக்கின்றான். விக்கிரம சகாப்தம், 750 (கி. பி. 1683) இல், பட்டத்துக்கு வந்த ஜயசிங்கு என்னும் காசியரசன் கட்டிவைத்த ஜோதிஷமண்டபம் ஒன்று அங்கு விளங்குகின்றது. அவன், கணிதசாஸ்திரத்தில் தேர்ச்சியுள்ளவனா யிருந்தது கண்டு, டில்லிச் சக்கரவர்த்தி, அனுபவத்திற்குப் பிசகாயிருந்த பஞ்சாங்கத்தைத் திருத்துமாறு அவனைக் கேட்டுக்கொள்ளவே, அவன் அதற்கு இணங்கி, டில்லி, வடமதுரை, அவந்தி (உஜ்ஜயினி), ஜயபுரம், காசி ஆகிய இவ்விடங்களில் ஜோதிஷ

உப்பரிகைகள் கட்டுவித்து ஆராய்ச்சி செய்தான். காசியில் மானஸ சரோவரம் என்னும் தடாகமும் அவனால் நிருமிக்கப்பட்டதாம்.

முற்காலத்தில் காசிக்கு யாத்திரை செய்வதென்றால் அதிக கஷ்டசாத்தியமான காரியம். இப்போது புகைவண்டி யேற்படவே, அஃது எளிதில் முடிகின்றது. இத்தேசத்தின் பற்பல நாடுகளினின்றும் மாந்தர் திரளாகச் சென்று அங்கே கூடுகின்றனர்.

காசி நகரத்தின் வீடுகள் பல அடுக்குக்களை யுடையனவாய், ஒன்றோடொன்று நெருங்கியிருக்கும். தெருக்கள் அனைத்தும் நெருக்கமானவை, ஒழுங்கற்றவை. அங்கே ஒரு வீடு கட்டுவதென்றால் பெரும்பொருள் செலவாகும். ஆதலால், ஒரு வீட்டில் பத்துப் பன்னிரண்டு குடும்பங்கள் வசிப்பது வழக்கம்.

இந் நகரத்தில் வர்த்தகம் விசேஷம்; காசிப் புடவை, காசித் துப்பட்டா முதலிய உடை வகைகளும், பொன், வெள்ளி முதலிய உயரிய உலோக வகைகளும், நவரத்தின வகைகளும் விசேஷமாய் விலையாகின்றன.


கங்கா தீரத்தில் ஸ்நான கட்டங்கள், படித்துறைகள், ஜபமேடைகள், தர்மசாலைகள், அன்ன சத்திரங்கள் முதலியவை எண்ணிறந்தனவாய் இயன்றுள்ளன.

4. பொன்னிறக் கல் பூமி

புதிய உலகம் என்று பெயர் பெற்று விளங்கும் அமெரிக்காக் கண்டத்தில், ஐக்கிய மாகாணம் என்னும் நிலப்பகுதி ஒன்று உண்டு. அங்கே ஒயோமிங் (Wyoming) என்னும் நாட்டின் வட மேற்கு மூலையில், 3,300 சதுரமைல் பரப்புள்ள 'பொன்னிறக்கல் சிங்கார வனம்' (Yellow Stone Park) என்னும் ஒரு பகுதி இருக்கின்றது. அது 'பெரும்பாலும் மலைநாடு; அந்நாட்டில் கல்மலை (Stone Rock) என்னும் மலைத்தொடர் ஊடுருவிச் சென்று, சில யாறுகளைக் கிழக்கு முகமாகப் பிரிந்தோடச் செய்கின்றது. அந்தச் சிங்கார வனம், இப்பொழுது அமெரிக்கர்களுக் கெல்லாம் சுகாதாரமான இடமாக ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கர் அங்கே சென்று தங்கி, பெரிதும் இன்புறுகின்றனர். 1,800 யாண்டுகளுக்கு முன், காட்டு மனிதர் சிலரும், வேட்டை யாடுவோர் பலரும் வாழ்ந்திருந்தனரே யன்றி, மற்றையோர் எவரும் அவ்விடத்தைக் கண்டிலர்.

பொன்னிறக்கல் பரவி யிருந்த சிங்கார வனத்தைக் கண்டுபிடிக்கப் பலர் பல முறை சென்று பாடுபட்டனர்; பட்டும், பயனில்லாமற் போயிற்று. முடிவில் ஐக்கிய மாகாணத்து அதிகாரிகள், மிக்க திறமைவாய்ந்த படைகளை அனுப்பி, அதனைக் கண்டுபிடிக்கச் செய்தனர். அதன் பின்னர், அங்கே பாயும் ஆற்றின்



பொன்னிறக் கல் தடாகம்

தலைப்புறத்தைச் சார்ந்த இடங்களிலெல்லாம் தாதுவர்க்கம், மூலவர்க்கம் முதலிய பற்பல பொருள்கள் நிறைந்து கிடப்பதைக் கண்டனர். புதுமையான காட்சிகள் பற்பல ஆங்காங்கே பொருந்திபிருந்தன. அதனால், ஐக்கிய நாட்டின் அதிகாரிகள் ஓர் உத்தரவு பிறப்பித்தார்கள். அஃதாவது: 'இந்த இடத்தை எவரும் சுவாதீனஞ் செய்துகொண்டு, இங்கே குடியேறக் கூடாது; ஆயினும், அவரவர் சௌக்கியத்திற்காகவும் விநோதத்திற்காகவும் இங்கே வந்து வசித்துப் போகலாம்' என்பதாம்.

அந்தச் சிங்கார வனம் எவர்க்கும் பொது; அவ்விடத்தில் கிடைக்கும் பொருள்களை அங்கேயே அநுபவிக்கலாமே யன்றி, எவரும் எதையும் எடுத்துப் போதல் கூடாது. இந்த ஏற்பாடுகளை யெல்லாம் கண்காணித்து வர, அங்கே அதிகாரி ஒருவனை நியமித்திருக்கின்றனர். எவரேனும் அங்கு வசிக்க விரும்பினால், 10 வருடங்களுக்கு மேற்படாமல் இடம் கொடுக்கப்படும்; அதற்குக் குடிக்கூலி யுண்டு. அந்த வருமானத்தையும், விளைபொருள்களால் வருந், தொகையையுங் கொண்டு, அச் சிங்கார வனத்தைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர்; நீர்நிலைகளிலுள்ள மீன் முதலிய உயிர்களையும், காட்டிலுள்ள விலங்குகளையும் எவரும் பிடிக்காமலும், வேட்டையாடாமலும் இருக்க அதிகாரிகள் பாதுகாத்து வருகிறார்கள்.

அவ்விடத்திற்குச் சென்றிருந்த செல்வர் ஒருவர், அடியில் வருமாறு எழுதி யிருக்கின்றார்: 'பற்பல வகையான புதிய காட்சிகள் அனைத்தும் ஒருங்குகூடி யமைந்துள்ள சிங்கார வனம் ஒன்று ஒயோமிங் நாட்டில் விளங்குகின்றது; அது, காட்சியாலும், கனிஜவர்க்கங்களாலும் பெரிதும் சிறப்புற்றுத் திகழ்கின்றது; சிற்றாறுகள் நாற்புறத்தும் பாய்கின்றன; பேராறுகள் பெருகி ஓடுகின்றன; பறவைகளும், விலங்குகளும் பற்பல வகையினவாகக் காண்கின்றன. அதன் பெருமையை எடுத்துரைக்க எவரால் ஆகும்!'

அம் மலைநாடு கடல் மட்டத்திற்கு 6,000 அடிக்கு மேற்பட்டதா யிருக்கும். அஃதாவது, நீலகிரியில் கூனூர் (Coonoor) என்னும் நகரத்தின் உயரம் உள்ளதாம். அங்கே பனி மூடிய மலையுச்சிகளும், கானாறுகளும், நீர்வீழ்ச்சிகளும், தடாகங்களும் விளங்குகின்றன. எரிமலையின் காட்சியும் அங்கே உண்டு.

பொன்னிறக் கல் தடாகம் (Yellow Stone Lake) என்னும் ஒரு நீர்நிலையின் காட்சியே இப் பாடத்தின் முகப்பில் படமாகக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு பொதுவான நந்த வனங்கள் பலவற்றை ஐக்கிய மாகாணத்து அதிகாரிகள் ஆங்காங்கே ஏற்படுத்தி யிருப்பது பெருஞ் சிறப்பினதன்றோ!

5. ஸர் ஜம்ஸேட் ஜி ஜிஜீபாய்

பம்பாய் நகரில், வர்த்தகர்க்குள் சிரோமணி-யாய், பெருங் கொடையாளியாய் விளங்கிய ஜம்ஸெட் ஜி ஜிஜீபாய் என்பவர் ஒருவர் வாழ்ந்-திருந்தனர். அவர், 1783 - ஆம் ௵ ஜூலை ௴ 5௳ பம்பாய் நகரில் பிறந்தவர். அவருடைய பெற்றோர், தம் மதக்கோட்பாட்டிற்கு, மனோ-வாக்குக் காயங்களினால் சிறிதும் மாறுபடாமல், மிக்க தூய்மையராய் விளங்கி யிருந்தனர்.

ஜிஜீபாய்க்கு 16 - ஆம் வயது நிரம்பு முன்னரே, தாய் தந்தையர் காலஞ்சென்றனர். அக்காலத்தில் அவரது நிலை மிக்க எளியநிலையா-யிருந்தது. அவரை வழிப்படுத்தி, முன்னுக்குக் கொண்டுவர அங்கு எவரும் இலர்.

ஜிஜீபாய் ஒரு சீமாட்டியை மணம் புரிந்து, அவள் தந்தையின் உதவியினால், வியாபாரத்-தில் மிக்க தேர்ச்சி பெற்றனர்; வர்த்தகத்-திற்கு வேண்டிய கல்வியை மட்டும் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டனர். பின்னர், அவர் இங்கிலீஷ் பாஷையும் சிறிது பயின்றனர்.

ஜிஜீபாய் முதல் முதலில் புட்டி வர்த்-தகம் செய்யத் தொடங்கினர். அக்காலத்தில் அவ் வர்த்தகமே வருவாய்க்கு வாய்ப்புடைய-தாகப் புலப்பட்டது. அதனால், அவர் புட்டி வர்த்தகம் செய்யவே, அவருக்குப் 'புட்டி வர்த்-தகர்' என்ற பெயர் வழங்குவதாயிற்று.

புட்டி வர்த்தகம் கைகூடி வந்தமையால், சிறிது காலத்தில் அவருக்கு 120 ரூபாய் லாபம் கிடைத்தது. அவர் அதனை எடுத்துக்கொண்டு, வர்த்தகத்தை விருத்தி செய்யக்கருதி, கல்கத்தா நகரத்திற்குச் சென்றனர்.

அந்த முதற்பணம் ஓர் யாண்டில் 180 ரூபாய் ஆகவே, அதை எடுத்துக்கொண்டு திரும்பவும் பம்பாய் நகரம் வந்து சேர்ந்தனர். அவ்விளவயதிலேயே, அவர், மிக்க உண்மையாளர் என்றும், உழைப்பாளி என்றும் பெயர் பெற்றனர். அதனால் பலர் அவருக்குக் கடனாகப் பொருள் கொடுக்க உடன்பட்டனர்.

அவர் தம் மாமனார் சேர்த்துவைத்திருந்த தொகையினால், அவருக்குத் திரண்டசெல்வம் கிடைத்தது. கிடைக்கவே, அவர் சீனதேசத்துக்கு நான்கு முறை யாத்திரை செய்தார். அவர் கருதிச் சென்ற காரியமெல்லாம் கைகூடிவந்தன. கடைசிமுறையாக அவர் சரக்குக்களைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு வருகையில், அக் கப்பலைப் பிரஞ்சு நாட்டார் மடக்கிக் கொண்டனர்; அதனால், அவர் தம்சரக்குக்களையெல்லாம் இழந்து, தாமும் சிறைப்பட்டார். அங்கே தங்கியிருந்த டச்சுக்காரரும், அங்கில அதிகாரி ஒருவரும், அங்கிலப் பெண்டிர் சிலரும் முன்னின்று முயன்று, ஜிஜீபாயை விடுவித்து, அவர்தம் நாட்டுக்குச் செல்லும்படி அவரை அனுப்பினர். அவர் கடவுளைப் பெரி-

தும் வாழ்த்திக்கொண்டு, கல்கத்தா நகரத்தை அடைந்து, அங்குநின்றும் பம்பாய் நகரத்தைச் சென்று சேர்ந்தனர். மறுபடியும் சில நாள் கழித்து அவர் சீனுவுக்கு யாத்திரை செய்து, திரும்பி வந்து, பம்பாயிலேயே நிலையாகத் தங்கியிருந்தனர்.

பின்னர், அவருக்கு வியாபாரங்கள் மிகப் பெருகின; பலர் அவரோடு கூட்டுக் கூடி, பற்பல நாடுகளிலும் பற்பல வர்த்தகங்களை நடத்தலாயினர். அவர் அவற்றை யெல்லாம் நேராய்க் கண்காணித்து வந்ததுபற்றி, அவருக்குச் சீருஞ் சிறப்பும் பெருகலாயின. 'இவ்வளவு நம்பிக்கையும் நாணயமும் வாய்ந்த பெருந்தகையை யாம் எங்கும் கண்டதில்லை' என்று அனைவரும் அவரைக் கொண்டாடினர். அதனுல் ஜம்ஸெட் ஜி என்பவர் இந்தியாவில் செல்வத்திற் பிறந்த சீமானுய், வாக்குப் பிசகாத வர்த்தகராய்ப் புகழ்பெற்று விளங்கினர்.

எத்தனையோ நாடுகளில், எத்தனையோ மாந்தர்களிடத்தில் வியாபாரங்களை நடத்தி வந்தாலும், ஜிஜீபாய் வழக்காளியாக ஒரு நாளும் நியாய சபைக்குச் சென்றவர் அல்லர் என்பது எவரும் வியக்கத்தக்க செய்தியாகும். தமக்கு ஒருவர் நியாயம் சொல்லி மத்தியஸ்தஞ் செய்வதையும் அன்னுர் அறிந்தவர் அல்லர். ஆயினும், அவர் தம் உற்றுர் உறவினரிடத்து உண்டாகும் சச்சரவுகளைத் தாமே நடுநின்று

தீர்ப்பார். அவர் உண்மையாளர் என்பதை உணர்ந்து, ஊராரும் அவரிடம் சென்று, அவர் கூறும் தீர்மானங்களை ஒப்புக்கொண்டு உவப்புடன் செல்லுவாராயினர்.

1822 - ஆம் ௵ ஜிஜீபாயின் உத்தம குணமும், உதாரத்துவமும் இவ் வுலகெங்கும் பரவலாயின. உலகத்திற்கு உதவியான அறநெறிகளே அவருக்கு மகிழ்ச்சியை விளைக்கும். அவர், அறநெறியில் பெரும் பொருளைச் செலவிட்டு, தம் எண்ணத்தை இடேற்றி வந்தனர். கல்விச் சாலைகள் பலவற்றை ஏற்படுத்தி, அவற்றைக் கருத்துடன் பாதுகாத்து வந்தனர். அநேக வைத்திய சாலைகளையும், தருமசத்திரங்களையும் கட்டி, அத் தருமங்கள் என்றென்றும் நிலைத்து நடைபெறும் பொருட்டு, நிலையான ஏற்பாடுகள் செய்து வைத்தனர். பாதைகள் அமைக்கவும், வாராவதிகள் கட்டவும், குளங்கள் வெட்டவும் அவர் செலவழித்த பொருளைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது.

இவையே யன்றி, ஏழை மக்களுக்கு உணவு உடை முதலியவற்றை உதவி, அவர் தம் துன்பத்தைத் துடைத்தனர். மற்றையோர் செய்யும் தருமங்களுக்கும் பெருந்தொகை நல்கினர். அன்றியும், துரைத்தனத்தார், உலக உபகாரமாகச் செய்யும் செயல்களுக்கும் பெரும்பொருள் உதவி புரிந்தனர். அவர் செய்த தானதருமங்களைக் கண்டோர்,

'ஐயோ, இவர் இப்படிச் செலவிடுகிறாரே! இப்படியே செய்துவந்தால், சில நாளில் இவரது செல்வம் முழுதும் சிதைந்து போகுமே! உதார குணத்துக்கும் ஓர் எல்லை இல்லையா!' என்று இரங்கிக் கூறுவாராயினர். அவர் ஒருவருக்குந் தெரியாமற் செய்த தானங்கள் பல; அவற்றிற்கு கணக்கே இல்லை என்னலாம். பிரசித்தமான தருமங்கள்மட்டும் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமாகவே இருக்கும் என்று ஒருவாறு கூறலாகும்.

1845 - ஆம் ஸ்ரீ ஸர் ஜேம்ஸ் காரணக் (Sir James Carnac) என்னுந் துரை, இந்நாட்டைவிட்டுத் தம் நாட்டுக்குப் போனபோது, விக்டோரியா மஹாராணியார் முன்னிலையில் ஜிஜீபாயின் உயர்குணத்தையும், உதாரத்துவத்தையும், அங்கில துரைத்தனத்தில் அவருக்கிருந்த ஆதரத்தையும் எடுத்துக் கூறினர். அதுகேட்டுமகாராணியார், பெருமகிழ்வடைந்து, ஜிஜீபாயின் உத்தமகுணத்துக்கும், உதாரத்துவத்துக்கும் அறிகுறியாக 'நைட்' என்னும் பெரும்பட்டத்தை வழங்கினர். அதன் பின்னர், 'பாரோநெட்' என்னும் அரும்பெரும் பட்டமும் அவருக்குக் கிடைத்தது. 1843 - ஆம் ஸ்ரீ மகாராணியார் பொன் முத்திரை ஒன்றைப் பெரும் பரிசாக அவருக்கு அளித்தனர். அதன் ஒரு புறத்தில் வைரங்கள் இழைத்து, இடையே மகாராணியார் உருவம் பதித்திருந்தது; மறுபுறத்தில் 'ஸர் ஜம்ஸெட்ஜி ஜிஜீபாய் உதார-

குணமும் தேசாபிமானமும் உடையவர் என்னும் பெருந்தகைமைக்கு ஓர் அடையாளமாக அங்கிலத் துரைத்தனத்தார் பரிசாக அளித்தது’ என்னும் கருத்தமைந்த அங்கில வாக்கியம் பொறிக்கப்பெற்றிருந்தது.

‘இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை’

செல்வம் அனைத்தும் ஒருசேரத் திரண்டு விளங்கினும், இல்லாள் நற்குண நற்செய்கைகள் இல்லாளாயின், அச்செல்வம் அனைத்தும் அவனுக்கு ஒரு பயனும் செய்யாவாம்; நற்குண நற்செய்கைகள் வாய்ந்த மனைவியை வாய்க்கப் பெற்றவன், ஏதுமில்லாத ஏழையே யாயினும், அவன் எல்லாம் உடையன் என்பர் மேலோர். அது போலவே, ஜிஜீபாய் என்னும் வள்ளலுக்கு வாய்த்த மனைவியார், நற்குணமும் நற்செய்கையும் நன்கு வாய்ந்தவராய், தருமசிந்தை நிறைந்தவராய் விளங்கினார். அவ்வம்மையார் தாமும் பற்பல தரும காரியங்களைச் செய்தனர். ஸால்ஸிட் (Salseete) என்னுந் தீவிற்கும் பம்பாய்நகருக்கும் மாந்தர் போக்குவரவு செய்ய அணையொன்று கட்டும்படி, தாம் அணிந்திருந்த ஆபரணங்களைக் கழற்றிக் கொடுத்தனர். அதனைக் கட்டி முடிக்க 18,000 ரூபாய் செலவாயிற்றாம்.

ஜிஜீபாய்க்கு ‘நைட்’ பட்டம் வந்தவுடனே, அவர் பெற்ற பெருமையைப் பாராட்டுதற்-

பொருட்டு, பாரசீகர் அனைவரும் தங்களால் இயன்ற அளவு பொருள் சேர்த்து, அதை ஜிஜீபாய்க்குக் காணிக்கையாகக் கொடுத்து, அவரை வாழ்த்திப் போற்றினர். பின்னும், அன்னார், 'ஜிஜீபாய் மொழிபெயர்ப்பு நிதி' என அதற்குப் பெயரிட்டு, 'அதன் வருவாயைக் கொண்டு பெரிதும் பயன்படத் தக்க அரிய நூல்களைக் கூர்ஜரபாஷையில் மொழிபெயர்த்துப் பாரசீகர்களுக் கெல்லாம் இலவசமாகக் கொடுக்க வேண்டும்' எனத் தம் கருத்தை அறிவித்தனர். அதுகேட்ட ஜிஜீபாய், 'நீங்கள் கையொப்பஞ் செய்து கொண்டுவந்த தொகையைக்கொண்டு உங்கள் கருத்துப்போலவே செய்வது எனக்கும் விருப்பமே; நம்மவர் கல்வி கற்று நல்லறிவை அடைவது நன்மையே; பம்பாய் நகரிலும், சூரத்துப் பட்டணத்திலும், அவற்றை அடுத்த ஊர்களிலும் உள்ள பாரசீகர்களின் ஏழ்மைத்தனத்தை அறவே ஒழிக்க வேண்டும் என்னும் எண்ணம் என் மனத்தில் நெடுநாளாக உறுதிக்கொண்டேயிருக்கிறது; அதனால், அதற்கு வேண்டிய அளவு பொருள் சேர்த்து, அதற்கு வரும் வட்டியைக் கொண்டு, ஏழைகளது எளிய நிலையைத் தீர்க்கவேண்டும். அன்றியும், ஏதும் அறியாத மூடர்களாய்த் திரியும் வாலிபர்களை, பாடசாலை வைத்துக் கல்வி கற்கச் செய்யவேண்டும் என்பதும் என் கருத்து. ஆதலின், இப்போது 3,00,000 ரூபாய்

மூலதனம் வைத்து, அதைத் தகுதியுள்ளவர்க-ளிடம் ஒப்பித்து விருத்திசெய்து, மேற்சொன்ன இரண்டு காரியங்களையும் நன்கு நடத்தும்படி செய்யவேண்டும்; நீங்களே முதலாளிகளா-யிருந்து, இந்த நற்செயல்களை இடைவிடாது நடத்தி வரும்படி உங்களை வேண்டிக்கொள்ளு-கின்றேன்' எனச் சொல்லி, அப் பெருந்-தொகையை அவர்களிடத்திற் கொடுத்துவிட்-டனர். அத்தொகை போதாதென்று கருதி, தாமும் தம் மனைவியாரும் சேர்ந்து, மற்றும் ஒரு பெருந்தொகை கொடுத்து உதவினர். அத் தொகையைக்கொண்டு ஒரு கலாசாலை ஏற்படுத்தி, அதனைச் சிருஞ் சிறப்பும் பெற நடத்தி வந்தனர்.

பம்பாயில் 1,00,000 ரூபாய் செலவழித்து ஒரு பாடசாலை ஏற்படுத்தி, ஜிஜீபாய் நடத்தி வந்தனர். அன்றியும், ஒரு வைத்திய சாஸ்-திரகலாசாலைக்கு வேண்டுமளவு பொருள்-கொடுத்து உதவினர். அதுவுமன்றி, ஒரு வைத்தியசாலை ஏற்படுத்தி, அதில் இந்து சாஸ்திர விதிப்படி வைத்தியம் நடைபெறச் செய்யவேண்டும் என்று ஏற்பாடு செய்தனர்.

அவர் இறக்குமளவும் அவரது அறநிலை ஒரே நிலையாய் நடந்தது. அப்பெரியார் 1864-ஆம் ௵ ஏப்ரல்௴ 14௳ இவ்வுலக வாழ்வை நீத்தனர். அப்போது அவருக்கு வயது 76.


6. சிலந்திப் பூச்சி

நூல்களைக் கற்பதினாலேயே அறிவு விளக்கம் பெறாது. காட்சிப்பொருள்களைக் கண்டு, கருத்தூன்றி ஆராய்வதனால் அறிவு பெரிதும் விளக்கம் பெறும். ஒரு புதுமையைக் கண்டறிவதனால் மனம் பூரிக்கும்; மகிழ்ச்சி மிகுவதாகும். அதனால் உலகிற்குப் பெரியதோர் உதவியும் புரிந்தவராவோம். கற்றறிவில்லாத மூடனுக்கு அவன் கண்ணிற் காணும் பொருளெல்லாம் சாதாரணமாகவே தோன்றும்; கற்றறிந்த புலவனுக்கு ஒரு துரும்பு அசைவதும் அதிக ஆச்சரியமாகத் தோன்றும். நமது கண்ணுக்குத் தோன்றும் புழு, பூச்சிகளை வெகு அலட்சியமாக எண்ணி விடுகின்றோம். அவற்றை உற்று நோக்கி ஆராய்வதனால், பலப்பல அரிய செயல்கள் தோன்றும் என்பது நமக்குத் தெரிவதில்லை.

ஒரு சிலந்திப் பூச்சியைப் பற்றி ஆராய்வோம். சிலந்தியோ மிகச் சிறிய உயிரேயாயினும், அதனிடத்தே பொறுமையும் உழைப்பும் பொருந்தி யிருக்கின்றன. இந்த இயல்புகள் ஒரு மனிதனிடத்திலிருக்கக் கண்டால், அவனை உத்தமன் என்கிறோம்; உழைப்பாளி என்கிறோம்; சிறந்தமுயற்சியுடையவன் என்கிறோம். அக் குணங்களை இயல்பாகக் கொண்டுள்ள சிலந்திப் பூச்சியைச் சிந்தித்தேனும் பார்க்-

கின்றோமா; இல்லையே. சிந்தித்துப் பார்ப்போமாயின், அதை இழிவானதென்று எண்ண இடமுண்டோ? அதைப்பற்றி ஒரு சிறிது இங்கு ஆராய்வோம்:

சிலந்திப் பூச்சியில் பற்பல வகையுண்டு. அவற்றுள், வீட்டுச் சிலந்தியும் தோட்டச் சிலந்தியும் முதன்மையானவை. வீட்டுச் சிலந்தி, கூரையின் மூலைகளிலும் ஜன்னலின் உட்புறங்களிலும் நூலால் கூடுகட்டிக் கொள்ளுகிறது. தோட்டச் சிலந்தி, செடி கொடிகளில் தன் கூட்டை அமைத்துக் கொள்ளும். அக் கூடு சக்கர வடிவமுள்ளது. அதைக் கண்டால் ரேகாகணித சக்கரமும் பின்னிடைந்துபோம். வெளிப் புறத்திலுள்ள நூல் பெரும்பாலும் வட்டமாயிருப்பதில்லை; முக்கோண வடிவமாகவும் இருக்கும், வண்டிச் சக்கரத்தில் குடத்தினின்றும் குறுக்கே செல்லும் ஆரைகள் போல, இக் கூட்டின் குறுக்கே நூல்கள் செல்கின்றன. சக்கரத்தின் வட்டைகள் போல இடையிடையே சுற்று நூல்கள் வரிசையாகச் சூழ்ந்துகொண் டிருக்கின்றன. இக் கூட்டைப் பார்த்தால் நமக்குப் பெரிதும் வியப்பாகவே இருக்கும்.



சிலந்திக்கு நூல் ஏது? சிலந்தியின் உடலில் ஒருவிதப் பசை யுண்டு; அதைச் சிலந்தி வெளியிடும் போது, காற்றுப்பட, அப் பசை, நூலாகின்றது. அந் நூலைக்கொண்டே சிலந்தி தன் வலையைப் பின்னுகின்றது.

ஈ முதலிய சிற்றுயிர்கள் வலையில் அகப்பட்டுக்கொண்டால், உடனே அந்நூல் அசையும்; சிலந்தி அதனை அறிந்து, நூலின் வழியே ஓடி, ஈ அகப்பட்டுக் கொண்டிருப்பதைத் தன் காலினால் உணர்ந்து, அதைப்பற்றிச் சாரத்தை உறிஞ்சித் திப்பியைக் கீழே உமிழ்ந்துவிடும். சாதாரணமாகத், தோட்டச் சிலந்தியின் கூட்டின்கீழ், இறந்து பட்ட ஈக்கள் விழுந்து கிடப்பதை எவருங் காணலாம். சிலந்தி இரை தேடுகையில், தன் பார்வையைக்காட்டிலும் பரிசவுணர்ச்சியையே பெரிதும் பயன்படுத்தும்.

வீட்டுச் சிலந்தியின் வலையில் ஓர் ஈ சிக்கிக் கொள்ளுமாயின், சிலந்தி அவ்விடத்திற்கு விரைந்து சென்று, அதை வாயினாற் கவ்விப்பற்றி, தான் தங்கியிருக்கும் இருப்பிடத்திற்குக் கொண்டுபோய், அதனைப் புசிக்கும்; அகப்பட்டுக்கொண்ட ஈ மிகப் பெரியதா யிருந்தால், அது நகரவொட்டாமல் வலையில் நன்கு மாட்டிவிட்டு, அது சாகும் வரையில் காத்திருந்து, பின்னர் அதனைப் புசிக்கும்; அது பின்னும் பெரியதா யிருப்பின், வலை அறுந்து சின்னபின்னப்படும் என்று எண்ணி, அந் நூல்களை

அறுத்து, அதனை விட்டுவிடும். தன் இனத்தைச் சார்ந்த ஒரு சிலந்தி வந்து வலையில் சிக்கிக்கொண்டால், கூட்டிலுள்ள அச் சிலந்தி அதனைத் துன்புறுத்துவதேயில்லை. வலையின் நூல்களுள் ஒவ்வொன்றையும் தன் கால் நகங்களால் பற்றி அசைக்கும். சிக்கிக்கொண்ட சிலந்தி உடனே விடுபட்டு ஓடிப்போகும்.

அவ்வாறு ஓடாமல் நிலைத்து நிற்குமாயின், அது தன்னோடு போர்செய்ய வந்திருக்கிறது என்பதை உணரும்; பின்னர், அவ்விரண்டும் தம் கால்களைப் பரப்பிக்கொண்டு எதிரெதிராக நின்று, உறுமிப் பார்த்துப் போர்செய்யத் தொடங்கும். எது, முதலில் மற்றதைக் கடிக்கின்றதோ, அதுவே வெற்றி பெறும். கடிபட்ட சிலந்தி சுருண்டு மடிந்துபோம்.

பூச்சிகளுள் சிலந்தியே, சூதும் வாதும் தந்திரமும் தைரியமும் வாய்ந்தது. அது முட்டையினின்றும் வெளிப்பட்டதுமுதல் தன் வாழ்நாள் முழுவதும் மற்ற உயிர்களைக் கொல்வதிலேயே கருத்துடையது; ஈ முதலிய சிற்றுயிர்களைப் பிடிப்பதற்கே வட்டமான வலை பின்னுகிறது.

சில சிலந்திகள் தம் தோலை உரிப்பதும் உண்டு; அப்போது அவை ஒடுங்கி அடங்கிக் கிடக்கும். இரண்டு மூன்று நாட்களுக்குள், அத்தோல் உரிந்து போகும்; சிலந்தி பளபளவென்று ஒளி வீசிக்கொண்டு அழகாக விளங்கும். மாலை வேளைகளில், தோட்டச் சிலந்தி,

தான் பதிவிருந்த இடத்தை விட்டு வெளிவந்து, கூட்டின் இடையில் அமர்ந்து, கால்களை நீட்டிக்கொண்டிருக்கும் ; ஏதேனும் ஓர் உயிர் வலையில் சிக்கிக்கொண்டால் உடனே அதனைக்கொன்று விழுங்கும் ; மாலைவேளையிலேயே தன் கூட்டின் நூல்களைப் பழுது பார்க்கும். மழைக்காலம் வருவதை அறிந்து, இக்கள் தங்க இடமில்லாமல், தன் வலையில்வந்து அமரும் என்றெண்ணி, அதனைச் செப்பஞ் செய்துகொண்டே யிருக்கும்.

வீட்டுச் சிலந்தியோ நூல்வலையொன்றைக் கட்டிக்கொண்டு, ஏதேனும் ஓர் இ வந்து சிக்கிக்கொள்ளாதோ என்று எதிர்பார்த்திருக்கும். அதனால் அது பட்டினி இருத்தலும் உண்டு. ஒருவகைச் சிலந்தி, பசியால் பரிதபிக்கையில், தம் இனத்துச் சிறு சிலந்திகளைப் பிடித்துக் கொன்று தின்பதும் உண்டு. குதித்துக்குதித்து ஓடவல்ல ஒருவகைச் சிலந்திக்கு வலைபின்ன வேண்டுமென்னும் கவலையே கிடையாது. வலையின்றியே அஃது உணவைத் தேடிக்கொள்ளும். புலி ஆட்டின்மேல் பாய்வதுபோல், அச்சிலந்தி, இக்கு அருகில் தெரியாமற் சென்று, அதன்மேல் பாய்ந்து, பற்றி விழுங்கும்.

இன்னும் எத்தனையோ வகையான சிலந்திகள் உள்ளன. அவற்றின் நுண்ணறிவையும், செயல் வன்மையையும், திறமையையும், ஆராய்வோமாயின், நம் மனத்தில் பெருவியப்பு உண்டாகும்.

சிலந்தியினா லுண்டாகும் பேருதவி என்னவெனின், இக்களை நாசஞ்செய்வதே முதன்மையாகும். இக்களா லுண்டாகும் இன்னல் பெரிது பெரிது! சிலவகைச் சிலந்தி கடிப்பதனால் மாந்தர்க்கு ஒருவித நோய் உண்டாகும்; ஆனால், அது பெருந்தீங்கு விளைப்பதன்று.

---

7. அறிவும் ஆராய்ச்சியும்

ஓபி (Opie) என்னும் துரைமகன் ஓவியத் தொழிலில் தேர்ச்சி பெற்றவன். ஒரு நாள், சிறுவன் ஒருவன் அவனை நோக்கி, 'நிறங்களை எவ்வாறு கூட்டுகின்றீர்?' எனக் கேட்டான். அதற்கு அவன், 'அறிவுகொண்டு கூட்டுகின்றேன்' என்றான். 'இதனை இவ்வாறு செய்கின்றேன், அதனை அவ்வாறு செய்கின்றேன்' என, நிறங்களைக் கூட்டு முறையை எடுத்துக் கூறாமல், 'அறிவினால் கூட்டுகின்றேன்' எனக் கூறியது சரியான முறை யாகுமா? ஓபி அவ்வாறு சொன்னதனால் சிறுவனது அறிவை ஒருவாறு தூண்டியதாகும். அவன், அதனை உய்த்துணர்ந்து முயன்று செய்யச் சிறுவனைத் தூண்டியதே யாகுமன்றோ.

சர் ஜோஷ்வா ரெயினால்ட்ஸ் (Sir Joshua Reynolds) என்பவர் ஒரு நாள் ஓவியத்தைப்

பார்க்கச் சென்றார். அவர் அதைச் சிறப்பித்துப் பேசவேண்டுமென்று முன்னரே கருத்துக்கொண்டு, அதனை முற்றும் உற்றுக் கவனித்து, 'இது சிறந்த வேலைப்பாடுள்ளது; சரிவரவரைந்திருக்கின்றது; நிறமும் செவ்விதாகத் தீட்டப் பெற்றுள்ளது' என்று வியந்து சொல்லினர்; பின்னர், தம் கையைப் பிசைந்துகொண்டே, 'எல்லாம் சரிதான், ஒன்று மட்டும் குறைவாயிருக்கின்றது!' எனத் தம் உள்ளக் கருத்தை வெளியிட்டார். அவ் வோவியத்தில் நல்லியல்புகளனைத்தும் நிறைந்திருந்தும், ஒன்றுமட்டும் இல்லாமையால் அப் படம் சீரற்றதே யாயிற்று.

எட்டி (Etty) என்னுந் துரைமகன் இராசாங்க வித்தியாசாலையில் உபாத்தியாயராக நியமனம் பெற்றான். அவனுக்குமுன் அங்கிருந்தவன் பேச்சித்திறமையும் பேரறிவும் படைத்தவன். அவன், மாணாக்கரை நோக்கி, 'இதை இப்படி எழுதுங்கள்; அதை அப்படிச் சொல்லுங்கள்' என்று கற்பித்து வந்தான்.

பின்வந்த எட்டி என்பவனை நோக்கி ஒரு மாணவன், 'ஐயா, இதனை எப்படிச் செய்வது?' என்று கேட்டான். அதற்கு எட்டி, 'நீ அதனை முயன்றால் செய்யலாம்' என்றான். மற்றொருவன் உபாத்தியாயரை நோக்கி, 'ஐயா, இதன் பொருள் என்ன?' என்றான். அதற்கு எட்டி, 'பிள்ளாய், நீயே அதனை எண்ணிப்பார்' என, சிறுவன், 'பார்த்தேனே' என்றான். உபாத்-

தியாயர் 'மறுபடியும் எண்ணிப் பார்' என உறுத்திக் கூறினர். அவன் நெடுக எண்ணிப் பார்த்து, சொல்லின் பொருளை உணர்ந்தான். அவ்வாறே மாணவர் அனைவரும் தமக்குத் தோன்றும் ஐயங்களை ஆராய்ந்து பார்த்து, அவற்றை நீக்கிக்கொள்ளுவா ராயினர்.

உபாத்தியாயர் தம் மாணவரை நோக்கி, 'செல்வச் சிறுவர்காள், உபாத்தியாயர் என்பவர் மாணாக்கரது அறிவை வளர்ப்பதில் உதவி செய்பவரே யன்றி, கற்பிப்பவர் அல்லர்' என்று எடுத்துக்கூறினர். உழைத்துக் கற்றால் உள்ளது வெளிப்படும். கல்வி என்பது கல்லுவது—தோண்டிப் பார்ப்பது எனும்பொருளது.

மேலே கூறிய ஓபீ என்பவன் கொண்ட கருத்து யாது? ரெயினாள்ட்ஸ் என்பவர் ஒன்று குறை என்றாரே, அஃது என்ன? 'நமக்கு ஒரு செய்தி தெரியாவிட்டால், தெரிந்தவரைக் கொண்டு தெரிந்துகொள்வதை விட்டு, தாமே அதனை எண்ணி எண்ணித் தவறிப்போய் முடிவில் எவரையேனுங் கேட்டுத் தெரிந்து, கொள்வதில் சிறப்பென்ன? முதலிலேயே பிறரைக் கேட்டுத்தெரிந்துகொள்வதே சிறப்பு' எனின், அதனால் நமக்கு அறிவு வளராது.

மனவன்மையும் அறிவும் இல்லாவிடில், மற்ற இயல்புகளிருந்தும் பயனில்லை என்பது ஓபீயின் கருத்து. ஒரு தொழிலுக்குச் சிறப்பும் மேன்மையும் தருவது மனவன்மையும்

அறிவும் ஆகும் என்பதே ரெயினாள்ட்ஸ் என்பவர் கொள்கை. அவர்கள், அறிவு என்றதும், ஒன்று என்றதும் இதுவேயாகும். மனவன்மை என்பது யாது? அறிவு என்பது என்ன? எத்துணையோ தொழில்களிருக்க, ஏதோ ஒரு தொழிலில் மனம் இயல்பாகச் செல்லுதல் மனவன்மை. எந்தத் தொழிலில் எவனுக்கு மனவன்மை யுள்ளதோ அதில் அவன் தேர்ச்சி பெறுகின்றான். ஆயினும், மனவன்மைமட்டும் போதாது; அறிவும் அதற்குத் துணைவேண்டும். அவ்வறிவே எல்லாவற்றையுங் கூட்டி ஒழுங்குபெறச் செய்து நடத்தவல்ல கருவியாம். மனவன்மை உறுதிப்படுவது எப்படி? அறிவைக் கூர்மையாக்குவது எப்படி? என்று கேட்கலாம். மனத்தைப் பற்பல வழிகளாலும் வளர்த்து உறுதியடையச் செய்து சரியான ஒரு நிலையில் நிறுத்திக்கொள்ள வேண்டும். அஃது எப்படி?

சுவடிகளைப் படித்துப் படித்து அம்மட்டோடு நின்று விடாமல், உயிர்நூல், உடல்நூல், மரநூல் முதலிய நூல்களை ஆராய்ச்சி செய்து, கண்கூடாகக்கண்டு, அறிவை வளர்க்க வேண்டும். கற்பதனால்மட்டும் பயன் இல்லை; காட்சியால் உண்டாகும் பயன் மிகப் பெரிது. எந்த வேலையிலும் ஊக்கங்கொண்டு முயன்றால், முன்னுக்கு வருவது திண்ணம்.

கல்வியே எவற்றிற்கும் அடிப்படை. கல்வி என்பது சுவடிகளைப் பார்த்துப் படிப்பது-

மாத்திரம் அன்று. சிறந்த நூல்களின் நுட்பங்களைத் தேர்ந்து தெளிதல் வேண்டும். நல்ல முயற்சியினால் நல்ல மனம் உண்டாகும்.

நாம் ஒரு மலையின்மேல் ஏறவேண்டுமாயின், நாமே நடந்து செல்லுதல் வேண்டும். பிறர் நம்மைச் சுமந்து செல்லுதல் கூடாது. அதன் உச்சியிலேறிப் பாராமல் அதன் படத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுவதனால் பயனில்லை. அதுபோல், ஒவ்வொரு செய்தியையும் நாமே முயன்று தெரிந்துகொள்ளுவதே சிறப்பாகும்; அதுவே சிறந்த கல்வியாம்.

8. காலிலியோ செய்த ஆராய்ச்சி - I

காலிலியோ (Galileo) என்னும் கணிதசாஸ்திரி 1564௵ பெப்ருவரிமீ 15உ பைசா நகரத்திற் பிறந்தவர். அவர், செல்வநிலையி லிருந்த தம் குடும்பம் சீரழிந்த நிலையில் தோன்றினர். அவருக்குச் சிறந்த கல்வி கற்பிக்க அவர் தம் பெற்றோருக்கு இயலாமையின், அவர் சிறிதளவே கற்றனர். ஆயினும், அக் கல்வியை ஆழ்ந்து கற்று, ஆராய்ச்சியில் தேர்ச்சி பெற்றனர். தாம் கற்றதைப் பிறருக்குத் தெளிவாக விரித்துக் கூறவும் வல்லவ ராயினர். ஒழிவுநேரங்களில் இன்னிசை பாடவும், ஓவியம் எழுதவும் பயின்று, நற் புலமை அடைந்தனர்.

இளமையிலேயே அவரது திறம் அருந்திறமென வெளிப்படவே, அவர் தம் தந்தையார் அவரைச் சிறந்த புலவராகச் செய்ய உறுதிகொண்டனர். அதனால், காலிலியோ 1581-ஆம் ௵ நொவெம்பர்௴ 5௳ பைசா நகரத்துப் பாடசாலையில் சேர்ந்து, மருத்துவநூல் முதலிய அரிய கலைகள் கற்று, மேன்மேலும் ஆராய்வாராயினர். 1582௵ காலிலியோ முதலில் மிகச் சிறந்த உண்மைச்செய்தி யொன்றைக் கண்டுபிடித்தார். அஃதாவது—அவர் பைசாநகரத்து ஆலயத்துட் சென்றபோது, அங்கே தொங்கிக்கொண்டிருந்த விளக்கொன்று ஒரே அளவாக முன்னும் பின்னும் ஊசலாடுவது கண்டார். ஒருவன் அதில் விளக்கு ஏற்றிவிட்டுப் போன அதிர்ச்சியினால் அவ்விளக்கு அவ்வாறு ஆடிக்கொண்டிருந்தது. அஃது ஒரு சிறு செயலாக இருந்தும், அதனையே பல முறை ஆராய்ந்து பார்த்து, அதனைக்கொண்டு காலத்தைச் சரிவரக் கணிக்கலாமென்று ஒருவாறு ஊகித்தனர். இச்செய்தி நெடுநாளாக அவர்மனத்தில் நிலைகொண்டிருந்தது; அவர், 50 யாண்டுகளுக்குப் பின், 1633-ஆம் யாண்டில், ஜோதிஷ சாஸ்திர சோதனை செய்வதற்குக் கடிகாயந்திரம் செய்கையில் அதனைப் பயன்படுத்தினர். ஆயினும், அஃது அப்பொழுது அவ்வளவு திருத்தமான கருவியாகத் தீரவில்லை. அதன் பின்னர், பெண்டுலம் என்னும் கருவியையுடைய கடிகா-

யந்திரம் ஒன்று திருத்தமாகச் செய்யப்பெற்றது. அதனைச் செய்து முடித்தவர் ஹைஹஜன்ஸ் (Huhyghens) என்பவரேயாயினும், அக்கருத்தை அவர் மனத்திற் புகச் செய்தவர் காலிலியோ என்பவரே யாவர்.

அதுவரையில் காலிலியோ கணித சாஸ்திரப் பயிற்சி அடைந்திலர். கணித சாஸ்திரத்தினால் ஓவியப்பயிற்சிக்கு உதவி உண்டென்பதைக்கண்டு, அதைக் கற்கவேண்டும் என்னும் ஆவல்கொண்டு, அங்ககணிதமும் க்ஷேத்திரகணிதமும் பயிலத் தொடங்கினர். அதனால், அதுவரையில் செய்து வந்த ஆராய்ச்சிகள் அனைத்தையும் நிறுத்தும்படியாயிற்று. 25-ஆம் வயதில் அப் பேரறிஞர் மான்டி (Monte) என்பவரது ஆதரவினால், அதுகாறும் அவர் கண்டுபிடித்த அரிய செய்திகளின் திறமையினால் பைசா நகரத்துப் பாடசாலையில் கணித சாஸ்திர பண்டிதராக நியமனம் பெற்றனர்.

அதன் பின்னரே, காலிலியோ கதிகளுக்குரிய நியாயங்களை (Laws of Motion) ஆராயத்தொடங்கினர். பூமையக் கவர்ச்சி (Gravity) எவ்வகையான எடையுள்ள பொருளையும் ஒரே விதமாக இழுக்கிறது என்றும், வாயு மண்டலத்தின் தடையினால் சிறிதளவு மாறுபடலாம் என்றும் நிரூபித்துக் காட்டினார். 'ஒரு பொருள் மற்றொன்றைவிடப் பத்து மடங்கு பளுவுள்ளதாயிருப்பினும், சிறியபொருள் 100 அடி செல்லுங்

காலத்துக்குள் பெரிய பொருள் 10 அடியளவு தூரமே செல்லும்' என்று அரிஸ்தோதல் சொல்லியதையே அப்போதிருந்த அறிஞர்கள் நம்பியிருந்தார்கள். எவ்வளவு சிறிய பொருளாயினும், எவ்வளவு பெரிய பொருளாயினும் ஒரே அளவான தூரஞ்செல்ல, ஒரே அளவான காலமே செல்லும் என்பதை, காலிலியோ பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரத்தின் உச்சியிலிருந்து பெரிதுஞ் சிறிதுமான பொருள்களைக் கீழே போட்டு, பல முறை கண்கூடாகக் காட்டியும், அதனை ஒருவரும் ஒப்பாமற் போயினர். காலிலியோ முற்கூறியபடி வாயுமண்டலத்தின் தடையினல் சிறிதளவு மாறுபட்டதே யன்றி, வேறு மாறுபாடு ஏதும் ஏற்படவில்லை.

காலிலியோ காட்டிய இந்நூதன சித்தாந்தத்தைப் பலரும் மறுத்து அவரை எதிர்த்ததனல், அவர் பைசா நகரத்தில் தங்கியிருக்க மனமின்றி, கணித சாஸ்திர பண்டிதர் என்னும் பெரும் பதவியையும் விட்டு, 1592 - ஆம் ஆு பிளாரென்ஸ் நகரத்திற்குப் போயினர். அங்கே காலிலியோவுக்கு ஸால்வியதி (Salviate), ஸக்ரீதோ (Sagredo) என்னும் பெருந்தகையாளர் இருவரது நல்லிணக்கமும் உண்டாயிற்று. ஸக்ரீதோ என்பவரது செல்வாக்கினல், காலிலியோ, பதுவா (Padua) நகரத்தில் கணித சாஸ்திரத் தலைவராய் நியமனம் பெற்று, ஆறு யாண்டுகள் அப் புலமையை நடாத்தினர்.

இந்நன்றியை மனத்துட்கொண்டு காலிலியோ, சாஸ்திர புஸ்தகங்களை வினவிடையாக எழுதியபோது, வினவுவோனுக்கும் விடையிறுப்பவனுக்கும் அவ்விருவர் பெயரையே அமைத்தனர்.

காலிலியோ பிளாரென்ஸ் நகரத்திலிருந்த பொழுது கணித விஷயமாகப் பற்பல சிறு புத்தகங்கள் எழுதினார். அங்கே அவருக்கு ஏற்பட்டிருந்த சுதந்தரம் அளவிறந்ததாகும். அவர் பற்பல புதிய செய்திகளைக் கண்டுபிடித்தார். அது வரையில் தெரியாதிருந்த அநேக அற்புத விஷயங்களைத் தெரியக் காட்டினார். தெர்மாமீட்டர் (Thermometer) என்னும் சீதோஷ்ணங்களை அளக்கும் கருவியையும், கம்பஸ் (Compass) என்னும் அளவைக் கருவியையும் உண்டாக்கினார். அக்காலத்தே கோபர்னிகஸ் என்பவர் நிலைநாட்டி யிருந்த ககோள சாஸ்திரத்தின் நிலையைப் பரிசோதிக்கப் புகுந்தார். தூரதிருஷ்டிக் கண்ணாடி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, அக் கண்ணாடியே உண்மையான கருவியென்று தோன்றியதனால், அதை எவர்க்கும் வெளியிடத் துணிவு கொண்டனர்.

1599 ஆம் ௵ கணித சாஸ்திர பண்டிதர் என்னும் பதவி அவருக்கு ஆறுவருஷ காலம் கிடைத்திருந்தது. அதனை நலம்பெற நடத்தி வருங் காலத்தே, 1604 - ஆம் ௵ நூதன நட்சத்திரம் ஒன்று, ஆயிலிய நட்சத்திரத்தை அடுத்திருப்பதாய் அற்புதமாகத் தோன்ற,

காலிலியோ அதனை நன்கு ஆராய்ந்து பார்த்து, அது மற்றக் கிரகங்களைவிட வெகு தூரத்தில் இருக்கிறது என்பதை விளங்கக் காட்டினார். அவ்வாறு எடுத்துக் காட்டியது கிறிஸ்தவமதக் கோட்பாட்டிற்கும், 'நட்சத்திர மண்டலத்தில் எப்போதும் எவ்விதமான மாறுபாடும் ஏற்படு-வதில்லை' என்று கூறிய அரிஸ்தோதல் என்ப-வருடைய கொள்கைக்கும் மாறாக இருக்கவே, மற்ற ஆசிரியர் அனைவர்க்கும் அவரைப்பற்றி விரோதமும் வருத்தமும் உண்டாயின.

1609-ஆம் ௵ தூர திருஷ்டிக் கண்ணாடி, நட்சத்திர மண்டலத்தைக் கண்டு ஆராய்வதற்குப் பேருதவியா யுள்ள செய்தி அனைவர்க்கும் வெளிப்படையாயிற்று. காலிலியோ, வெனிஸ் நகரத்தி லிருக்குங்காலையில், சேய்மையிலுள்ள பொருள் அண்மையிலுள்ளது போலக் காணத்தக்க கருவி யொன்று ஏற்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டு, அவ்விஷயத்தில் தம் மனத்தைச் செலுத்தித் தாமே அத்தகைய கண்ணாடி யொன்றைச் செய்து முடித்தனர். அதனைக் கேள்விப்பட்ட நகர மாந்தர் பலர், அவ்வரிய பொருளைக் காணும்படி அவர் வீட்டு வாயிலில் வந்து நிறைந்திருந்தனர். வரவர அவர் அக் கண்ணாடியைப் பெரிதுஞ் சீர்ப்படுத்தி, வெனிஸ் நகரத்துச் சகல கலாசாலைத் தலைவர்களுக்குப் பரிசாகக் கொடுக்க, அதனை அவர்கள் பெரிதும் பாராட்டிப் பெற்றுக்கொண்டனர்.

அதனால் காலிலியோ, கணித சாஸ்திர பண்டிதர் என்னும் பதவியைத் தம் ஆயுளுள்ளளவும் நடத்திவருமாறு ஏற்பாடு செய்து, 650 ரூபாயாக இருந்த சம்பளத்தை 1225 ரூபாயாக அதிகப் படுத்தினர். தூரதிருஷ்டிக் கண்ணாடியை முதன் முதலில் நிருமித்துக் காட்டினவன் உலாந்தாக்காரன் ஒருவனும்; அதனை நட்சத்திர மண்டலத்தைச் சோதிப்பதற்கேற்ற கருவியாகவும், ஜோதிஷ சாஸ்திரத்தைப்பற்றிய நூதன விஷயங்களைக் கண்டு பிடிப்பதற்கேற்ற கருவியாகவும் விளங்கச் செய்தவர் காலிலியோ என்பவரே. அக் கருவியைத் துணையாகக்கொண்டு காலிலியோ சந்திர மண்டலத்திலுள்ள மேடு பள்ளங்களையும், சோதிமண்டலத்தி லுள்ள புள்ளிகளையும், சுக்கிரனுடைய கலைகளையும் நன்கு கண்டறிந்தார். அந்தக் கருவியைக்கொண்டு ஆராய்ந்ததில், கிரகங்களெல்லாம் பூரணமானவை என்றும், மாறுதலற்றவை என்றும் அரிஸ்தோதல் சொல்லிய திருஷ்டாந்தம் சரியல்லவென்று ஏற்பட்டது. நவக்கிரகமண்டலத்துக்குச் சூரியனே நடுநிலையானதென்றும், மற்றக் கிரகங்களைப் போலவே பூமியும் சூரியனைச் சுற்றி வருகிற தென்றும் கோபர்னிகஸ் எடுத்துக் கூறிய சித்தாந்தமே சரியான தென்று காலிலியோவுக்குப் புலப்பட்டது. புலப்படவே, அவ்விஷயங்களைத் தம் பகைவர்முன் தெளிவுபட விளக்கிக் காட்டினார்.

அது காரணமாக அவருக்குக் குருபீடத்தாரோடு பெரும்பகை யுண்டாக, அக் குருமார் அவரை வருவித்துக் குற்ற விசாரணை செய்யத் தலைப்பட்டனர்.

---

9. காலிலியோ செய்த ஆராய்ச்சி - II

அக்காலத்தே காலிலியோ கண்டு பிடித்த பல உண்மைகளில், பிருகஸ்பதி நட்சத்திரத்திற்குச் சில உபக்கிரகங்கள் உண்டென்று கண்டறிந்த செய்தியே மிகச் சிறந்தது. அவர் 1610 - ஆம் ௵ தூர திருஷ்டிக் கருவியைக்கொண்டு, அவ் வுபகிரகங்களுள் மூன்று நட்சத்திரங்களைக் கண்டறிந்தார்; பின்னும் தொடர்ந்து பற்பல ஆராய்ச்சிகள் செய்து, உலகத்திற்குப் பெரு நன்மைகள் பலவற்றை உண்டாக்கினர்.

காலிலியோ தஸ்கனி (Tuscany) நாட்டு மன்னனது வேண்டுகோளுக் கிசைந்து, பதுவா நகரத்தை விட்டுச்சென்று, பிளாரன்ஸ் நகரை யடைந்தனர். ஆயினும், பதுவா நகரத்தில் தமக்கிருந்த சிறப்பும் செல்வாக்கும் பிளாரன்ஸ் நகரத்தில் செல்லவில்லை. அவரது சுவாதீனத்திற்கே குறைவுநேர்ந்தது. அரசன் ஆதரவைப் பெற்றிருந்தும் மதத்துவேஷத்தால், அவருக்கு

உண்டான இன்னல்கள் எண்ணிறந்தனவாம். எவரும் அவர் கொள்கைக்கு மாறாகவே பேசினர். அவரது கொள்கை கிறிஸ்து வேதத்திற்கு விரோதமா யிருந்ததுபற்றி, அஃது அங்கிருந்தவர் எவர்க்கும் முரண்பா டாகவே இருந்தது. அதுகண்ட காலிலியோ, 'வேதபுத்தகம் ஆத்தும விசாரத்துக்கே உரியது; இயற்கைப் பொருளின் இயல்பைப் பற்றி ஆராய்வதற்கு உரியதன்று' என்னும் கருத்துடைய கடிதம் ஒன்று எழுதி, அரசனுக்கு அனுப்பி, அவர்களது மாறுபாடான கருத்தை மாற்ற முயன்றார்; அஃது ஒரு சிறிதும் பயன்படாமற் போயிற்று.


காலிலியோ எழுதிய கடிதத்தில் அடங்கியிருந்த கருத்து என்னை யெனின்:

வேதத்தின் முக்கியமான நோக்கமாவது, மன்னுயிர்கள் வீடு பெறுவதற்கு வேண்டிய செய்திகளைத் தெளிவுற விளக்குவதாகும்; அச்செய்திக ளனைத்தும் மக்களின் அறிவுக்கும் எட்டாதவை யாதலால், அவை கடவுளிடத்தினின்றும் தோன்றியவை என்று கொள்வதே தவிர, மற்றெவ்விதத்திலும் அதை நாம் மேற்கொள்ள ஞாயமில்லை. எல்லாச் செய்திகளையும் நாமே ஆராய்ந்து அறிந்து கொள்ளுமாறு நமக்குப் புலன்களையும், அறிவையும், பேசுந் திறனையும் கடவுள் நமக்குக் கொடுத்திருக்க, அவற்றை ஒரு சிறிதும் பயன்படுத்தாது விட்டிருப்பது எவ்வாறு நியாயமாகும்? மற்றைச்

செய்தி ஒருபுறமிருக்க, வான சாஸ்திரத்தைப்பற்றி இரண்டோரிடத்தில், சூரியன் சந்திரன் சுக்கிரன் இவைகளுடைய பெயர்கள் தவிர மற்றேதும் வேதத்தில் சொல்லப்படவில்லையே, அத்தகைய சாஸ்திர விஷயங்களில் வேதம் எப்படிப் பிரமாணமாகும்? ஆதலால், நாம் இவ் வுலகத்தைப்பற்றி ஆராய வேண்டுமாயின், அதற்கு வேதத்தை ஒப்பிட்டுப் பார்த்தல் சிறிதும் ஒவ்வாதாம். நமக்குள்ள அறிவைக்கொண்டு ஆராய்ந்து பார்த்து, உண்மைகளை உணர்ந்து கொள்வதே ஏற்ற வழியென்பது புலப்படும்'. என்பதாம்.

1615-ஆம் ௵ பெப்ருவரி ௴ 25௳ காலிலியோவைப் பற்றிய விசாரணை நடந்தது. 'இப் பூமி அசைவற்றது அன்று என்பதும், இப் பூமி நவக்கிரகங்களுக்கு நடுநிலை அன்று என்பதும், வேதத்திற்கு விரோதமானவை; இப்படிப்பட்ட கருத்தை உமது உள்ளத்தில் கொண்டிருத்தல் ஒருபோதுங் கூடாது' என்று மத்தியஸ்தர் வெளியிட்டனர்.

1617-ம் ௵ காலிலியோ, 'நாம் இனி பகைவர்களோடு போராடுவதிற் பயனில்லை' என்று தீர்மானித்து, ககோளத்தின் நிலைக்கு வேண்டிய உதாரணங்களைத் தேர்ந்தெடுத்து எழுதுவதே வேலையாயிருந்தனர். அத்தகைய புத்தகம் ஒன்று நன்கு எழுதி முடித்ததும், அரசாங்க உத்தரவு பெற்று, அதனை அச்சிட்டு



காலிலியோவை விசாரித்தல்

வெளியிட்டனர். அதற்கெல்லாம் 16 யாண்டுகள் சென்றன. அவரது புத்தகம் வெளியாகவே, அங்கிருந்த மாந்தருக்குப் பகை மிகுவதாயிற்று. அவர் அந் நூலில் சிம்பிலிஸியோ (Simplicio) என்னும் ஒருவனை ஏற்படுத்தி, அவன் ஆட்சேபம் செய்வது போலக் கிறிஸ்து மதத்தைப் பரிகாசஞ் செய்கின்றார் என்று எண்ணி, போப் (Pope) என்னும் மதாசாரியரும் அவரிடத்து மாறாச் சினங் கொண்டனர்; அதனால் 1633-ஆம் ௵ காலிலியோவை ரோமாபுரிக்கு வருவித்தனர். அப்போது காலிலியோ தளர்ந்த வயதுடையவரா யிருந்தமையின், அங்கே செல்லக் கூடாமையைப் பற்றி எவ்வளவோ எடுத்துக் கூறியும் ஏதும் பயன்படாதாயிற்று. ஆகவே, காலிலியோ தம் முதிர்வயதில் ரோமாபுரிக்குச் சென்றனர்.

அங்குக் காலிலியோவைக் குற்ற விசாரணை செய்து, தீர்ப்புச் சொல்லப்பட்டது. அத் தீர்ப்பு 1633-ஆம்௵ ஜூன்௴ 22௳ வெளியாயிற்று. அத் தீர்ப்பில், 1615-ஆம் ௵த்தில் ஒரு விசாரணை நடந்தபோது, இலேசான தண்டனை ஒன்று அவருக்கு விதிக்கப்பட்டது. அத் தீர்ப்பையும் மீறி அவர் ஒரே பிடிவாதமாகத் தம் சித்தாந்தத்தைப் பற்றி நூலொன்று எழுதி வெளியிடவே, அஃது அனைவர்க்கும் அளவிறந்த வருத்தத்தை யுண்டாக்கிற்று. ஆயினும், தாம் அதுவரையில் மதவிரோதமாகச் செய்த

செய்கைக ளனைத்தையும் பிசகானவை என்று இப்போது உணர்ந்து சொல்லுகிறபடியால், அவர் செய்த பிழைகளெல்லாம் மன்னிக்கப்பட்டன. இனி, அவர் இவ்வகைச் செய்கைகள் செய்யத் துணியாமல் இருத்தற்பொருட்டும், இப்படிச்செய்யும் மற்றவர்க்கும் அச்சம் உண்டாதற் பொருட்டும் அவருக்குச் சிறிதளவாவது தண்டனை விதிக்கவேண்டுவது இன்றியமையாததா யிருக்கின்றது. அதனால், அவர் ஒரு சிறைச்சாலையில் வாளா இருக்கவேண்டும். அவர் எழுதிய புதுப் புத்தகத்தை இனி வெளியிடக் கூடாது என்றும் வெளியிட்டனர்.

1633 - ஆம் ௵ ஜூன் ௴ 22 தேதி, காலிலியோவுக்குத் துயர்க் குறிக்கான உடை யொன்றை உடுத்தி, மினர்வா என்னும் ஞானதேவதையின் கோயிலுக்குக் கூட்டிக்கொண்டு போயினர். அங்கே அத் தேவதையின் முன் தீர்ப்பைப் படிக்க, காலிலியோ முழங்காலிட்டு அதை வணக்கத்துடன் கேட்டு, தாம் அதுவரையில் கொண்டிருந்த கொள்கையை விட்டுவிட்டதாகச்சொல்லி, கையெழுத்துச் செய்தார். உடனே அவரைச் சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றனர்.

சிறைச்சாலையில் காலிலியோ நான்கு நாள் தங்கியிருந்தனர். பின்னர், அவர் தமக்குக் கடுநட்பினரான ஒரு ராஜ குருவின் அழகிய மாளிகையில் வாழ்ந்திருக்கும்படி விடப்பட்-

டனர்; டிசெம்பர் மாதம் முதலில் போப் என்பவர், பிளாரன்ஸ் நகரத்துக்கு அண்மையிலுள்ள இடங்களில் தம் மனம்போல வாழ்ந்திருக்கலாமென்று காலிலியோவுக்குக் கட்டளையனுப்பினர்; அப்போதும் காவல்மட்டும் அவரைவிட்டு ஒழியவில்லை. அதனால், காலிலியோவுக்கு மனம் பெரிதும் புண்பட்டது.

காலிலியோ தம் ஆராய்ச்சியை விட்டவரல்லர்; அதுவரையில் தாம் கண்ட செய்திகளை விருத்தி செய்து, நூதன விஷயங்களைக் கண்டு பிடிப்பதிலேயே கருத்துக்கொண்டிருந்தார். கடைசியில் அவருக்குக் கண் பார்வை மழுங்கவே, எதையும் பார்க்கக் கூடாமற் போயிற்று. மழுங்கியும், பிரகஸ்பதியின் உபக்கிரகங்களைப் பற்றிய கணக்குக்களை ஓயாமல் கவனித்துப் பார்த்துக்கொண்டே யிருந்தார். இவ்வாறு தம் வாழ்நாள் முழுதும் படைப்புப் பொருளில் உண்டான அற்புதங்களை அறிந்து, அகம் மிக மகிழ்ந்து காலங்கழித்து, 78-ஆம் வயதான 1642 ௵ ஜனவரி ௴ 9௳ தேகவியோகம் அடைந்தனர்.


காலிலியோ கொண்ட சித்தாந்தம் சிதைவுபட்டுச் சீரழிந்து போகாதவாறு, அவ்வாண்டிலேயே நியூட்டன் (Newton) என்னும் அறிஞர் பெருமான் இவ்வுலகத்தில் அவதரித்தனர்.

10. மத்திய தரைக் கடல்

இப்போது மத்திய தரைக் கடலில், அங்கிலேயருக்கு உரிய முக்கியமான ஆட்சிகள் மூன்று; அவை, ஜிப்ரால்ட்டர் (Gibralter), மால்தா (Malta), ஸைப்ரஸ் (Cyprus) என்பனவாம். இவற்றின் வரலாற்றை ஒருவாறு 'இண்டுச் சுருக்கிக் கூறுவோம் :

I ஜிப்ரால்ட்டர்: இம் மூன்றனுள் முதலில் கிடைத்தது, ஜிப்ரால்ட்டர் என்னும் சிறந்த நாடாம். முற்காலத்தில் அதன்மேல் படையெடுத்து, அதைக் கைப்பற்றிய ஒரு வீரனால் அதற்கு அப் பெயர் அமைந்தது. அம் முனையைக் கைக்கொண்ட பிறகு, அவ் வீரன் அங்கே ஒரு கோட்டைகட்டிக் காத்துவந்தான். பின்பு, பற்பல மாறுதல்கள் உண்டாயினும், இற்றில் (1462-ஆம் யாண்டு) ஸ்பானியா (Spain) தேசத்தார் அதைப் பிடித்துக்கொண்டு, அதுமுதல் 1704-ஆம் வருடம் வரையில் எவ்வித இடையூறுமின்றி அதனை ஆண்டு வந்தனர்.

அப்போது அக் கோட்டை எவராலும் பிடிபடத் தக்கதன்று என்று ஸ்பானியர் உறுதிகொண்டிருந்தனர். அங்கே காப்புச் சேனை மிகவும் குறைவாயிருந்த காலங் கண்டு, அங்கிலேயர் அதைக் கைப்பற்றினர். ஆயினும், அஃது எளிதில் முடியவில்லை; உயிர்ச்சேதம் பெரிதும் நேரிட்ட பின்னரே கைகூடி வந்தது.



அன்று முதல் இன்றுவரையில் அங்கிலக் கொடியே அக் கோட்டையின்மேல் பெருமிதமாகப் பறந்துகொண் டிருக்கின்றது; ஆயினும், அதை அவர்கள் அதினத்தினின்றும் பறித்துக் கொள்ளப் பலர் பாடுபட்டனர். அது தம் கைவிட்டுப் போனதுமுதல் 80 யாண்டுவரையில் ஸ்பானியா தேசத்தார் அதற்காகப் போராடிக் கொண்டேயிருந்து, இறுதியில் பிராஞ்சு (France) தேசத்தாரோடு கூடிவந்து எதிர்த்து, அளவற்ற படையையும் பொருளையும் தோற்றனர். இவ்வாறு அங்கிலேயரால் பிடிபட்ட அப்பெருங் கோட்டை, இப்போது அக் கடல் வழியை அவர்கள் கைக்கொண் டிருத்தலினால், மற்றெவர்க்கும் எட்டிப் பார்க்கவும் இயலாததாய் ஏற்பட்டிருக்கின்றது.

II மால்தா: அதன் பின்னர், மத்தியதரைக் கடலில் அங்கிலேயருக்குக் கிடைத்த காணியாட்சி மால்தா என்னும் தீவாம். ஜிப்ரால்ட்டர் செய்ய மாட்டாத உதவிகள் அனைத்தையும் இத் தீவு செய்கின்றது; சிறந்த கப்பல்களுக்குக் காப்பிடமாகவும், உறுதியாய் நங்கூரம் பாய்ச்சத்தக்க ஆழமுள்ள கடலினதாகவும் விளங்கு கின்றது.

மால்தா, மத்திய தரைக் கடலிலுள்ள கப்பற் படைகளுக் கெல்லாம் நடுவிடமானது. அங்குள்ள நிலங்களும் பாழ்நிலம் அல்ல; கோதுமை, வாற்கோதுமை, பருத்தி, பசும் புல்

முதலியவை அங்கே செழித்துப்பயிராகின்றன; ஆடுமாடுகளும் அமிதமாக விருத்தியாகின்றன.

பண்டைக் காலத்தில் அத் தீவு பல கைத்தொழிலிற் பெயர்பெற்று விளங்கியிருந்தது. கிறிஸ்து பிறக்க 736 யாண்டுகளுக்கு முன், அது, கிரேக்கருடைய அதீனத்தில் இருந்தது. பிறகு, அது, அரேபியர், சிசிலியர், ஜர்மானியர், பிராஞ்சியர், முதலிய பற்பல நாட்டினரால் பிடிபட்டு, அவரவருடைய அதீனத்தில் சிறிது சிறிது காலம் இருந்தது. கடைசியில் ஜர்மானிய தேசத்தரசன் அதை ஒரு வீரனுக்கு ஒப்பித்தான். அவ்வீரனும், அங்கே சிறந்த கோட்டை ஒன்று கட்டிக்கொண்டு, கிறிஸ்தவர்களுக்குப் பற்பல வகையில் பெரு நன்மைகள் புரிந்துவந்தான்.

பின்னர், 1798 - ஆம் யாண்டில், நெப்போலியன் (Napoleon) என்னும் மகா வீரன் அதன் வழியே எகிப்து தேசத்துக்கு யாத்திரை செய்தபோது, அவன் கொடுத்த திரண்ட பொருளைப் பெற்றுக் கொண்டு, மால்தாவிலிருந்த வீரர், அதை நெப்போலியன் வசம் ஒப்பித்தனர். நெப்போலியன் அக்கோட்டையில் 3,000 வீரரைக் காப்புச் சேனையாக வைத்து விட்டு, அப்புறம் சென்றான்.

ஆயினும், அப் பிராஞ்சியரது கொடுங்கோன்மையைப் பொறுக்கமாட்டாது, அவர்களிடத்தில் வெறுப்பும் விரோதமுங் கொண்டு,

அத் தீவிலுள்ளவர்கள் அத் துரைத்தனத்தார்மேல் கலகப்பட்டு எழுந்து, அங்கிலேயரது உதவியால் அங்கிருந்த காப்புச் சேனையை வென்றார்கள். பின்பு, பிரித்தானியரே அத் தீவைக் கைப்பற்றிக் கொண்டனர்.

இப்போது அத்தீவில் பிரித்தானியருடைய நிலையான காப்புச் சேனைகள் தங்கி யிருக்கின்றன. மேலும், அங்கே மிகப் பெரிய ஆயுதசாலைகளும், கப்பல் செய்யும் இடங்களும் அமைந்துள்ளன. அந்த இடம், கப்பற்சேனை, தரைச்சேனை ஆகிய இரண்டுக்கும் வாய்ப்பான இருப்பிடமாக விளங்குகின்றது.

III ஸைப்ரஸ்: கடைசியாகச் சில நாளுக்கு முன்னர்ப் பிரித்தானியருக்குக் கிடைத்தது ஸைப்ரஸ் என்னும் தீவு; ஆதியில் அதுபொனீஷியர் (Phoenicians) என்பவர்களுக்கு அதீனமானதா யிருந்தது; பிறகு, அது, கிரேக்கர், எகிப்தியர், பாரசீகர், ரோமர், அரேபியர் முதலியோர்க்கு அதீனமாயிற்று. 1811-ஆம்யாண்டில் அத் தீவினர் செய்த அக்கிரமங்களைப் பொறாமல், அப்போது இங்கிலந்துக்கு அரசனாயிருந்த ரிச்சார்டு (Richard-I) என்பவன் அதைக் கைப்பற்றிக் கொண்டு, பிறகு அதை எருஸலேம் (Jerusalem) என்னும் நாட்டின் அரசனான கை டி லியூஸினன் (Guy de Lusinan) என்பவனுக்கு நன்கொடையாகக் கொடுத்து விட்டான். பின்பு, பலப் பல மாறுபாடுகள் உண்டாகிக்

கடைசியில் துருக்கர்களுக்குச் சுவாதீனமாகிவிட்டது. அஃது, அவர்கள் அதீனத்திலேயே நெடுங் காலம் இருந்தது; இப்போது சில நாளுக்குமுன் ருஷியருக்கும் துருக்கியருக்கும் போர் நடந்து சமாதானம் ஏற்பட்ட காலத்தில், ஓர் உடன்படிக்கையின்மேல், அது, பிரித்தானியருக்கு அளிக்கப்பட்டது.

அப் பூமி மிகவும் செழிப்பானது. முன்னர் அத் தீவில் 10 லக்ஷம் வரையில் குடிகள் அடர்ந்திருந்தனர்; ஆயினும், பிறகு கொடுங் கோன்மை முதலியவற்றால் அக் குடித்தொகை பெரிதும் குறைந்துபோயிற்று.

அங்கே சிறந்த பருத்தி, பழவகை, நெற்பயிர், புகையிலை, ஆட்டுமயிர், பாலாடைக்கட்டி, பட்டு, ஒயின் என்னும் ஒருவகைச் சாராயம், திராக்ஷை முதலியவை உற்பத்தி யாகின்றன; காடுகளில் சிறந்த மரங்களும் வளர்கின்றன.

முற்காலத்தில் அங்கே சிறந்த செம்புக் கனிகள் இருந்தன. பொன், வெள்ளி, இரும்பு, சிறந்த வயிரக்கல் முதலிய அரும்பொருள்கள் அகப்பட்டுக்கொண் டிருந்தன. இப்போது யாண்டுதோறும் அங்கிருந்து உப்பு ஏற்றுமதி யாகின்றது. கம்பளம், பருத்தி, தோல் முதலியவற்றைப் பற்றிய கைத்தொழில்களும் மிகுதியாக நடைபெறுகின்றன.

11. பண்டைக் காலத்து வர்த்தகமும், கைத்தொழிலும்

பண்டைக்காலத்தில் நமது இந்து தேசத்தின் வர்த்தகமும், கைத்தொழிலும் மிகச் சிறப்புற்று விளங்கி யிருந்தன என்பதற்கு ஒரு சிறிதும் ஐயமில்லை; இக் காலத்தே அவை பெரும்பாலும் அழிவுற்ற நிலையில் இருக்கக் காண்கின்றோம்! அதற்குக் காரணந்தான் என்ன? ஐரோப்பிய நாட்டுப் பொருள்கள் பலப்பல இந்நாட்டில் வந்து இறக்குமதியாகி, சொற்பவிலைக்குக் கிடைப்பதே அதற்கு ஏற்ற காரணமாகும். ஐரோப்பிய நாட்டுப் பொருள்கள் யந்திரங்களின் மூலமாகச் செய்யப்படுகின்றன; நமது நாட்டுப் பொருள்களோ கைத்தொழிலின் மூலமாக நடைபெறுகின்றன. ஆதலின், அவை சொற்ப விலைக்குக் கிடைப்பது அரிதாகும். அன்றியும், யந்திரங்கள் ஒரே காலத்தில் ஆயிரக்கணக்கான பொருள்களை அழகுபெற அமைத்து விடுகின்றன. அவற்றை யெல்லாம் கைத்தொழிலின் மூலமாகச் செய்வதென்றால் எளிதில் ஆகுமா! ஒவ்வொரு பொருளையும் தனித்தனியே செய்துமுடிக்க வேண்டியிருக்கின்றதே! ஆதலால், பிறநாட்டுப் பொருள்கள் இந்நாட்டிற்கு வந்து இறக்குமதி யாவதனால், நம் நாட்டுப் பொருள்கள் அவற்றோடு போட்டி போட முடிவதில்லை.

கையினாற் செய்யும் பொருள்கள் நெடுங்காலம் அழிவுபடா; உறுதியாகவும் இருக்கும்; அவ்வருமை தெரிந்து ஏற்ற கூலி கொடுத்து வாங்குவோர் நம் நாட்டில் எவரும் இலர். ஐரோப்பியர் நாட்டிலும் கையாற் செய்யப்படும் பொருள்களுக்கு விலை அதிகமே. அப்பொருள்களை அந்நாட்டினர் பெருந்தொகை கொடுத்து வாங்குகின்றனர். யந்திரத்தினால் செய்யும் பொருள்களையும் கையினாற் செய்யும் பொருள்களையும் ஒப்பிட்டு உயர்வு நோக்கி, அவ் வுயர்வுக்குத்தக்க விலைகொடுத்து அவற்றை வாங்குதல் செல்வர்களுக்குற்ற சிறந்த கடமையாம். அவ்வப்போது 'காட்சிக் கடைகள்' வைத்து, சிறந்த பொருள்களுக்கு ஏற்ற பரிசு கொடுத்துப் பாராட்டுவதே கைத்தொழில் பெருகுவதற்குத் தக்க வழியாகும். இவ்வகையில் துரைத்தனத்தார் கைத்தொழில்களை விருத்தி செய்யக் கருத்துக்கொண்டு முயலுதல் வேண்டும்.

முற்காலத்தில் கிரேக்கரும், இத்தாலியரும், மற்ற நாட்டினரும் நமது நாட்டின்மீது நோக்கம் வைத்து வந்தமைக்குக் காரணம், இந் நாட்டில் விளையும் பொருள்களையும், கைத்தொழில்களையும் பற்றியதே யாகும். நெடுங்காலமாக நமது இந்து தேசம், வர்த்தக விஷயத்தில் தலைமை பெற்றிருந்தது என்பதற்குப் பல ஆதரவுகள் உள. அதிக லாபத்தைக் கருதி அந்நிய தேசத்து வியாபாரிகள், கப்பல்களைக்

கொண்டுவந்து, கடலில் கூட்டங் கூட்டமாகக் கூடுகின்றார்கள் என்று இருக்கு வேதத்தில் சொல்லியிருக்கிறது. மிளகு, வாசனைப் பொருள், யானைத்தந்தம், முத்து, அரதனம் முதலிய பொருள்களே அந்நியதேசத்து வர்த்தகர்களின் மனத்தைக் கவர்ந்தன. இவ்வரிய பொருள்கள் கடல் மூலமாகவே யன்றித் தரை மூலமாகவும் அந்நிய தேசங்களுக்குச் சென்றன. இந்தத் தேசத்தினின்றும் உயரிய பொருள்கள், கிரீஸ் தேசத்திற்குச் சென்று சேர்ந்த பின்னரே, கிரேக்கர் பேராவல் கொண்டு இத் தேசத்தின் மீது படையெடுத்து வந்திருக்கவேண்டும் என்று சில சரித்திர ஆசிரியர்கள் கருதுகின்றார்கள். இந்து தேசத்தின் வியாபாரிகளைப் பற்றியும், அவர்களுடைய சரக்குகளைப் பற்றியும் பைபில் என்னும் கிறிஸ்துவேத புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. மயில், குரங்கு, சந்தனக் கட்டை முதலிய பொருள்கள் சாலமன் என்னும் அரசனுக்குப் பரிசாக அனுப்பப்பட்ட செய்தி சரித்திரம் கூறும்.

அந்நிய தேசத்தில் இருந்த மாந்தர்கள் தம் உடலை வருணமிட்டு, தழைகளை உடையாக உடுத்துத் திரிந்துகொண்டு வாழ்ந்திருந்த அக்காலத்தில், நமது நாட்டினர், பட்டாடைகளையும், பருத்தியாடைகளையும் உடுத்து, பொன், முத்து, அரதனம் முதலியவற்றால் அழகுபெறச் செய்த ஆபரணங்களை அணிந்துகொண்டு சிறக்க

வாழ்ந்திருந்தனர் என்பது வெளிப்படை. யானை, குதிரை, தேர் முதலிய வாகனங்களை ஊர்தியாகக் கொண்டு வேந்தர்கள் வாழ்ந்திருந்தனர்.

சர்க்கரை என்னும் இனிய பொருள் முற்காலத்தில் நமது நாட்டில் உண்டாக்கப்பட்டதாகும். பண்டைய நூல்களில் சர்க்கரையைப்பற்றிச் சிறப்பாக எழுதப்பட்டுள்ளது. அப் பொருள், யவனம், பாரஸீகம், கிரீஸ் முதலிய தேசங்களுக்குப் போனபிறகும், அதற்கு ஏற்பட்ட அப் பெயர் மாறவேயில்லை. கிரேக்கர் மூலமாகவே சர்க்கரை இன்னதென்பது மற்றைய ஐரோப்பியர்களுக்குத் தெரியவந்தது.

நம் நாட்டுப் பொருள்களுக்கும், பிறநாட்டுப் பொருள்களுக்கும் விலைதீர்மானிப்பதற்குப் பண்டைக் காலத்துத் தர்ம சாஸ்திரங்களில் விதிகள் ஏற்பட்டுள்ளன. யுதிஷ்டரருக்குப் பட்டாபிஷேகம் நடந்த காலத்தில், தூரதேசங்களினின்றும் அழகிய பொருள்கள் வந்து நிறைந்தன என்று மகா பாரதத்தில் கூறப்பட்டுள்ளது. இராமனுடைய தேவியும், இலக்குவனுடைய தேவியும், சீனதேசத்துப் பட்டாடைகளை உடுத்துக்கொண்டதாக இராமாயணம் கூறும். நளன் கதையிலும் இச்செய்தி கூறப்பட்டுள்ளது. ஆதலின், இந் நாட்டுப் பொருள்கள் பிறநாட்டுக்கும், பிறநாட்டுப் பொருள்கள் இந்நாட்டுக்கும் போக்குவரத்தாக

இருந்திருக்க வேண்டும் என்று உறுதியாகக் கூறலாம்.

நமது நாட்டுப் பொருள்களுள் பருத்தி, அவுரி, ஆட்டுமயிர், இரும்பு முதலிய பொருள்கள் முக்கியமானவை. பருத்தி இந் நாட்டில் எங்கெங்கும் ஏராளமாகப் பயிராகின்றது. அப்பருத்தியை ஆடைகளுக்காகப் பயன்படுத்தும் முறை, நெடுங் காலத்துக்கு முன்னரே நமது நாட்டினருக்குத் தெரிந்திருத்தல் வேண்டும்.

அலெக்சாந்தர் என்னும் அரசர் பெருமான், நமது நாட்டின்மீது படையெடுத்து வந்த போது அவனுடன் வந்த கிரேக்கர் நமது நாட்டின் ஆடையைப்பற்றி விவரவமாக எழுதியிருக்கின்றனர். அந்நாளில் கூறிய அவ்விவரம் இந் நாளிலும் அமைவுடையதாகவே இருக்கின்றது. ஆடையை உடுத்துவதில் நம்மவர் அந் நாள் முதல் இந் நாள் வரையில் சிறிதும் மாறுபாடடையவில்லை. ஆடவர், ஓர் உடையை அரையில் உடுத்துவர்; ஓராடையை உடலின் மீது போட்டுக்கொள்வர். பெண்டிர் 15-16 முழ நீளமும், $2\frac{1}{2}$ முழம் அகலமுமுள்ள புடைவைகளை 12-13 முழம் வரையில் இடையில் சுற்றிக்கட்டிக் கொண்டு, மிகுதியைப் புயமும் முழங்கையும் மறையத் தோள்மேல் போர்த்துக்கொண்டு சிறப்பாக விளங்குவர். மார்பில் கச்சு அணிவர்.

இடத்திற்கு இடம் நெசவு மாறுபடும். டேக்கா என்னும் நாட்டில் முதல் தரமான

ஆடைகள் நெய்யப்படும். அவுரங்கஜேப் என்னும் அரசர்பெருமான் புதல்வி, ஏழு ஆடைகளை ஒன்றன்மேல் ஒன்றாக அணிந்துகொள்வது வழக்கமாம். அப்போதும் அவளது உடல்வனப்பு வெளிக்குத் தோன்றுமாம். அச் சேலைகளின் பெயர்களே நெசவின் நுட்பத்தைச் சிறப்புறக் காட்டும். மாலைப் பனி, ஓடும்நீர், மெல்லிய காற்று முதலியவை அவ்வாடைகளின் பெயர்களாம். ஆடையைக் கையால் பற்றினால் புகையைப் பற்றுவதுபோல் இருக்குமென்று பண்டைய நூல்களில் கூறப்பட்டுள்ளது. எலிமயிர்க்கம்பளம் அக்காலத்தே சிறந்து விளங்கினது. நூல் நூற்பதும், நெசவுத் தொழில் செய்வதும், அக்காலத்துப் பெண்டிர் கொண்டிருந்த வேலை யென்பது விளக்கமாகத் தெரிகின்றது.

இண்டிகோ என்று இத் தேசத்துப் பெயரினால் வழங்குகின்ற அவுரியும், வெகு காலத்திற்கு முன்னரே இத் தேசத்து மாந்தர் கண்டுபிடித்த தாகும். ஆட்டு மயிரால் செய்யப் படுகின்ற காஸ்மீர தேசத்துச் சால்வைகளும், கம்பளிகளும் மிகச் சிறந்தவை. அவை உலகத்தில் பெரிதும் பெயர் பெற்று விளங்குகின்றன. வேறு நாடுகளில் எவ்வளவு முயன்றாலும் அதற்கு இடாக முற்றுப்பெறுவ தில்லை. காஸ்மீரதேசத்துத் தண்ணீரில் என்னவோ ஒருவிதமான சிறந்த குணம் இருக்கின்றது. அங்கே

ஏறுகிற சாயம் நிலையாகவும், நயமாகவும் இருப்பதற்கு அந்நீரே முதற்காரணமாம். பண்டைக் காலத்து அரசர்கள் அந்தச் சால்வைகளைப் பெரிதும் பாராட்டி வழங்கி வந்தனர். அன்னார் அரியணையில் சிறக்க அமர்ந்திருக்குங்காலத்தில் அச் சிறந்த சால்வைகளை உடுத்தாமல் இருப்பதில்லை. மற்றும், தரையில் விரிக்கும் சமுக்காளங்களின் சிறப்புத்தான் என்னே! இரத்தின சமுக்காளத்தின் ஏற்றமே ஏற்றம்! அவற்றில் அமைந்திருக்கும் சித்திர வுருவங்களின் சிறப்பைச் சொல்லவும் ஒண்ணுமோ! அவ் வுருவப் படங்களையும், அவை இயன்றுள்ள நிறங்களையும் எடுத்துச் சொல்ல எவராலாகும்! அத்தகைய சிறந்த பொருள்க ளெல்லாம் இக் காலத்தில் அருகிப் போயினவே!

இத்தேசத்தின் கைத்தொழில்களை விருத்தி செய்ய விரும்பினால், புதுமாதிரிகளை அறவே நீக்கிப் பழைய மாதிரிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். 1858-ம் ௵ பெப்ருவரி மீ 5உ கைத்தொழிற் கல்விச் சங்கத்தார் கூடிய சபையில் அவர்கள் முடிவாகக் கூறிய கருத்தை இண்டுக் கூறுவோம்:

‘இந்தியாவின் கைத்தொழில்களுள் ஒவ்வொரு வகையிலும் சிறந்த பொருள்களைத் தருவித்து, ஆங்காங்கே அனைவரும் பார்த்து அறிந்துகொள்ளும்படி காட்சிச் சாலைகள் அமைத்தல் வேண்டும். துரைத்தனப் பாட-

சாலைகளிலும் அவற்றைக் காட்சிக்காக அமைத்துவைத்தல்வேண்டும். அப்போதுதான் அவற்றின் சிறப்பு செவ்வனே விளங்கும். வேலையின் திறமையைத் துரைத்தனத்தாருங் கண்டு மகிழ்ச்சி அடைகின்றார்கள் என்று மாந்தருக்குத் தெரிந்துவிட்டால், அவர்கள் அவற்றைப் பெறப் பெரிதும் அவாவுவர். அவாவவே, தொழிலாளிகளுக்கு முயற்சியும் ஊக்கமும் பெருகும். பெருகவே, தம் தொழிலை விருத்திசெய்ய முயலுவர். முயலவே, கண்ணுக்குப் பகட்டாகத் தோன்றும் போலிவேலைப்பாடுகள் அனைத்தும் இருந்தவிடம் தெரியாமல் மறைந்துபோகும்' என்பதாம்.

நமதுநாட்டில் பண்டைக்காலத்தில் இருந்த சிறந்த இரும்பு வேலையும் சீர்குலைந்து விட்டது. இப்போது இரும்புச் சாமான்கள் பெரிதும் ஏற்றம் பெறும் காலமாகும். இரும்புவேலை செய்யும் கருமான் இரவும் பகலும் ஓயாது உழைத்தாலும் என்ன செய்யமுடியும்? அவன் அவ்வாறு உழைத்துச் செய்யும் வேலைக்குப் போதிய கூலியும் கிடைப்பதில்லை. ஐரோப்பிய நாட்டில் இருப்புச் சாலைகளில் யந்திரங்கள் எண்ணிறந்த சாமான்களை நொடிப் பொழுதில் செய்து விடுகின்றன. அதனால் அவற்றிற்கு ஏற்படும் விலையும் வெகு சுலபமானதாகும். முற்காலத்தில் இந்தியாவில் கிடைத்த இரும்பு மிக ஏற்றம் பெற்று விளங்கியிருந்தது. கத்திய-

வார் மாகாணத்தில் இரும்புச் சுரங்கங்களெல்லாம், குடாரி, சுளுகுப்பாரை என்னும் இவ்விரண்டு கருவிகளினாலேயே வெட்டப்பட்டன. இவ்விடத்தினின்றும் அந்நிய தேசங்களுக்கு இரும்பு ஏற்றுமதி செய்யப்பட்டது. அக்காலத்தில் எஃகு சிறந்ததாகவே விளங்கி யிருந்தது. இக்காலத்தும் கச்சுதேசத்து எஃகு சிறந்ததாகவே கருதப்படுகின்றது. பாரஸீகதேசத்தில் ஒருவனுக்குக் கோபம் வந்தால் எதிரியைப் பார்த்து, 'இந்தியா தேசத்து உத்தரம் வேண்டுமோ ?' என்று இன்றும் திட்டுவது வழக்கமாம். அதன் கருத்து என்னவெனின், இந்தியா தேசத்துக் கத்தியினால் ஒரு வெட்டுப் போடட்டுமா என்பதாம். ஆகலின், இத்தேசத்துக் கத்தி பாரசிக தேசத்திற்கு வெகு காலத்திற்கு முன்னரே தெரிந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகு மன்றோ ? அலெக்சாந்தர் என்னும் மன்னனுக்குப் போரஸ் என்னும் வேந்தன் 30 பவுன் எடையுள்ள எஃகைச் சிறந்த பொருளாகக் கொடுத்தானாம். சிறந்த எஃகினால் செய்த அழகிய வாள்களையும், போர்க்கருவிகளையும், நம் தேயத்து மன்னர்கள் அந்நிய தேசத்துக் கண்காட்சிச் சபைகளுக்கு அனுப்புவது வழக்கமாம்.

இவ்வாறு முற்காலத்தில் நம் நாடு இருந்த நன்னிலையைக்கருதிக்கொண்டே மகிழ்ந்திராது, அந் நிலையையடைய நன்கு முயலவேண்டும்.

12. மரவகைகளுக்கு உயிர் உண்டா?


இவ்வுலகிலுள்ள பொருள்கள் அனைத்தையும் மூன்று வகையான வர்க்கங்களாகப் பிரிக்கலாம்: அவை (1) ஜீவவர்க்கம், (2) தாவரவர்க்கம், (3) கனிஜ வர்க்கம் என்பனவாம். மானிடர் முதலிய உயிர்கள் ஜீவவர்க்கத்தைச் சார்ந்தவை; மரம் முதலிய பொருள்கள் தாவர வர்க்கத்தைச் சார்ந்தவை; கல் முதலிய பொருள்கள் கனிஜ வர்க்கத்தைச் சார்ந்தவையாகும்.

மனிதன், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன முதலியன எல்லாம் உயிருள்ளவை யென்பது அனைவரும் அறிவர். கல், மண் முதலிய பொருள்கள் உயிரில்லாதவை யென்பதும் தெரிந்த செய்தியே. இவை யிரண்டுக்கும் நடுத்தரமான மரவகைகளுக்கு உயிர் உண்டா? இல்லையா? என்பதையே இங்கு ஆராய்தல் வேண்டும்:

மரம், செடி, கொடி, புல், பூண்டு இவை, யனைத்தும் மரவகையைச் சார்ந்தவை; இவை, தோன்றின இடத்திலேயே நிலையாக நிற்கின்றன; இடம் விட்டுப் பெயர்வதில்லை. அதனால், இவற்றிற்கு உயிரில்லை யென்று சிலர் எண்ணலாம். இடம் விட்டுப் பெயராமையால், இவற்றிற்கு உயிரில்லையென்று சொல்லிவிடலாமா? மரவகைகள் வளர்கின்றனவே, பூக்கின்றனவே, காய்க்கின்றனவே, கனிகின்றனவே; அந்தக் கனிகள் உதிர்ந்து மறுபடி முளைக்கின்றனவே. மனிதன் முதலிய உயிர்வகைகளும் வளர்வதும்,

வம்ச விருத்தி செய்வதும் வழக்கம் அல்லவா? இவை யிரண்டுக்கும் என்ன வேற்றுமை? மனிதன் முதலிய உயிர்கள் இடம்விட்டுப் பெயர்கின்றன; மரவகைகள் பெயர்வதில்லை. வேற்றுமை இவ்வளவே. இதனால், மரவகைகளுக்கு உயிரில்லை யென்று சொல்லிவிடலாமா?

ஒரு விதையை நட்டால், அது, இரங்கொண்டு பருத்து, முளைகிளம்பத் தொடங்குகின்றது. அதற்கு அவ் விதையிலுள்ள மாப்பண்டமே (Starch) உணவாகும். அது பூமியில் நிலைத்து நிற்பதற்கு வேர் ஆழத்தில் இறங்கும். மேலே வந்த முளை, இலைவிட்டுத் துளிர்க்கும், அது துளிரெடுத்து வளர வளர, வேர் பூமியிலுள்ள சாரத்தை இழுத்து, அதற்கு உணவாகத் தரும். உயிர்கள் வாயினால் உணவை உட்கொள்கின்றன; மரம் வேரினால் உட்கொள்கின்றது; இதுவே வேற்றுமை.




உயிருள்ள பொருள்கள் மூக்கினால் மூச்சு விட்டு வாழ்கின்றன; மரவகைகள் இலையின் மூலமாக மூச்சுவிடுகின்றன; அதனால் தான், நாம், வெயிலில் மரத்தின் நிழலில் தங்கினால், நமக்குக் குளிர்ச்சியாக இருக்கிறது. காரணம் என்ன? இலைகள் வாயுவை உறிஞ்சி, அவ்வாயுவிலுள்ள கரிவாயுவை உட்கொண்டு, பிராணவாயுவை வெளிவிடுகின்றன. இலை இரங்கொண்டு பச்சென்றிருப்பதனால், அதினின்று வெளிவரும் வாயுவும் குளிர்ச்சியாக இருக்கின்றது. இதனால், மரவகைகளும், உயிர்வகைகளைப்போலவே, மூச்சு விடுகின்றன என்பது திண்ணமாம்.

உயிர்வகைகளின் உடலைக் காப்பதற்கு உடல் முழுதும் தோல் மூடிக்கொண் டிருக்கிறது; அதுபோலவே, மரவகைகளைப் பட்டை முதலிய தோல்கள் மூடிக்கொண்டிருக்கின்றன; இதனாலும் மரவகை, உயிர் வகையை ஒத்ததென்றே துணிந்து கூறலாம்.


இன்னும், மரவகை, உயிர்வகையைப் போலவே, இடம்விட்டுப் பெயர்ந்துசெல்கின்றதென்று ஒருவாறு கூறலாம்: அறுகம்புல் முதலிய சில மரவகை, வேர்விட்டுத் தொடர்ந்து நெடுந் தூரம் செல்லுகின்றன: கொடிகள் படர்ந்து நெடுந்தூரம் போகின்றன. கொடிகள், படர்ந்து செல்வதற்கு ஆதாரமான தொற்றுக் கொடிகளைக் கொண்டு மேலே ஏறுகின்றன.

மூங்கில் முதலிய சிலமாவகையின் வேர் நிலத்துள் ஊர்ந்து சென்று நெடுந்தூரத்தில் மேலே எழுகின்றன. ஆல் முதலிய மரங்களின் கிளைகளில் வீழ்து இறங்கி, பூமியில் வேர்கொண்டு மரமாகி நெடுந் தூரம் செல்லுகின்றது. இவையெல்லாம் மரவகைகள் இடம்விட்டுப் பெயர்வதைக் காட்டுவதற்கு, ஏற்ற திருஷ்டாந்தம் ஆகுமன்ரோ?



மரவகைகள், வர்க்க விருத்தி செய்கின்றன. அதற்கு அறிகுறியாக அவை அரும்பிப் பூக்கும். ஒவ்வொரு பூவிலும் ஆண்தத்துவமும் பெண் தத்துவமும் அடங்கியிருக்கும். சில செடிகளில் ஆண்மலர் வேருகவும், பெண்மலர் வேருகவும் இருப்பதுண்டு. சில மரங்களில் ஆண்வேருகவும் பெண்வேருகவுமே இருக்கும். பூசணிக் கொடியில் ஆண்மலரும் பெண்மலரும் வேறுவேருக இருப்பதை அனைவரும் அறிவர். ஆண்மரம் பெண்மரம் என்னும் பிரிவு பனைமரத்தில் இருப்பது எவருக்குந் தெரியுமே. பேரீச்ச மரத்திலும் இவ்வகையான வேற்றுமை இயன்றுள்ளது.

மலரில், ஆண்தத்துவத்தைப் பெண்தத்துவத்தில் சேர்ப்பது பெரும்பாலும் வண்டுகளும் இக்களுமே யாகும்; காற்றடிப்பதனாலும் அவ்விரண்டும் கலப்பதுண்டு. கலக்கவே, பெண்மலர்கள் கருக்கொள்ளும். அதன் பின்னர், பூவிதழ்கள் வாடி உதிரும். காய் முதிர்ந்து செங்காய் ஆகிப் பழுக்கும். அப்பழங்களிலுள்ள கொட்டைகளுக்கு யாதோர் இடையூறும் நேரிடாமல் சதைப்பற்று மூடிக்கொண்டு இருக்கிறது. அந்தச் சதைப்பற்றை ஏற்றவாறு தோல் கவிந்து காத்துவருகின்றது. இதனால் உயிர்த் தொகைகளைப் போலவே, மரவகை வர்க்க விருத்தி செய்கின்றன என்பது நன்கு புலனாகும்.



மரவகைகள் மற்றொரு சிறந்த செயலையும் செய்கின்றன. அஃதாவது :

வேர், அடிமரம், கிளை, இலை, பட்டை ஆகிய இவற்றை மரம் தன்னைக் காத்துக் கொள்வதற்கே கொண்டிருக்கின்றது; பூ, காய், கனி ஆகிய இவற்றைத்தனக்காகவும்பிறருக்காகவும் கொண்டிருக்கின்றது. பூத்த பூக்களெல்லாம் காயானால், அவையெல்லாம் பழுத்துக் கொட்டையானால், அவை யெல்லாம் வளர்ந்து மறுபடியும் மரமானால், இவ்வுலகத்தில் இடம் போதுமா? ஒரு மரம் அல்லவே; ஒரு செடி அல்லவே; ஒரு கொடி அல்லவே! பல்லாயிரம் மரங்களும் செடிகளும் கொடிகளும் பரவியிருப்பதனால், அவற்றுள் ஒவ்வொன்றும் ஆயிரக் கணக்கான மரவகைகளை விருத்திசெய்வதென்றால், உலகம் இடங்கொள்ளுமா? அல்லது, அவை ஒன்றின்மேல் ஒன்று விழுந்து அழிந்து நசித்துப்போகநேரிடுமே! அவ்வாறின்றி, பூவும் காயும் கனியும், மாந்தர்களுக்கும் விலங்கு பறவை முதலிய உயிர்களுக்கும் பயன்படுகின்றன அன்றோ? அதனால் மரவகைகள், தமக்கும் பிறருக்கும் பயன்படும் கடமையை உலகத்துக்குத் தெரிவிக்கின்றன. மாந்தரோ, தேடியவற்றை யெல்லாம் தாமே அனுபவிக்க வேண்டும்; பிறருடைய சொத்தும் தமக்கே வருதல் வேண்டும் என எண்ணுவர்; 'அகிலமெல்லாம் கட்டி ஆளினும் கடல்மீதிலே ஆணை செலவே நினைவர்.' ஆதலால், மனிதரைக்காட்டிலும் மரவகைகள் சிறந்தவையென்பதும்,

சிறந்த வாழ்க்கை யுடையவை என்பதும் தெள்ளிதின் விளங்குமன்றோ?

மேற்கண்ட நியாயங்களால் மரவகைகளும் உயிருள்ளவை என்பதும், அவை, மற்ற உயிர் வகைகளைவிட ஒருவாறு உயர்வான செய்கையை உடையவை என்பதும் தெளிவாகும்.

13. தொத்து நோய் பரவும் விதம்

தொத்துநோய் பரவுவதற்கு முதற்காரணமாயிருப்பது தூய்மை யற்ற தண்ணீரே யாகும். பொதுவாக, நாம் உட்கொள்ளும் தண்ணீர் தூய்மை யற்றதாக இருப்பின், அது பற்பல வகையான நோய்களை உண்டாக்கிவிடும். அதனால், உடல் நலத்தை விரும்புவோர் எவரும் தூய்மையான தண்ணீரையே உட்கொள்ளுதல் வேண்டும்.

தண்ணீர் மழையினால் நமக்குக் கிடைக்கின்றது. அம் மழைநீர் மிகத் தூய்மையானதே; அது பெய்யுங் காலத்தே வாயுவிலுள்ள அசுத்தங்கள் அதனோடு கலந்து தரைக்கு வருவதனால், அஃது ஒருவாறு அசுத்தம் அடைகின்றது. மழைநீர் பெருகி ஆறாக ஓடி, ஏரி, குளம் முதலிய நீர்நிலைகளை நிரப்புகின்றது. ஆகவே, மாந்தர்க்குப் பயன்படும் நீரெல்லாம், ஆறு, ஏரி, குளம்

முதலியவற்றினின்றே கிடைக்கும்; கிணற்றினின்றும் தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம். இந் நீர்நிலைகள் அனைத்தும் செவ்வையாகக் காக்கப்பட்டாலல்லது, இவற்றிலுள்ள நீர் தூய்மையாக இராது.

1. ஆற்றுநீர்: ஆறுகள் மலைகளினின்று தோன்றி மணற்பாங்கான பூமியில் செல்கின்றன. மழைபெய்து ஆற்றில் வெள்ளம் வரும் போது, மண் மரம் மட்டை முதலிய பொருள்களை அடித்துக்கொண்டு வருவதனால், அந்நீர் தூய்மையற்றதாகின்றது. அன்றியும், ஆற்றில் நீர்வற்றிய காலத்தில் மாந்தர் ஆற்றிலும் ஆற்றங்கரையிலும் செய்யுந் தீயசெயல்களினால் அந்த ஆற்றிற் பாயும் நீர் தூய்மை யற்றதாகின்றது. ஆற்றையடுத்த ஊர்களில் வாழ்பவர் பிணங்களை ஆற்றங்கரையில் வைத்துச் சுட்டெரிப்பதனால் அம் மலினமெல்லாம் ஆற்றில் கலக்கின்றது. அன்றியும், மாந்தர், ஆடுமாடுகளை ஆற்றில் குளிப்பாட்டுவதனால் தண்ணீர் அசுத்தம் அடைகின்றது. அதனால் அவ்வூர்களில் வாழ்பவர்கட்குத் தொத்துநோய் தொடர்ந்து பெருவாரியான தீமையை விளைக்கின்றது.

காவிரியாற்றின் தன்மையைக் கவனிப்போம்: புதுவெள்ளம் வரும்போது ஆற்றங்கரையிலுள்ள ஊர்களில் தொத்துநோய் தொடங்குகின்றது. வாந்திபேதி முதலிய தொத்துநோய் கண்டமாந்தரின் அசுத்தங்களை

ஆற்றில் கழுவுவதனல் அந்நோய் நெடுகத் தொடர்ந்துகொண்டே செல்கின்றது. அந்தோ, நம் நாட்டு மக்கள் கொண்டுள்ள அறியாமை-தான் என்னே! புதுவெள்ளம் வரும்போது அந்நீர் உடம்பிற்கு ஒத்துக்கொள்வ தில்லை யென்று அனைவரும் கூறுவர். ஆயினும், அத் தீமை எப்படி உண்டாகின்றது என்பதைப் பலர் அறிந்திலர்.

2. ஏரிநீர்: இது பெரும்பாலும் ஆற்றுநீர் வந்து தங்குவதாகும்; ஆற்றுநீரில் காணும் அசுத்தங்களெல்லாம் ஏரிநீரிலும் கலந்திருக்-கும். ஏரியிலும் ஏரியின் கரையிலும் மாந்தர் செய்யும் அசுத்தங்கள் அனைத்தும் அந் நீரிற் கலந்துகொள்ளும். ஆகவே, ஏரிநீர், ஆற்று நீரைக்காட்டிலும் மிக்க அழுக்கடைந்ததாகும். ஆற்றுநீர் ஓடிக்கொண் டிருப்பதனல் அசுத்-தங்கள் அடியிற் படிந்துவிடும். ஏரிநீர் ஒரே யிடத்தில் நிலைத்து இருப்பதனல் அதிலுள்ள அசுத்தம் அடியிற்படியச் சிலநாள் செல்லும். அதனல், ஏரியில் எவ்விதமான அசுத்தங்களையும் செய்யாமலும், தொத்துநோய் கண்டவர்களின் துணி முதலியவற்றை அதனில் தோய்க்கா-மலும் பாதுகாத்தல் வேண்டும்.

3. குளம்: ஏரியைக்காட்டிலும் மிகச் சிறிய நீர்நிலை குளமாகும். குளத்தில் நம்மவர் செய்-யும் தீயசெயல்கள் மிகப்பல. சில இடங்களில், குளிப்பதற்கும் குடிப்பதற்கும் ஒரே குளம்.

உண்டு. அதில் மாந்தர் குளிப்பதே யன்றி அழுக்காடைகளையும் துவைக்கின்றனர்; ஆடு மாடுகளையும் குளிப்பாட்டுகின்றனர். இவையே யன்றி, ஊரில் தொத்துநோய் பரவுங்காலத்தில் அந்நோய் கண்டவர்களது ஆடை, அசுத்தம் முதலியவற்றை அக் குளத்துநீரில் கழுவி விடுகின்றனர். அந்தோ, அந்நீரையே மாந்தர் குடிக்கவும் கொண்டு போகின்றனரே! மாந்தரின் மதியீனத்தை என்னென்று கூறுவது!

4. கிணறு: மற்ற நீரைக் காட்டிலும் கிணற்றுநீர் ஒருவாறு தூய்மையானதே. ஆயினும், நிலத்தின் இயல்பால் நீரின் இயல்பு மாறுபடும். அதனால் கிணற்றுக்கு வாய்ப்பான நல்ல நிலம் கிடைத்தல் வேண்டும். சிலர், 'இக் கிணற்றுநீர் சர்க்கரையைப் போலச் சுவையாயிருக்கும்' என்பர். நல்ல நீருக்குச் சுவையும் இல்லை, மணமும் இல்லை, நிறமும் இல்லை என்னும் உண்மையை அன்னார் அறியார் போலும்! கிணற்றுநீரை நம்மவர் பெரிதும் கெடுத்துவிடுகின்றனர். வீட்டுச் சாக்கடைக்கால் பெரும்பாலும் கிணற்றுக்கு அருகிலேயே செல்வதனால், அதன் அசுத்தமெல்லாம் ஊறிக் கிணற்றில் இறங்கும். கிணற்றினின்றும் சேந்தும் நீர் தரையில் சிந்துவதனால், அத் தரையின் அசுத்தமெல்லாம் கிணற்றில் சேரும். இவை முதலியவற்றால் கிணற்று நீரும் அசுத்தம் அடைகின்றது.

சிலர், 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழித்தல் ஆகாது' என்று கூறி, எவ்வளவு அசுத்தமான நீரையும் பருகிவிடுவர். அந்தோ, இவர் தம் அறியாமை என்னே! திருக்குளம் முதலிய நீர்நிலைகளில் செய்யும் தீமைக்கு ஓர் அளவும் உண்டோ! திருக்குளத்தில் மூழ்கினால் தாம் செய்த தீமை ஒழியும் என்னும் உறுதிகொண்டு, தொழுநோய் முதலிய பெரும்பிணியாளரும் அந்நீரில் மூழ்கித் தம் உடலைக்கழுவுவர். சொறி சிரங்கு முதலிய தோலைப்பற்றிய நோயுள்ளார் அதனில் மூழ்கினால், அத் தொழுநோய் அவரைப் பற்றிக்கொள்ளுமே! எலும்புருக்கி நோய், இழல் நோய் முதலியவற்றைக் கொண்டுள்ள நோயாளிகள் உமிழும் நீரை மற்றையோர் உட்கொள்வதனால் அந்நோய்கள் அவரையும் பற்றுமே! அதனால், நீங்காத நோயாளிகள் அந்நீர்நிலைகளில் இறங்காமல் இருப்பதே உத்தமமாகும்.

தூய்மையான நீரை உட்கொள்ள விரும்புவோர், தமக்குக்கிடைக்கும் எத்தகைய நீரையும் நன்றாகக் காய்ச்சி, வடித்து, உட்கொள்ளுதல் வேண்டும். குளிர்நீர் வேண்டுவோர், அவ்வாறு காய்ச்சி ஆறிய நீரையே உட்கொள்வார்களாக.

கருத்திற்கேற்கவே கடவுளுருவங்கள்

மக்கட்பிறவியே மற்றைப் பிறவிகள் அனைத்திலும் சாலச் சிறந்ததென்பது எவர்க்கும் ஒப்ப முடிந்ததாகும். ஆயினும், மானிடன் எவ்வகையிற் சிறந்தவன் என்பதைப்பற்றி அறிஞர் பலவாறு கருதுகின்றனர். ஒருசாரார், 'எல்லாவுயிர்களிலும் மானிடன் அறிவுவிளக்கம் பெற்றிருப்பதனால், அவன் உயர்ந்தவனாகின்றான்' என்பர். அக் கூற்றுக்குத் தடையாகச் சில செய்திகள் உள. மானிடன் கொண்டுள்ள உருவிலும் ஆற்றலிலும் கோடி பங்கிற்கும் குறைந்துள்ள சிற்றெறும்புகள், தமக்குவேண்டிய உணவுப் பொருள்களைத் தேடுவதிலும், அவற்றை ஓர் இடத்தில் சேமித்து வைப்பதிலும் அடைந்துள்ள பேரறிவை என்னென்று எடுத்துக் கூறுவது! மானிடன் அறிவு, அச்சிற்றுயிரின் அறிவுக்கு எள்ளளவும் இணையாகாதே என்று வியக்கத்தக்க தாகுமன்றே.

சிலந்தி தன் வலையைப் பின்னுவதையும் தேனீ தன் கூட்டை அமைப்பதையும் கண்டு வியவாதார் யாவர்! தூக்கணங்குருவி தன் கூட்டைப் பின்னி அமைப்பதுபோல, மாந்தர் தம் வாழ்நாள் முழுதும் முன்னி முயன்றாலும் செய்து முடிக்க முடியுமோ! இதுகொண்டே,

'வான்குருவியின்கூடு வல்லரக்குத் தொல்கரையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்வரிதால்.'

என்னுஞ் செய்யுளடி வழங்குவதாயிற்று. இவ்வாறு எறும்பி முதல் எறும்பு இருகவுள்ள அஃறிணைப் பொருள்கள், இயற்கையிற் செய்து-வரும் இயல்புகளை நோக்கின், அவற்றின் அறிவின் சிறப்பு விளங்குமன்றோ! இவற்றால் சிற்றுயிர்களின் செயல், மானிடரின் செயலைக்-காட்டிலும் மிகச் சிறந்ததென்பது தெள்ளிதின் விளங்குமே! அதனால், மானிடன் மற்றைய உயிர்களைவிட அறிவு விளக்கம் பெற்றவன் என்பது எவ்வாறு பொருந்தும்.

மற்றுஞ் சிலர், 'மாந்தர், கடவுள் ஒருவர் உண்டு என்னுங்கருத்துடையரா யிருத்தலினால், மற்றைய உயிர்களிலுஞ் சிறந்தவர் ஆவர்' எனக் கருதுகின்றனர். இதுவே ஒருவாறு தக்க காரணம் ஆகலாம்போலும். மாந்தர் ஒருவருக்-கொருவர் சிறிதும் இயைபில்லாத வேறு வேறு தேயங்களில் வாழ்ந்திருப்பினும், அவர்களுள் பெரும்பாலாரிடத்து 'கடவுள் ஒருவர் உண்டு' என்னுங் கருத்து அமைந்திருப்பதைக் காண்-கின்றோம். அதனால், அவரவர் கருத்துக்கு ஏற்பவே கடவுளுருவங்கள் அமைவனவாயின. கடவுளுக்குரிய பொதுத் தன்மையைக் கூறுங்-கால், எவருக்கும் கருத்து வேறுபடுவதில்லை; விரோதமுமில்லை. அஃதாவது, 'கடவுள் எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிந்தவர், எல்லாம் வல்லவர்' என்று கூறின், எவர்க்கும் கருத்து-வேறுபாடு ஏற்படுவதில்லை. அத் தன்மைகள்

அனைத்தும் வாய்ந்தவர் சிவபெருமானே, திருமாலே, அருகனே, புத்தனே என்று குறிப்பிட்டுக் கூறின், வேற்றுமையான கருத்துக்கள் தோன்றுகின்றன. ஆதலின், அருவமான கடவுளுக்கு உருவங்கள் அமைக்கும்போதே மதபேதங்கள் உண்டாகின்றன. அவ்வாறு உருவங்கள் அமைக்கையில், மாந்தர் தத்தம் கருத்துப்போல் அமைத்து விடுகின்றனர். அதற்கேற்பச் சாஸ்திரங்களும் ஏற்படுகின்றன.

நாகரிகம் என்பதைச் சிறிதும் அடையப் பெருத சில ஜாதியார், ஆங்காங்கே சில தீவுகளிலும் தேசங்களிலும் வாழ்கின்றனர். அத்தகையோர்க்குக் கடவுள் என்ற எண்ணமே இடையாது' என்று பூவலம் செய்த அறிஞர் சிலர் கூறுகின்றனர். மனோதத்துவத்தையுணர்ந்த அறிஞர் அதனை ஆராய்ந்து, அஃது உண்மையல்ல என்பதற்குப் பல ஆதாரவுகள் காட்டுவர். நாகரிக மற்ற அந்த ஜாதியார், கடவுள் உண்டு என்னும் எண்ணத்தைக் கொள்ளாவிடினும், தமக்கு மேற்பட்ட பொருள் ஒன்று உண்டு என்று கொண்டு, மரம், கல் முதலிய பொருள்களையேனும் வணங்குவர்; மானிடன் என்னுஞ் சொல்லுக்கு விரிவுரை கூறப் புகுந்த விற்பனர், 'மானிடன், கடவுள் என்னும் ஒரு பொருள் உண்டு என்னும் உண்மையை நம்பியஓர்உயிராவன்' எனவிளக்கினர்

அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலியகண்டங்களில் வாழும் வாலில்லாக் குரங்குகள் மனிதர்களைப்போலவே உருக்கொண்டிருப்பினும், அவை மனிதர் ஆகமாட்டா. அவைகளிடத்துக் கடவுள் உண்டு என்னும் எண்ணம் அறவே கிடையாது. மானிடவர்க்கத்துள் சேர்த்து எண்ணப்படும் யாவரிடத்தும் தெய்வபாவனை இயற்கையில்' அமைந்துள்ளது. அது, முதலில் எப்படி உண்டாயிற்று? இல்லாத கருத்து உண்டாதல் எங்ஙனம்? அதனால், தெய்வபாவனை மாந்தரிடத்து இயற்கையில் உண்டான இலட்சணம் என அறிஞர்பலர் கருதுகின்றனர். அது, முதலில் அறிஞனொருவன் நினைத்து நிச்சயித்ததனால் உண்டான கருத்தாகவும் இருக்கலாம்; அக் கருத்து நாளடைவில் பரவி மாந்தர் மனத்தில் உறுதியாக ஏற்பட்ட நம்பிக்கையாகவும் இருக்கலாம். எவ்வாறாயினும், கடவுள் உண்டு என்னும் நம்பிக்கையே பெரும்பாலும் உலகமெங்கும் பரவியுளது. ஆயினும், அவரவர் தம் தம் கருத்துக்கு ஏற்பவும், கொள்கைக்கு ஏற்பவும் கடவுளுக்கு உருவங்கள் அமைத்து வழிபடுகின்றனர்.

ஒரு காலத்தில் இவ்வுலகத்தில் பெரும்பாகத்தைத் தன்னுள் அடக்கி ஆண்டு வந்த ரோமாபுரியைக் கைப்பற்றி, அதன் சிறப்புக்களை எல்லாம் சிதையச்செய்த ஸிதியா என்னும் தேசத்தவர்களும், ஐரோப்பாக் கண்டத்து

வடக்குப் புறத்தி லுள்ள சில ஜாதியாரும் வழிபட்டுவந்த கடவுளுருவங்கள் மிக்க கொடியவை; கோரமானவை. சிற்றரசர் பலரை வதைத்துக்கொன்று, இரக்கம் என்பது இம்மியும் அமையப்பெறாது, தம் பகைவரது இரத்த வெள்ளத்தில் நீந்துவதே பிறவிக்குப் பெரும் பயனாகும் என்று அன்னார் கருதியிருந்தனர்; அமர்க்களத்தில் உயிர்துறந்த அரிய வீரர்களே மறுமையில் கடவுளர் ஆகின்றார்கள் என்னும் மதசித்தாந்தத்தை அன்னார்கொண்டிருந்தனர். அவ்வாறே அளவிறந்த மக்களை வருத்தி, போர்க் களத்தில் மாண்ட வீரர்களையே அத்தேயத்தினர் வழிபட்டு வணங்கி வந்தபடியால், அக்கொடூர குணமே அவர்களுக்குப் படிந்தது. தீராப் பிணியினால் ஒருவன் வருந்தி உடல் மெலிந்து இறந்துபடுவானாயின், அவனுக்கு வீடுகிடைக்காது என்பது அவர்களது மதசித்தாந்தம்; ஆதலின், அம்மாந்தர் பிறரை வருத்தி வதைப்பதே தம்கடமையென்று கருதிவந்தனர்.

வேறு சில மதவாதிகள், தம் பகைவரது மண்டையோட்டைப் பாத்திரமாகக் கொண்டு, அதில் அப்பகைவரது உதிரத்தை வார்த்துக் குடித்துக்கொண்டிருப்பதே ஒருவன் அடையத்தக்க வானுலக இன்பம் என்று கருதியிருந்தனர். ஆகவே, ஆத்தகைய பகையும், கொலையும், அருளின்மை முதலிய குணங்களும் அன்னார் கொண்டிருந்த இயல்புகளாம்.

பண்டைக் காலத்தில் சித்திரம், சிற்றுளிவேலை முதலிய அரியதொழில்களில் பேர்பெற்றிருந்த எகிப்து தேசத்தவர்கள், அந்த அரிய தொழிலில் அவ்வளவு சிறந்த புலவர்களாயிருந்தமைக்குக் காரணம், அவர்கள் வழிபட்டு வந்த கடவுளுருவங்களே யாகும். எகிப்தியர், பற்பல விலங்குகள் பறவைகள் முதலியவற்றின் உருவங்களையே கடவுளுருவங்களாக எண்ணி, அவற்றைக் கல்லிலும் பலகை முதலியவற்றிலும் அழகு பெற வரைந்து, அவற்றிற்கு வழிபாடு செய்து வந்தனர். இத்தகைய உருவங்களே, அவர்கள் மனத்தில் இடையறாது படிந்திருந்தமையால், அந் நாட்டினர் சிற்பத்தில் தேர்ச்சி பெற்று விளங்குவாராயினர்.

கிரீஸ் தேசத்துத் தலைநக ராகிய காரிந்து என்னும் பதியில் வாழ்ந்த மக்கள், இன்பக்கடவுளையே ஏத்தி வழிபட்டு வந்தமையால், அவர்கள் இவ்வுலக இன்பத்திலேயே மூழ்கிக்கிடந்து நாளடைவில் நசித்துப் போயினர்.

நமது நாட்டிலும் போர்வீரர்கள், காளி முதலிய தெய்வங்களைப் பண்டைக் காலத்தில் வழிபட்டு வந்ததனால், அன்னார் வீராவேசங் கொண்டு விளங்கினர்.

சீன தேசத்தில், புத்தருடைய உருவத்தை எப்பொழுதும் வழிபட்டு வருபவன் பௌத்த குரு ஆகின்றான் என்னும் சித்தாந்தம் இன்றும் வழங்கி வருகின்றது.

மேற்கண்ட நியாயங்களால் ஒருவன் தன் உபாசனாமூர்த்தியாகக் கொண்டுள்ள உருவங்களுக்கேற்பவே, அவனுக்குக் குணம் அமைகின்றது என்பது புலனாகும். அதனால் அவரவர் தம் கருத்திற்கேற்பவே கடவுளுருவங்கள் அமைக்கின்றனர் என்னும் சித்தாந்தம் ஏற்பட்டிருக்கின்றது.

15. கிரகங்கள்

(1) சூரியன் — கிரகங்கள் எல்லாவற்றுள்ளும் மிகப் பெரியது சூரியன். சூரியன் நடுவில் நின்றுகொண்டு மற்றைக் கிரகங்களை இயக்குகின்றது. அதனைச் சுற்றிச் சிறியவும் பெரியவுமாகிய கிரகங்கள் பல ஓடுகின்றன. அவற்றுள் மிகப் பெரிய கிரகங்கள் ஒன்பதாகும். சூரியனை அடுத்துப் புதனும், சுக்கிரனும், பூமியும் அமைவுற்றுச் சுழல்கின்றன; அவற்றை அடுத்துச் செவ்வாய், வியாழன், சனி, யூரேனஸ், நெப்டியூன் என்னும் கிரகங்கள் சுற்றி வருகின்றன.

புதன் முதலிய கிரகங்களெல்லாவற்றிற்கும் ஒண்மையையும் வெம்மையையும் உதவுவது சூரியனே. சூரியனது பேரொளியினை நம் வெறுங் கண்ணாற் காணுதல் இயலாது.

அதனால், வான சாஸ்திரிகள் தூரதிருஷ்டி என்னும் கருவியில் வர்ணக்கண்ணாடிகளைப் பூட்டிச் சூரியனைப் பார்க்கின்றார்கள்.

சூரியனது ஒளியில் பல நிறங்கள் அமைந்துள்ளன என்பதை அனைவரும் அறிவர். அவற்றைப் பரிசோதித்த அறிஞர் பலர், அவ்வொளியில் இரும்பு, நிக்கல், செம்பு, நாகம், சோடியம், வேரியம் என்னும் பல பொருள்கள் கலந்துள்ளன எனக் கண்டிருக்கின்றனர்.

சூரியனிடத்தினின்று வரும் வெம்மையும் ஒண்மையும் இல்லாவிடின், உலகத்தில் புல், பூடு முதலிய ஓர் அறிவுயிர்களும் உயிர்வாழமாட்டா. அவ்வொளி பரவாவிடின் மழையும் பெய்யாது.

சூரியன் வானத்தில் நின்று, மக்களின் மனத்தைக் கலைக்கும் மாசுகளை அகற்றுகின்றான் என்று, யவன ஆசிரியருள் சிறந்தவரான பிளைனி என்பவர் கூறியுள்ளார்.

(2) சந்திரன் — இது, நாம் கண்கூடாகக் காணும் கிரகமாம். சந்திரன், பூமியைச் சுற்றி ஓடும் ஓர் உபக்கிரகமாகும். சந்திரன், ஒரு மாதத்திற்குள் வளர்ந்துதேய்வதைக்காண்கின்றோம். சந்திரன் பூமியைச் சுற்றி ஓடுவதால் அவ்வாறு காண்கிறது. சந்திரன் மாதத்தில் ஒரு நாள் காணப்படுவதில்லை. அதற்குப் பதினைந்தாம் நாள் பூர்ணசந்திரனாகக் காணப்படும். மறுபடி பதினைந்து நாட்களுக்குள்

மறைந்துவிடுகின்றது. இரவில் வானத்தைப் பார்த்தால், சந்திரன் ஒளியுள்ளதோர் நட்சத்திரத்தோடு செல்லக்காண்போம். ஒருநாளுக்கு ஒரு நட்சத்திரமாக இருபத்தேழு நட்சத்திரத்தோடுஞ் சென்று, மறுபடி முதல் நட்சத்திரத்தைச் சேரும். இதனைக் கொண்டு சந்திரன் பூமியை இருபத்தேழு நாளில் சுற்றிவருவதாகக் கணக்கிட்டிருக்கின்றனர். ஆனால், பூமி தன்னைத் தானே சுற்றுவதனாலும், சூரியனைச் சுற்றி ஓடுவதனாலும் நிலைபெயர்ந்து இருக்குமாகையால், பூமியில் ஒரு குறித்த இடத்தைச் சந்திரன் அடைய, இன்னும் அதிகமாக இரண்டரை நாட்கள் வேண்டும். ஆகவே, சந்திரன் பூமியைச் சுற்ற 29½ நாட்கள் வேண்டும் எனக் கணக்கிட் டிருக்கின்றனர்.

இதுவன்றி, சந்திரன், சற்றேறக்குறைய 29½ நாட்களில் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் வருகிறான் என்று கணக்கிட்டிருக்கின்றனர். அதனால் அமாவாசையும் பௌர்ணமியும் 15 நாட்களுக்கு ஒரு முறை உண்டாகின்றன.

சந்திரனுக்கு இயல்பாய் ஒளியில்லை; அது சூரியனிடமிருந்து ஒளியைப்பெற்று வீசுகிறது. அதனால் அது பூமியைச் சுற்றி ஓடும்போது பூமி மறைக்காத இடங்களில் விழும் சூரிய கிரணங்களின் ஒளியே நமக்குத் தெரிகிறது. அதற்குத் தக்கவாறு சந்திரனுடைய கலைகள் வளர்வதும் தேய்வதும் ஆகின்றது.

சந்திரன் முழுவுருவா யிருக்கும்பொழுது அதனைப் பார்ப்போமாயின், சில பாகங்கள் வெண்மையாகவும், சில பாகங்கள் கருமையாகவும் இருக்கக் காண்போம். அவை, மலைகளும் பள்ளத்தாக்குக்களும் நிறைந்த இடங்களென்று அறிஞர் கண்டிருக்கின்றனர்; எரிமலைகளும் அதில் உண்டு என்கின்றனர்.

(3) அங்காரகன்—இதற்குச் செவ்வாய் என்றும்பெயர். இதனைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியின் மூலமாகப் பார்க்குங்கால், இது செந்நிறமுள்ளதாகத் தோன்றுகின்றது. பூர்விகரோமர்கள் இதன் செந்நிறம், போர்க்களத்திற்காணும் உதிர வெள்ளத்திற்கு ஒப்பென்று எண்ணி, இதனைப் போர்க்கு உரிய அதிதேவதையாகக் கொண்டு, வழிபாடு செய்துவந்தனர். இந்துக்களும் இந்தக் கிரகத்தை அவ்வாறே கருதியிருக்கின்றனர். சிவபெருமானது நெற்றிக் கண்ணில் தோன்றி, அக்கினி யுருவம் வாய்ந்த சேந்தன் (செந்நிறமுள்ளவன்) என்னும் முருகக் கடவுளை, இந்தக் கிரகத்துக்கு அதிதேவதையாகக் கருதி வழிபடுவா ராயினர். அதனால், பூர்விக ரோமர்களும் இந்துக்களும் ஒரே விதமான கருத்துடையவர்கள் என்பது பெறப்படும். இந்தக் கிரகத்தில் செந்நிறமாகக் காணப்படும் பாகம் நிலம் என்றும், பசிய நிறமாகக் காணப்படும் பாகம் நீர் என்றும் ஐரோப்பிய வானசாஸ்திரிகள் அபிப்பிராயப்

படுகின்றார்கள். இதற்கு இரண்டு சந்திரர்கள் உள்ளன.


(4) புதன்—இந்தக் கிரகம் சூரியனுக்கு அதிக சமீபத்தில் இருக்கின்றது. ஆகையால், ஏனையகிரகங்களில்வசிக்கும் உயிர்வகைகளைவிட இதிலுள்ளவை அதிக உஷ்ணத்தைத் தாங்கத்தக்க கருவி கரணங்களை உடையவையா யிருத்தல் வேண்டும். இந்தக் கிரகம் பெரும்பாலும், சூரிய கிரணங்களினால் மறைபடுவதனால், நமது கண்ணுக்குப் புலப்படுவதில்லை. இது சூரியனைச் சுற்றிவர 3 மாதஞ் செல்லும். நமது பூமியோ சூரியனைச் சுற்றிவர 12 மாதமாகும். ஆகவே, நமக்கு 3 மாதகாலம், புதக்கிரக வாசிகளுக்கு ஒரு வருஷ காலமாகும். இந்துக்களின் புராண சித்தாந்தப்படி, புதன் சந்திரனுக்குப் புதல்வனாவன். பூர்விக ரோமர்கள் புதனைத் தேவர்களுக்குத் தூதனாகவும்,துவிபாஷியாகவும் கருதியிருந்தனர்; சொல்வன்மைக்கும் வர்த்தகவிருத்திக்கும் புதன் அதிதேவதை என்னும் கருத்துடையவர்கள். பிரகஸ்பதிக்குப் புதன் புதல்வனாகும் என்றும் கருதியிருந்தனர்.

(5) பிரகஸ்பதி—இதற்கு வியாழன் என்றும் பெயர்; இந்துக்கள் இதனைத் தேவகுரு என்பர். பூர்விக ரோமரும் இக்கிரகத்தைத் தேவதைகளுக்கெல்லாம் தலைமை பெற்றது எனக் கொண்டு வழிபட்டு வந்தனர். இக்காலத்து வான சாஸ்திரத்தின்படி, இது, சகல கிரகங்-

களிலும் தன் பரிமாணத்தில் மிகப் பெரியது. இந்தக் கிரகத்தைச் சுற்றிலும் 4 சந்திரர்கள் இருக்கின்றன. இது, சூரியனை ஒரு முறை சுற்றி வருவதற்குள், பூமி 12 முறை சுற்றி வருகின்றது. ஆகவே, நமக்கு 12 வருஷகாலம், பிரகஸ்பதி மண்டலத்துக்கு 1 வருஷகாலமாகும்.

(6) சுக்கிரன் — இதற்கு வெள்ளி என்றும் பெயர். நம்மவர், இவன் பிருகுரிஷியின் புத்திரன் என்பர். சுக்கிரன் பூமியைக் காட்டிலும் சிறியதாம். பூமிக்கு அருகிலுள்ள கிரகங்களுள் சந்திரன் முதன்மையானது. சுக்கிரன் அதனை அடுத்ததென்று சொல்லலாம். புதனும் சுக்கிரனும் பூமியைவிடச் சூரியனுக்கு மிக்க அருகிலிருப்பதனால், அவை நம் தலைக்கு நேர்மேலாக ஒருபோதும் தோன்றுவதில்லை. புதன் எக்காலத்தும் சூரியனுக்கு அருகில் இருப்பதாகத் தோன்றுகின்றது. சுக்கிரன், சூரிய உதயத்துக்கு முன்னராயினும், சூரிய அஸ்தமனத்துக்குப் பின்னராயினும், நமக்குப் புலப்படுகின்றது. நமக்கு $7\frac{1}{2}$ மாத காலத்தில் சுக்கிரன் சூரியனை ஒரு முறை சுற்றி வருகின்றது.

(7) சனி — இந்தக்கிரகம் ரோமருடைய சித்தாந்தப்படி ஒரு முக்கியமான தேவதையாகும். இதை அவர்கள் மிக்க அன்புடன் வழிபட்டு வந்தார்கள். இந்துக்களின் புராண சித்தாந்தப்-



படி, சனி சூரியனுக்குக் குமாரனுவன். அவன் ஒரு கறுப்பு அங்கியை அணிந்து, காக்கை வாகனத்தில் திரிவான். சகல கிரகங்களினும் சனி அதிக தூரத்திலிருப்பதனுல், அது நமக்கு மங்கலாகத் தோன்றும். பரிமாணத்தில், சனி, பிரகஸ்பதிக்கு அடுத்தது என்று சொல்லலாம். தூரதிருஷ்டிக் கண்ணுடியைக்கொண்டு சனிக்கிரகத்தைப் பார்த்தால், அதைச் சுற்றிலும் வளையங்கள் இருப்பன போலக் காணப்படும். சனிக்கு 8 சந்திரர் உள்ளன; அந்தக் கிரகத்தின் இயக்கம் அதிக மெதுவானது. ஆகையால், அது சூரியனை ஒரு முறை சுற்றி வருவதற்குள், பூமி சூரியனை முப்பது முறை சுற்றி வரும்.

(8) யூரேனெஸ்; 1781 — ஆம் யாண்டு மார்ச்சுமீ 13-ஆந்தேதி சுமார் 10, 11 மணிக்கு ஸர் உவில்லியம் ஹெர்ஷேல் என்பவர் தூரதிருஷ்டியைக் கொண்டு மிதுனராசியைப் பரிசோதிக்கும் போது, அதனிடையே ஒரு கிரகத்தின் கடைப் பகுதி காணப்பட்டது; அதனைப் பின்னும் ஆராய்ந்தபோது, அஃது ஒரு கிரகமாக இருக்க வேண்டும் எனக் கண்டனர்; பின்னும், ஆராய்ந்து அதன் சுழற்சியைக் கொண்டு, அஃது ஒரு முறை சூரியனைச் சுற்றிவர 84 யாண்டுகள் பிடிக்கும் என்று கணக்கிட்டனர். இதற்கு யூரேனஸ் என்று பெயரிட்டிருக்கின்றனர்.

(9) நெப்தியூன்: யூரேனஸ் என்னுங்கிரகத்தை ஆராய்ந்துகொண் டிருக்கும்போது, அதன் ஓட்டம் சரிவர இல்லாமலிருக்கக் கண்டனர். அதனால் அந்தக் கிரகத்தை மற்றொரு கிரகம் பற்றி யிழுக்கிறது எனக் கண்டு, அது இருக்கவேண்டிய இடத்தையும் ஒருவாறு ஊகித்தனர். 1846-ஆம் ஆண்டு செப்டெம்பர் மீ 25உ அந்தக் கிரகத்தைக் கண்டுபிடித்து, அதற்கு நெப்தியூன் என்னும் பெயரையும் வழங்கினர்.

ஆகாயப் பரப்பில் எண்ணிறந்த உடுத்திரள்கள் அமைந்திருக்க, அவற்றுள் முக்கியமான ஏழு கிரகங்களை அறிந்து, அவற்றின் இயக்கத்தைக் குறித்தும், இலட்சணத்தைக் குறித்தும், தூரதிருஷ்டிக்கண்ணாடி முதலிய கருவிகளில்லாத பண்டைக்காலத்தில், ஊகித்தறிந்த இந்துக்களின் பேரறிவு மிகவும் பாராட்டத்தக்கது. கிரகண காலங்களை இம்மியளவும் பிசகாது குறித்துக் கூறிய அவர்கள் அறிவே அறிவு! பாஸ்கராசாரியர் என்னும் வான சாஸ்திரி இந்துக்களுக்குள் மிக்க அறிவு வாய்ந்தவர்; பெரும் புலவர். அவர் கணித்து வைத்த அருமையான விஷயங்கள் சிலவற்றை, இக்காலத்தே ஐரோப்பிய வானசாஸ்திரிகளும் சரியானவை யென்று ஒப்புக்கொண்டு வியக்கின்றார்கள்.

ஆகாயத்திலுள்ள கிரகங்களுக்கும், பூமியிலுள்ள மாந்தருக்கும் அதிக சம்பந்தம் உண்டு


என்பது இந்துக்களின் சித்தாந்தம். அதைப் பற்றிய உண்மைகளை விளக்குவதற்கு ஏற்ற நூல்கள் இப்போது கிடைக்காமையால், அவ்வுண்மைகள் நமக்குத் திட்டமாக விளங்கவில்லை. பௌர்ணமி காலத்தில் கடலில் அலைகள் உயர எழுகின்ற அதிசயத்தையும், அமாவாசை காலத்தில் இப் பூமியிலுள்ள சில கற்களில் கரும்புள்ளிகள் தோன்றுவதையும், இவை முதலான விசித்திரங்கள் உண்டாவதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

அமாவாசை கிருத்திகை முதலிய தினங்களில் பிணியாளர்களுக்கு நோய் அதிகப்படுவதையும், பிணியாளர்களுள் பெரும்பாலார் அந்நாளில் மரிப்பதையும் எண்ணிப்பார்க்கின், நெடுந்தூரத்திலுள்ள அந்தக் கிரகங்களுக்கும், இந்தப் பூமியிலுள்ள மாந்தர்களுக்கும் ஏதோ இயைபு இருப்பதாகத் தெரிகின்றது. மேன்மேலும் ஆராய்ச்சி செய்வதனால் அந்த உண்மைகள் உலகத்தார்க்குப் புலப்படலாம்.

16. திருச்சிராப்பள்ளி

பண்டைக் காலத்தே தமிழ் நாட்டை அடிப்படுத்து ஆண்டுவந்த முடியுடை மன்னர் மூவருள் சோழன் ஒருவன். 'சோழ வளநாடு சோறுடைத்து' என்பர். உறையூர், சோழ நாட்டிற்குத் தலைநகராய் விளங்கி யிருந்தது; புகார் அதற்குத் துறைமுகம். கரிகால் வளவன் முதலிய சோழமன்னர் பலர், அந்நாட்டைப் பலவகையினுந் திருத்திச் சீர்பெறச் செய்தனர்.

ஒரு காலத்தில் பாண்டியர் ஆட்சி குன்றவே, வேறு சிற்றரசன் ஒருவன் அப் பாண்டி நாட்டை ஆண்டுகொண் டிருந்தபோது, சோழனொருவன் அவன்மீது படையெடுத்துச் சென்றான். அச் சிற்றரசன் விஜய நகரத்து மன்னனது உதவியை நாட, அவன் நாகமநாயக்கன் என்னுந் தண்டத் தலைவனை ஒரு பெரும்படையோடு அனுப்பினான். அவன் வந்து சோழனை வென்று, நாட்டைக் கைப்பற்றிக்கொண்டான். ஆயினும், அவன் தன் மனம்போனவாறே அரசாட்சிசெய்யத்தொடங்கினமையால், விஜய நகரத்தரசன், நாகமன் மகன் விசுவநாதன்கீழ் ஒரு பெரும்படையை அனுப்பி, நாகமனை அடக்குமாறு செய்தான்; பின்னர், விசுவநாதனையே இராஜப் பிரதிநிதியாக நியமித்தான். அதுமுதல் நாயக்கரது ஆட்சி சோழநாட்டில் தொடங்குவ தாயிற்று. கி. பி. 1559-ஆம்



7 மலைக்கோட்டை


யாண்டில், வடக்கே திருச்சி நீங்கலாக வல்லம் நாடுவரை அவன் ஆட்சியில் அடங்கியிருந்தது. ஸ்ரீரங்கம், திருவானைக்கா என்னும் க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்வோர் திருடர்பயத்தால் துன்புறுவது கண்டு, விஜயநகர அரசன், வல்லத்தைத் தஞ்சாவூரோடு சேர்த்துவிட்டு, திருச்சியை விசுவநாதனுக்கு அளித்தான். விசுவநாதன் திருச்சியில் ஒரு சிறந்த கோட்டை கட்டி, திரண்ட சேனைகளைச் சேர்த்துவைத்திருந்தான். அதுமுதல் திருச்சிநகர் சோணாட்டுக்குத் தலைமை நகராகி விளங்குவதாயிற்று.

விஜயரங்க சொக்கநாத நாயக்கன், கி. பி. 2704 முதல் 31 வரையில் அரசாட்சி புரிந்தான்; அவன் இறந்துவிட்டதும், அவன் மனைவியாகிய மீனாட்சியம்மை அரசாட்சியை நடத்தலாயினாள். அக் காலத்திற்றான் தாயுமானவர் என்னும் பெரியார், திருச்சிநகரில் தங்கி, அரசாட்சிக்கு உதவிபுரிந்து வந்தனர். அப்பொழுது அவளது சுவீகார புத்திரனுக்குத் தந்தையான பங்காரு என்பவன் திருச்சிநாடு தனக்கே உரியது என்று கூறத் தலைப்பட்டான். தலைப்படவே, மீனாட்சியம்மை மகம்மதியர் உதவியை நாடினாள். 1735-ஆம் வருஷம் சந்தா சாஹிப் அங்கு வந்தான். அவன் சிறிது சிறிதாக அரசாட்சியைக் கைக்கொண்டான். பங்காரு என்பவனும் தஞ்சாவூர் நாயக்கர்களும் மஹாராட்டிரர்

உதவியை நாடினர். அம் மஹாராட்டிரர் 1740-ஆம் யாண்டில் படையெடுத்து வந்து, சந்தாசாஹிப் என்பவனைச் சிறைப்பிடித்து, முராரிராவைப் பிரதிநிதியாக நியமித்துச் சென்றனர். 1748-இல் சந்தாசாஹிப் சிறையினின்றும் வெளிப்பட்டுத் தென்னாடு வந்து, திரும்பவும் படைகளைச் சேர்த்துக்கொண்டு திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றிக் கொண்டான். அப்பொழுது, முகம்மது அலி என்பவன் அங்கிலேயர் உதவியைவேண்டி, அவர்கள் உதவியினால் வெற்றி பெற்றான். அதனால் அங்கிலேயர் அந் நாட்டைக் கைப்பற்றித் தாமே கொண்டனர்.

திருச்சிராப்பள்ளியில் மலைக்கோட்டையொன்று விளங்குகின்றது; அது மிக்க அழகான தோற்றமுடையது. இக்காலத்தில் திருச்சிராப்பள்ளி, வர்த்தகம் கல்வி முதலியவற்றில் சிறந்து விளங்குகின்றது. இந் நகரத்திற்குப் பேரழகு செய்வது காவிரியாறே.

காவிரி யாற்றிற்கு வடகரையில் திருவானைக்கா என்னும் திருப்பதியும், ஸ்ரீரங்கம் என்னும்க்ஷேத்திரமும் விளங்குகின்றன. இவற்றுள், திருவானைக்கா ஒரு சிவஸ்தலமாகும்; அங்குள்ள கோயிலின் சிற்பவேலையினது சிறப்பை விளக்கிக்காட்டவல்ல சித்திரப்படம் ஒன்று இப்புத்தகத்தின் முகப்பில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஸ்தலத்தின் கர்ப்ப கிரு-



இராயர் கோபுரம்

கத்தில் நீரூற்று ஊறிக்கொண்டே யிருக்கும். அதனல், அதனை அப்பு க்ஷேத்திரம் என்பர். அக் கோயிலுக்குள்ளே வெண்ணுவல் மரம் ஒன்று விளங்குகின்றது. அதற்கு வடமொழியில் ஜம்பு என்பது பெயர். அதனல் அத்தலத்திற்கு, ஜம்புகேசுவரம் எனவும் பெயர் வழங்குகின்றது.

ஜம்புகேசுவரத்திற்கு வடமேற்கில் இருப்பது ஸ்ரீரங்கம். இதனைத் திருவரங்கம் எனவும் கூறுவர். வைணவர் இந்த க்ஷேத்திரத்தைப் ‘பெரிய கோயில்’ என்பர்.

ஸ்ரீரங்கம் ஏழு மதில்கள் சூழ்ந்தது. இம் மதில்களையடுத்து அழகிய தெருக்கள் அமைந்துள்ளன. இம்மதில்களைத் திருமங்கை ஆழ்வார் என்னும் வைணவப் பெரியார் கட்டியதாகக் கூறுகின்றனர்.

ஏழாம் மதில் மிகவும் நீண்டு அகன்றது. அதில் நாற்புறத்தும் வாயில்கள் உள்ளன. அவ் வாயிலிற் காணும் பெரிய கோபுரங்கள் முற்றுப் பெறவில்லை. அவை, ராயர் கோபுரம் என வழங்குகின்றன. கி. பி. 16-ஆம் நூற்றாண்டில், விஜயநகரத்து அரசர்களாகிய அச்சுதராயர், கிருஷ்ணராயர் என்பவர்கள் இந்தத் திவ்ய தேசத்திற்கு வந்தபோது, அவர்களால் இக்கோபுரங்கள் நான்கும் தொடங்கப் பெற்றன. அவர்கள், இங்கிருந்து திரும்பியதும் கோபுர வேலை நின்று விட்டது. அக்-

கோபுரங்களுள், தெற்கு வாயிற் கோபுரத்திற்கு ஒரு நிலை அமைந்துள்ளது. மற்றவற்றில் அத்துணையும் அமைந்திலது.

ஆற்றிடைப் பூமிக்கு அரங்கம் என்பது பெயர். காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடையில் இஃது ஒரு தீவாக அமைந்திருப்பதனால், இது, திரு அரங்கம் என்னும் பெயர் பெற்று விளங்குகின்றது.

செய்யுள்

I - கடவுள் வாழ்த்து

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ அதற்கு நாயகமே. (1)

இருளிரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தி யணிபணமா யிரங்க ளார்ந்த
அரவரசப் பெருஞ்சோதி அனந்த னென்னும்
அணிவிளங்கும் உயர்வெள்ளை அணையை மேவித்
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளுங்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டென்
கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே.

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும்—எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு—மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரபணி மாலையு—முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய—குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற—முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதவர்—நலியாதே
அசந்தபோதென் துயர்கெட மாமயில்—வரவேணும்
அலைபந்த வேலும் புயமிசைமேவிய-பெருமாளே.

II - தனிப்பாடல்

சங்கரற்கு மாறுதலை சண்முகற்கு மாறுதலை
ஐங்கரற்கு மாறுதலை ஆனதே — சங்கைப்
பிடித்தோற்கு மாறுதலை பித்தாநின் பாதம்
படித்தோர்க்கு மாறுதலைப் பார். (1)

கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்றன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும் — குற்றி
உலையிலிட வூரடங்கும் ஓரகப்பை யன்னம்
இலையிலிட வெள்ளி எழும். (2)

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே யிருந்திரண்டு பேர்தள்ள — எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி. (3)

மாட்டுக்கோன் தங்கை மதுரைவிட்டுத் தில்லை நகர்
ஆட்டுக்கோ னுக்குப்பெண் டாயினள் — கேட்டிலை
குட்டி மறிக்கவொரு கோட்டானையும் பெற்றாள்[யோ
கட்டுமணிச் சிற்றிடைச்சி காண். (4)

காரென்று பேர்படைத்தாய்
ககனத் துறும்போது
நீரென்று பேர்படைத்தாய்
நீணிலத்தில் வந்ததற்பின்
வாரொன்று பூங்குழலாள்
ஆய்ச்சிகையில் வந்தவுடன்
மோரென்று பேர்படைத்தாய்
முப்பேரும் பெற்றாயே. (5)

பரப்போத ஞாலம் ஒருதம்பி
யாளப் பனிமதியம்
துரப்போன் ஒரு தம்பி பின்வரத்
தானும் துணைவியுடன்
வரப்போன மைந்தற்குத் தாதை
பொறுதுயிர் மாய்ந்தனனெஞ்
சுரப்போ எனக்கிங் கினியார்
உவமை உரைப்பதற்கே. (6)

மற்கொண்ட திண்புயத்தான்
மாநகர்விட் டிங்குவந்தேன்
சொற்கொண்ட பாவின்
சுவையறிவார் இங்கிலையே
விற்கொண்ட வாணுதலாள்
வேலி தருங்கூலி
நெற்கொண்டு போமளவும்
நில்லாய் நெடுஞ்சுவரே. (7)

ஓர்தட்டி லேபொன்னும் ஓர்தட்டி
லேநெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்தி
லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட்டி னுந்தட்டு வாராம
லேயன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக்
காதி வரோதயனே. (8)

இயாத புல்லர் இருந்தென்ன
போயென்ன எட்டிமரம்
காயா திருந்தென்ன காய்த்துப்
பயனென்ன கைவிரித்துப்
போயா சகமென் றுரைப்போர்க்குச்
செம்பொன் பிடிபிடியாய்
ஓயாமல் இபவன் வேள்சீதக்
காதி ஒருவனுமே. (9)

குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங்கில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்றாய் முடிந்துதலை இறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே. (10)

கல்லாத ஒருவனைநான் கற்றாய் என்றேன்
காடெறியும் மறவனைநா டாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனைநான் நல்லாய் என்றேன்
போர்முகத்தை அறியானைப் புலியே றென்றேன்
மல்லாரும் புயமென்றேன் சூம்பற் றோளை
வழங்காத கையனைநான் வள்ளால் என்றேன்
இல்லாத சொன்னேனுக் கில்லை என்றான்
யானுமென்றன் குற்றத்தால் ஏகு வேனே. (11)

III - அறவுரை

1. நீதிநெறி விளக்கம்

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை. (1)

வருந்தித்தாங் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்—கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல். (2)

எனைத்துணைய வேனும் இலம்பாட்டார் கல்வி
தினைத்துணையுஞ் சீர்பா டிலவாம்—மனைத்தக்காள்
மாண்பில ளாயின் மணமகன் நல்லறம்
பூண்ட புலப்படா போல். (3)

இவறன்மை கண்டும் உடையாரை யாருங்
குறையிரந்துங் குற்றேவல் செய்ப—பெரிதுந்தாம்
முற்பகல் நோலாதார் நோற்றாரைப் பின்செல்லல்
கற்பன்றே கல்லாமை யன்று. (4)

கற்றார்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார். (5)

முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க—சிற்றுளியாற்
கல்லுந் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். (6)

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெலாம்
எற்றே இவர்க்குநாம் என்று. (7)

பிறாற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல். (8)

குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும் அறவோர்க்
கடிகளே தெய்வம் அனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை. (9)

கண்கூடாப் பட்டது கேடெனினும் கீழ்மக்கட்
குண்டோ உணர்ச்சிமற் றில்லாகும்—மண்டெரி
தான்வாய் மடுப்பினும் மாசுணங் கண்டுயில்வ
பேரா பெருமூச் செறிந்து. (10)

நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல்—தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி. (11)

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா — ஆங்கதுகொண்
டூரும் எறும்பிங் கொருகோடி உய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று. (12)

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். (13)

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும் — கழிபெருங்
கண்ணோட்டஞ் செய்யார் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து. (14)

இனியவர் என்சொலினும் இன்சொல்லே இன்னார்
கனியும் மொழியும் கடுவே — அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும் மெய்
சிங்கி குளிர்ந்துங் கொலும். [பொடிப்பச் (15)

வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றை
நல்குரவே போலும் நனிநல்ல-கொன்னே [யோன்
அருளிலன் அன்பிலன் கண்ணறையன் என்று
பலரால் இகழப் படான். (16)

வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின் — வஞ்சித்த
எங்கும் உளனொருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு. (17)

2. அறநெறிச்சாரம்

மெய்ம்மை பொறையுடைமை மேன்மை தவமடக்கம்
செம்மையொன் றின்மை துறவுடைமை — நன்மை
திறம்பா விரதந் தரித்தலோ டின்ன
அறம்பத்தும் ஆன்ற குணம். (1)

இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய். (2)

வைகலும் நீருட் கிடப்பினும் கல்லிற்கு
மெல்லென்றல் சால அரிதாகும் அஃதேபோல்
வைகலும் நல்லறங் கேட்பினுங் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னும் நெஞ்சு. (3)

காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார்கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும். (4)

பலகற்றோம் யாமென்று தற்புகழ்தல் வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும்
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்
கச்சாணி யன்னதோர் சொல். (5)

இம்மை அடக்கத்தைச் செய்து புகழாக்கி
உம்மை உயர்கதிக் குய்த்தலால் — மெய்ம்மையே
பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே
நட்டார் எனப்படு வார். (6)

தானத்தின் மிக்க தருமமும் தக்கார்க்கு
ஞானத்தின் மிக்க உசாத்துணையும் — மானம்
அழியா வொழுக்கத்தின் மிக்கதூஉம் இல்லை
பழியாமல் வாழுந் திறம். (7)

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானேதான் செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி. (8)

வினைகாத்து வந்த விருந்தோம்பி நின்றால்
மனைவாழ்க்கை நன்று தவத்தின்—புனைகோதை
மெல்லியல் நல்லாளும் நல்லள் விருந்தோம்பிச்
சொல்லெதிர் சொல்லா ளெனின். (9)

கொண்டான் குறிப்பொழுகல் கூறிய நாணுடைமை
கண்டது கண்டு விழையாமை — விண்டு
வெறுப்பன செய்யாமை வெஃகாமை நீக்கி
உறுப்போ டுணர்வுடையாள் பெண். (10)

விருந்து புறந்தரான் வேளாண்மை செய்யான்
பெருந்தக் கவரையும் பேணான்—பிரிந்துபோய்க்
கல்லான் கடுவினை மேற்கொண் டொழுகுமேல்
இல்வாழ்க்கை என்ப திருள். (11)

ஒன்றாக நல்ல துயிரோம்பல் ஆங்கதன்பின்
நன்றாய்த் தடங்கினார்க் கீத்துண்டல்—என்றிரண்டும்
குன்றாப் புகழோன் வருகென்று மேலுலகம்
நின்றது வாயிற் றிறந்து. (12)

1. இடைக்காடன்பின் போனது

முன்னமோர் நாள்நான் மாட
மதுரையில் முழுது ணர்ந்தோன்
பின்னமில் கபிலன் றோழன்
பெயர் இடைக் காடன் என்போன்
இன்னியல் வானர்க் கெல்லாம்
இதவியோன் கவியால் மிக்கோன்
தென்னனைக் கவிதை பாடிக்
கண்டனன் சிறப்பின் எய்தி. (1)

நன்கவி கேட்ட வேந்தன்
நானெனும் மதத்தாற் போவென்
றன்புசெய் யாமல் தள்ள
ஆங்கவன் கண்டு நாணி
முன்பொருத் தாமுஞ் சொல்லான்
முற்றிய துயரிற் போந்தின்
றென்பொலா மணிக்குச் சொல்வல்
என்றிறை கோயில் புக்கான். (2)

மன்னிய சொல்லுன் மாது
மாசறு பொருள் நீ யுண்மை
என்னநின் றாற்றும் வேதம்
ஆதலால் எனையோ வல்ல
அன்னமா ராய வொண்ணு
ஆலவா யமுதே தென்னன்
நின்னையும் நின்னை நீங்கா
மின்னையும் நிந்தை செய்தான். (3)

தக்கதோ எனத்து தித்துத்
தனித்துரைத் தேகக் கண்ட்
சொக்கநா யகன்மா தோடுந்
துண்ணென நடுக்க முற்று
மிக்கமா நிலனுஞ் செம்பொன்
மேருமால் வரையும் மற்றெண்
திக்கும்வா னகமும் நோவ
நொந்திரு செவிபு தைத்தான். (4)

தொழுதுபோம் இடைக்கா டற்கும்
தோழனுங் கபில னுக்கும்
எழினலங் கூர யாமும்
எய்துவம் மின்னே டென்று
செழுமதில் வடபால் வையைத்
திருநதித் தென்பால் மேவப்
பழுதறு சங்கத் தாரும்
மேவினர் பாதம் போற்றி. (5)

மறுவறு முனிவர் வானோர்
வணங்கியின் னருளை வாழ்த்திக்
குறைவறு சங்கத் தோடுங்
கூடியாங் கிருப்ப இப்பால்
நெறிபட வணங்குக் தொண்டர்
நேர்படப் புலரு முன்னம்
இறைவனைத் தொழுவான் வந்தார்
கண்டிலர் திகைத்தார் ஏங்கி. (6)

மண்மிசைப் புரண்டார் வீழ்ந்தார்
மயங்கினர் முகத்த றைந்தார்
கண்ணினீர் சோர வாய்விட்
டலறினர் கைவி திர்த்தார்
அண்ணலே யெங்கொ ளித்தாய்
அரசனீ தறிந்தால் என்னும்
எண்ணமொன் றிலாமல் அந்தோ
விளைந்ததே என்னே குற்றம். (7)

அவனிவேந் தற்குத் தாழா
தறைகுவம் என்று சென்று
தவமுடை வேந்தே நந்தம்
ஆலவாய்த் தரும மூர்த்தி
புவிபுகழ் கோயில் விட்டுப்
போய்நதிக் கரையி லேறிக்
கவிமன ரோடும் அங்கண்
இருக்கின்றான் கண்டாய் என்றார். (8)

செப்பிய மாற்றங் கேட்ட
தென்னன்மெய் நடுங்கி வீழா
மெய்ப்படு பயத்தி னோடும்
மேதகு மாதி னோடும்
ஒப்பரும் அமைச்ச ரோடும்
ஒல்லைகால் நடையிற் சென்றிங்
கிப்படிப் போதற் கென்னே
குற்றமென் றிறைஞ்சி வீழ்ந்தான். (9)

நெஞ்சம்வே ருகி மால்போல்
நின்றுகண் அருவி சார
வஞ்சியும் தானும் வாழ்த்த
வானவர் துதிக்கும் மேலோன்
பஞ்சவ எனக்கு னைப்போற்
பத்தர்கள் இல்லை இந்த
மிஞ்சிய தலமும் நிஞ்சில்
விருப்புடைத் தலமே ஆகும். (10)

நின்னொடு செற்றம் இல்லை
நெறிதர எனையந் தாதி
சொன்னவன் கபிலன் றோழன்
சொல்லிய கவிதை சற்றும்
மன்னிய பொருளால் சொல்லால்
வழுவிலா திருப்ப ஓரா
துன்னுடை மதத்தால் தள்ளி
ஓட்டிய தென்னை நென்னல். (11)

கல்வியிற் சிறந்தி ருப்பக்
காரண மின்றிக் குற்றம்
புல்லர்போ லுரைத்தாய் இன்று
போதுமோ வுனக்கெ மக்கு
நல்லவன் வந்து சொல்ல
நமக்குநம் புடைமா துக்கும்
சொல்லிட அரிது நேர்ந்த
தென்றலும் சோர்ந்து வேந்தன். (12)

என்னறி வின்மை தன்னை
எந்தையே பொறுத்தி என்று
மின்னொடு பின்னுங் காளில்
விழப்பிழை பொறுப்போன் ஆறி
இன்னியல் வாண ரோடும்
இன்றிடைக் காட னோடும்
மன்னவ வருவல் போவென்
றரசனை விடுத்தான் வாழ்த்தி. (13)

சேர்ந்தநற் புலவ னோடும்
தென்றிரு வால வாயிற்
சார்ந்தநா வலர்க ளோடும்
சார்ந்தனன் தலந்து திப்ப
வாய்ந்தவத் தலத்தின் நாமம்
வடதிரு வால வாயென்
றூர்ந்தது கண்ட தொண்டர்
ஆடினர் பாடி னரால். (14)

பொன்முடி மன்னன் வந்து
பொருந்திடைக் காடற் போற்றி
என்னையா ளுடையான் நின்பின்
எய்தினு னென்று முன்னர்ப்
பன்னிய தமிழ்கொண் டோடைப்
பருப்பதத் தெருத்தத் தேற்றி
மன்னவ னென்ன வாழ்வித்
தருளினன் வரிசை கூர. (15

2. இளங்கோவடிகள்

குலமகள் கண்ண கிப்பேர்
  கொண்டவள் கற்பும் நாய்கன்
தலைமகன் கோவ லன்பேர்த்
  தனபதி தகையும் சால்பும்
மலர்மகள் வனப்பு வாய்ந்த
  மாதவி மாண்பும் வாய்ப்பும்
கலைமதிப் படையக் காட்டிக்
  கவியினில் செய்திட் டானல். (1)

சிலப்பதி கார மென்னும்
  சிறப்புறு பெயர மைத்தான்
புலப்பகை அறுத்த சீலன்
  புனிதனற் புலமை சான்றோன்
உலப்பிலாத் தவத்தான் மேய
  ஒள்ளியன் உறுத்த வேந்தர்
குலப்பகை கடந்த வேலான்
  குட்டுவற் கிளைய கோமான். (2)

இருவரும் அன்பு கொண்டே
  இளைஞரா யிருந்த காலைப்
பொருவரு கணிதன் ஓர்நாள்
  போந்தனன் வேந்தைப் போற்றி
அருகுற அமர்ந்தான் ஆதன்
  அன்புடன் நோக்கி யிந்த
இருவர்தம் கரத்தில் தோன்றும்
  இயல்பினை இயம்பு கென்றான். (3)

கைகளைப் பற்றிப் பற்றிக்
கணிதனும் நோக்கி நோக்கி
ஐயுற வெய்தி னன்போல்
அசைவற இருப்ப வேந்தன்
ஐயுறல் என்னே இன்னே
அறைமதி உண்மை என்னப்
பொய்யிலாக் கணிதன் தேர்ந்து
புகன்றிட லுற்றான் மன்னே. (4)

தீதிலை கோள்க ளெல்லாம்
செறிந்தன சிறப்ப நன்றே
ஆதலின் இன்னார் என்றும்
அருந்திற லுடைய ராவர்
மாதிரம் மதிக்கும் வேந்தே
மற்றுமொன் றுரைத்தல் வேண்டும்
ஓதிய இளையன் மூத்தோற்
கொருபடி உயரு மென்றான். (5)

என்னலும் மூத்தோன் கேட்டே
இன்முகம் வாடி யாங்கண்
தன்னியல் குன்றிக் காட்டத்
தம்பியும் அவனை நோக்கி
முன்னவன் நீயே யிந்த
மூதுல காள்வாய் என்ன
அன்னவன் தேறு னகி
அறிவழிந் திருந்தான் அன்றே. (6)

மண்ணுறும் மாந்த ருக்கும்
வானுறுங் கோள்க ளுக்கும்
நண்ணுறும் இயைப தென்றே
நவில்கென அண்ணல் எண்ணிக்
கண்ணுறுங் கால பேதங்
காண்டலும் கவின்ம ரங்கள்
பண்ணுறத் தழைத்து வாடிப்
பார்மிசை யுதிர்தல் கண்டாய். (7)

என்று கூறி இருந்தனன் மூன்னவன்
நன்று நன்று நவிற்றினை காலமும்
ஒன்றும் யாண்டுதொ றும்நிலை யாகவே
என்றும் காண்டல் இயல்பென் றறிதியால். (8)

கால பேதமும் காசினி யெங்கணும்
ஏல ஓர்வித மாக இயன்றில
கோல மார்தருக் கூட்டமும் மாறியே
சால வுங்காரித் தேதழைக் கின்றன. (9)

ஆத லின்கணி தன்னுரை யாவையும்
சோத னைக்கிட மில்லது தோன்றலே
போதும் வம்மெனப் புன்னகை பூத்தனன்
தீது தீர்ந்தனன செம்மனக் குட்டுவன். (10)

இளங்கோவும் அன்றுமுதல்
என்செயலாம் இதற்கென்ன
வளங்காணும் வண்டமிழின்
வேந்தனைய் மன்னவர்தம்

உளங்காணும் ஆசையெலாம்
ஒருவந்தம் அறக்கண்டு
குளங்காணும் மேல்நோக்கே
கொண்டுவீற் றிருந்தனனால். (11)

கவிக்கரசாய்த் தமிழ்மகளின்
கண்மணியாய் அரசருங்கை
குவிக்குமொரு தவராசக்
கோளரியாய்க் குலவினன்
புவிக்கரசாய்க் குட்டுவனும்
புலவர்தமைப் புரந்தருளிச்
செவிக்கினிமை யுறக்கேட்டுச்
சிறப்புறவே திகழ்ந்தனனால். (12)

குறிப்புரை

வசனம்

அகிலம் - உலக முழுவதும்.
அங்ககணிதம் - எண்கணக்கு.
அடிப்படுத்து - கீழ்ப்படுத்தி.
அணுகுதல் - சமீபித்தல்.
அண்மை - சமீபம்.
அதீனம் - உட்பட்டது.
அப்பு - தண்ணீர்
அமர்க்களம் - போர்க்களம்.
அரக்கு - அரக்கு உண்டுபண்ணும் பூச்சி.
அரதனம் - இரத்தினம்.
அரியணை - சிங்காதனம்.
அருகன் - ஜைனமதக்கடவுள்.
அலகு - அளவு.
அற - முழுவதும்.
அறநெறி - தரும மார்க்கம்.
அறவோர் - முனிவர்.
அறிஞன் - அறிவுடையவன்.
அறுதி - தீர்மானம், நிச்சயம்.
ஆணை - கட்டளை.
ஆதரம் - அன்பு.
ஆத்தும விசாரம் - ஜீவனைப் பற்றிய ஆராய்ச்சி.
ஆரை - வண்டிக்குடத்தினின்றும் குறுக்காகச்செல்லும் சட்டம்.
ஆற்றல் - வல்லமை.
ஆன் இனம் - பசுக் கூட்டம்.
இசைப்பேம்சொல்லுவோம்.
இடையூறு - இடையில் உறுவது; கேடு.
இணங்கி - சம்மதித்து.
இணை - ஒப்பு, சமம்.
இம்மி - ஒரு சிற்றெண்.
இயல்பு - தன்மை.
இயலாமை - முடியாமை.
இயன்று - அமைந்து.
இயக்குதல் - அசைத்தல்.
இயைபு - தொடர்பு.
இரங்கி - வருந்தி.
இருக்கு வேதம் - நான்கு வேதங்களுள் முதலாவது.
இலகும் - விளங்கும்.
இல்லாள் - மனைவி.
இழி புனல் - பாய்கின்ற நீர்.
இன்னல் - துன்பம்.

இன்னிசை - இனிய கீதம்.
இன்றியமையாதது - இல்லாமல் முடியாதது; அவசியமானது.
இடு - சபம்.
இழல் நோய் - இழுப்புநோய்.
இறு - கடைசி.
இற்றில் - முடிவில்.
உடல் நூல் - சரீரத்தைப் பற்றிய சாஸ்திரம்.
உடுத்திரள் - நட்சத்திரக் கூட்டம்.
உதாரத்துவம் - கொடைத் தன்மை.
உபாசனு மூர்த்தி - உபாசனைக் குரிய கடவுள்.
உயரிய - உயர்ந்த.
உயிர்நூல் - உயிரைப்பற்றிய சாஸ்திரம்.
உய்த்து - ஆராய்ந்து.
உவப்பு - மகிழ்ச்சி.
உறுத்து - கோபித்து.
உன்னும் - நினைக்கத்தக்க.
ஊக்கம் - மனமுயற்சி.
ஊடுருவி - இடையேபுகுந்து.
ஊர்தி - ஏறிச் செல்வதற்கு உரியது; வாகனம்.
எஃகு - நயப்பான இருப்பு.
எறும்பி - யானை.
ஏற்றம் - உயர்வு, மேன்மை.
ஐயம் - சந்தேகம்.
ஒண்ணும் - கூடும்; ஒன்றும் என்பதன் மரூஉ.
ஒண்மை - ஒளி, பிரகாசம்.
ஓங்கல் - மலை.
ஓர் அறிவு உயிர்கள் - ஓரறிவினையுடைய புல் மரம் கொடி முதலியன.
ஓவியம் - சித்திரம்.
க - ஆகாயம்.
ககோளம்-வான உருண்டை.
கடு நட்பு - அதிக சிநேகம்.
கணவாய் - மலைக்குஇடையில் செல்லும் பாதை.
கண்டங்கள் - துண்டுகள்.
கண் கூடாக - கண்ணுக்கு எதிராக.
கதி - செலவு, போக்கு.
கரணங்கள் - மனம் முதலியவை.
கரு - கருப்பம்.
கருவி - உடல் முதலியவை.
கருமை - கருநிறம்
கலை - நூல்; சாஸ்திரம்.
கனிஜம் - சுரங்கத்திலிருந்து தோண்டியெடுக்கும் பொருள்கள்.
கனிஜ வர்க்கம் - சுரங்கப் பொருளின் கூட்டம்.
கஷ்ட சாத்தியம் - அரிதின் முடிவது.
காஞ்சனம் - பொன்.
காட்சிக்கடைகள் - பொருட் காட்சி சாலை.
காணிக்கை - வெகுமானம்; தட்சணை.

குடாரி - கோடரி.
கொடுங்காற்று - சுழல்காற்று.
கொடுமுடி - மலையுச்சி.
கோரம் - மிக்க கொடுமை; பயங்கரம்.
சரோவரம் - நீர்நிலை.
சால - மிக.
சிகரி - மலையுச்சி.
சித்தாந்தம் - முடிவானது.
சிதைய - அழிய.
சிருங்கம் - சிகரி, கோடு.
சிரோமணி - சிரசில் அணியும் மணி; உயர்வுடையது.
சின்னபின்னம்-உருக்குலைவு.
சுவாதீனம் - தனக்கு உரிமை யானது.
சுளுகுப்பாறை - சிறிய கடப் பாறை.
செயல் - செய்கை; தொழில்.
செய்வு அரிது - செய்வதற்கு அரியது.
செல்வன் - நன்மகன்.
செவ்வி - அழகு.
செறிந்து - நெருங்கி.
சேய்மை - தூரம்.
ஞாயிறு - சூரியன்.
தவளகிரி - வெள்ளியமலை.
தாதுவர்க்கம் - உலோகப் பொருள்களின் கூட்டம்.
திருமால் - விஷ்ணு.
திவ்வியதேசம்-தேவ சம்பந்த மான இடம்.
திறம் - வலிமை.
தீட்ட - எழுத.
துடைத்தல் - நீக்குதல்.
துப்பட்டா - துப்பட்டி; துவி பட்டி என்பதன் மரூஉ; துவிபட்டி இரண்டு வஸ்தி-ரத்தால் அமைந்தது.
துய்ய - பரிசுத்தமான.
துவிபாஷி - இரண்டு பாஷை தெரிந்தவன், தூதன்.
துளிர் - தளிர்.
துன்னு சீர் - பொருந்திய சிறப்பு
தூய்தாய் - பரிசுத்தமாய்.
தூய்மை - பரிசுத்தம்.
தூய்மையராய்-மனக்களங்கம் இல்லாதவராய்.
தெய்வபாவனை - கடவுளைப் பற்றிய எண்ணம்.
தெள்ளிதின் - தெளிவாக.
தேகவியோகம்-உடல்நீக்கம்; சாவு.
தேர்ந்து - தெளிந்து.
தொழு நோய் - குஷ்டம்.
தோற்றுக் கோடி - ஒன்றைப் பற்றி ஏறும்கொடி.
தோகை - பீலி.
நங்கூரம் - கப்பலை நிலைக்கச் செய்யும் கருவி.
நந்தவனம் - பூஞ்சோலை.
நல் இயல்பு - (ஓவியத்துக்கு உரிய) சிறந்த இலட்சணம்.
நான்முகன் புத்திரை - பிரம புத்திரை.

நிருமித்தல் - அமைத்தல்.
நிலவ - விளங்க.
நீடிய - நீண்ட.
நீத்தால் - விட்டால்.
நுண்ணறிவு - நுட்பபுத்தி.
நூல் - சாஸ்திரம்.
பகட்டு - வெளித் தோற்றமாகக் காணும் ஒளி.
பட்டாபிஷேகம் - பட்டத்தோடு சூட்டிய முடி; அபிஷேகம் - முடி
படிந்து - உறைந்து, தங்கி.
பதிவு - மறைதல்.
பரிச உணர்ச்சி - தொட்டால் அறியும் அறிவு.
பலபட - பலவாருக.
பன்னு - சொல்லுகின்ற.
பாடு - வருத்தம்.
பாரதம் - பரதவமிசத்தவர்களின் சரித்திரங்களைக் கூறுவது; இதிகாசங்கள் இரண்டனுள் ஒன்று.
பாலாடைக்கட்டி - பாலேட்டினால் செய்யும் பண்டம்.
பிரசித்தம் - பகிரங்கம்; யாவரும் அறியத்தக்கது.
பிள்ளைக்கிணறு - சிறுகிணறு; உட்கிணறு.
புரிதல் - செய்தல்.
புரை தீர் - குற்றமற்ற.
புலவன் - அறிவுடையவன்.
புலப்பட்டது - தோன்றியது.
புனல் - தீர்த்தம், நதி.
பூவலம் செய்தல் - பூமியைச் சுற்றி வருதல்.
பெருமிதம் - களிப்பு.
பெருந்தகை - மேன்மைக் குணம்.
பெருவாரி - மிகுதி.
பேரது - பெருமையுடையது.
பொறித்தல் - எழுதுதல்.
பொன்னின் கோட்டது - பொன்னிறமான உச்சியையுடையது; காஞ்சனசிருங்கம்; காஞ்சனம் பொன்; சிருங்கம் - கோடு.
போதிய - போதுமான.
போர் - யுத்தம்.
மலினம் - அழுக்கு.
மறுமை - மறுவுலகம்; மறுபிறப்பு.
மன்னுயிர் - நிலையான உயிர்.
மாசு - அழுக்கு; அழுக்கான பொருள்.
மாளுக் கடை - மாட்சிமை அடையாத இடத்து.
மாப்பண்டம் - மாப்போன்ற பொருள்.
மால்வரை - பெரிய மலை.
மானச சரோவரம் - மானச வாவி.
மிதுனராசி - பன்னிரண்டு ராசிகளுள் மூன்றாம் ராசி.
முகப்பில் - முன்னால்.
முன்னி - நினைத்து.
மூலம் - கிழங்கு.

மூலதனம் - முதற்பொருள்.
மை அளாவிய - மேகங்கள் படிந்துள்ள.
யுதிஷ்டிரர் - யுத்தத்தில் ஸ்திரமாயிருப்பவர், தருமர்.
ரேகாகணிதம் - கீற்றினால் அளக்கப்படுவது.
வருவாய்-வரும்படி; பொருள் வரும்வழி.
வரை - மலை.
வர்க்கம் - கூட்டம், இனம்.
வரை ஆடு - மலை யாடு.
வரைப்பு - அளவு.
வள்ளல் - பெருங் கொடையாளி.
வனப்பு - அழகு.
வனம் - அழகு.
வாய்ப்பு - அமைதி, தகுதி.
வாவி - தடாகம்.
வாளா - சும்மா.
வானுலகம் - தேவலோகம்.
வான் அளாம் - வானத்தைத் தொடுகின்ற.
வான்குருவி - தூக்கணங் குருவி.
விக்கிரம ஸகாப்தம் - விக்கிரமன் என்பவன் பெயரினால் ஏற்பட்ட நூற்றாண்டு.
விடை இறுப்பவன் - மறுமொழி சொல்வோன்.
வியப்பு - ஆச்சரியம்.
விலகிடாது - நீங்காமல்.
விஹாரம் - உல்லாச மாக உலாவுதற்கான இடம்.
வீராவேசம் - வீரவெறி.
வெம்மை - உஷ்ணம்.
வெய்யவன் - சூரியன்.
ஸ்நான கட்டம் - நீரோடுந் துறை.
க்ஷேத்திரம் - ஸ்தலம்.
க்ஷேத்திர கணிதம் - நில அளவை நூல்.

குறிப்புரை

செய்யுள்

I. கடவுள் வாழ்த்து

உடைமை - பொருள். இடையூறு - துன்பம். நாயகம் - தலைமை, தலைவன். (1)

இது, மாணிக்க வாசக சுவாமிகள் அருளியது.

இரிய - நீங்க, ஓட. இமைக்கும் - விளங்கும். துத்தி - படப்பொறி. பணம் - பாம்பின் படம். பொன்னி - காவிரி யாறு. திரை - அலை. கோமளம் - மென்மையானவன். (2)

இது, குலசேகர ஆழ்வார் அருளிச் செய்தது.

ஏறு - எருது. எழில் - அழகு. நூல் - முப்புரி நூல். அதள் - தோல். மழு - எரி இரும்பு. பரிவு - அன்பு. உசந்த - உயர்ந்த என்பதன் மரூஉ. பாசம் - எமபாசம். நலியாதே - வருத்தாமல். அசந்த - அயர்ந்த என்பதன் மரூஉ. (3)

இஃது, அருணகிரிநாதர் அருளிச்செய்தது.

II. தனிப்பாடல்

சங்கரன் - சுகத்தைச் செய்பவன்: சிவபெருமான். ஆறு தலை - ஆறு தலையில் உளது; ஆறு - கங்கை. ஐங்கரன் - ஐந்து கைகளையுடையவன்; விநாயகன். மாறுதலை - மாறு பட்ட தலை; மானிடவுருவுக்கு மாறுபட்டதலை; யானைத்தலை. சங்கைப் பிடித்தோன் - திருமால். ஆறுதலை; ஆற்றின் இட மாகும்; ஆறு - காவிரியும், கொள்ளிடமும்; திருவரங்கம் ஆறுகளின் இடையே அமைந்துளது. பித்தன் - சிவபெரு மான். ஆறுதலை - ஆறுதல், அமைதிகொள்ளுதல். (1)

கத்து - ஒலிக்கின்ற. நாகை - நாகப்பட்டினம். காத்தான் - சத்திரத்தின் தலைவன் பெயர். அத்தமிக்கும் போது- சூரியன் அடையும்போது. வெள்ளி - விடி வெள்ளி.

இனி, இச்செய்யுளுக்கே சிறந்த பொருளும் கூறுவது உண்டு. அத்தமிக்கும் போதில் - எல்லா இடத்திலும் முட்டுப் பாடு உண்டாகும் காலத்திலும். ஊரடங்கும் - ஊரவர் அமைதி கொள்ளுவர். வெள்ளி எழும் என்றது, அன்னத்தின் வெண்மையை நோக்குதற்காம்; சோறு மிக்க வெண்மையாக இருக்கும் என்பது கருத்து. (2)

வேதம்போம் - வேதத்தைப் பயிலும். காதம் - பத்து மைல் தூரம். (3)

மாட்டுக் கோன் - கண்ணபிரான்; திருமால். தங்கை - உமாதேவி; உமையைத் திருமாலுக்குத் தங்கை என்பர். ஆட்டுக்கோன் - நடராஜன். குட்டி - ஆட்டுக்குட்டி; தலையில் குட்டி என்பது மற்றொரு பொருள். மறிக்க - மறித்துக் கொள்ள; கையை மடக்கிக் கட்டிக்கொள்ள என்பது மற்றொரு பொருள். கோட்டானை (கோடு + ஆனை) - கொம்புள்ள ஆனை, விநாயகர்; கூகையை எனவும் தோன்றும். சிற்றிடைச்சி - சிறிய இடையையுடையவள்.

இப்பாட்டில் மாட்டுக்கோன், ஆட்டுக்கோன், இடைச்சி என்பவை இருபொருள் தருதல் காண்க. (4)

கார் - மேகம். ககனம் - ஆகாயம். வார் - நீட்சி. ஆய்ச்சி - இடைச்சி. முப்பேர் - கார், நீர், மோர் என்னும் மூன்று பெயர்கள்.

மோர், நீர்போலவே இருந்ததென்பது கருத்து (5)

இவ்வைந்து பாட்டுக்களும் காளமேகப்புலவர் பாடியவை.

பரப்பு-பரந்தலையுடைய. ஓதம்-நீர், கடல். ஞாலம் - பூமி. பனி மதியம் - குளிர்ந்த சந்திரன். தூரப்போன் - ஓட்டுபவன்,

இலக்குவன்; அவன் புகழ் சந்திரனினும் வெண்மையுடையது என்பது கருத்து; புகழை, வெண்மை நிறமாகக் கூறுதல் கவி மரபு. துணைவி - சீதை. உரப்பு - வலிமையுடையது. (6)

இப்பாட்டு, தம் மகன் இறந்தபோது கம்பர் பாடியது என வழங்கும்.

மல் - வலிமை, மற்போர் எனவும் ஆம். திண் - உறுதி, திடம். திண்புயத்தான் - சோழன். வில் கொண்ட - வில்லை யொத்த. வாள் நுதலாள் - ஒளியுள்ள நெற்றியை யுடையவள். வேலி - வேலி என்னும் பெயரினையுடையவள்.

இது சோழனோடு பகைத்துச் சென்ற கம்பர் பாண்டி நாட்டில் சென்று, கூலிக்காக ஒரு சுவர் வைக்க, அது விழும் போது பாடியது என்பது கதை. (7)

ஒக்க - சமமாக. கார் தட்டிய - மழை இல்லாமற்போன. காரியப்பேர் - காரியஸ்தர். மார் - மார்பு. வரோதயன் - (வர உதயன்) சிரேஷ்டனாகத் தோன்றினவன். (8)

புல்லர்-அற்பர். வேள்-உபகாரி, விரும்பப்படுபவன். (9)

இவ் விரண்டு பாட்டுக்களும், காயல் பட்டினத்திலிருந்த சீதக்காதி என்னும் மகம்மதியப் பிரபுவின்மீது படிக்காசுப் புலவர் பாடியவை.

குறும்பி - காதின் அழுக்கு. வில்லி-வில்லிபுத்தூர் ஆழ்வார். இரண்டு-இரண்டு நூல்கள். தெட்டுதல் - தெருட்டுதல்; ஏமாற்றி யறிவித்தல்.

பிள்ளைப்பாண்டியன் என்பவன் தன்னிடம் வரும் புலவர்களை அறிந்து, நல்ல புலமையில்லாதவர்களைக் குட்டி யனுப்புவான். வில்லிபுத்தூர் ஆழ்வார் குறும்பியுள்ள அளவு ஆழமாக, தமக்குத் தோற்ற புலவர்களின் காதைக் குடைந்து அறுத்து விடுவார்; ஒட்டக்கூத்தர் தமக்குத் தோற்ற புலவர்

களுள் இவ்விருவர் தலையை ஒன்றாக முடிந்து தேவிமுன் வெட்டிவிடுவர். இக்காலத்தில் நல்ல புலமை இல்லாதவர்களும் கற்ற பெரும்புலவரெனப் பிறரை ஏமாற்றித்திரியலாம் என்பது பொருள். (10)

காடு எறியும் - காட்டை வெட்டும். ஆள்வாய் - ஆள் கின்றவனே. போர்முகம் - சண்டைமுகத்தையும். புலி ஏறு - ஆண்புலி. சூம்பல் தோள் - சுருங்கியதோள்; மெலிந்ததோள். சொன்னேனுக்கு - சொன்னவனாகிய எனக்கு, வினையாலணையும் பெயர். ஏகுவேன் - செல்வேன். (11)

III - அறவுரை

(1) நீதிநெறி விளக்கம் :

நீதியாகிய வழியை விளக்கிக்கூறும் நூல். இது, குமர குருபர சுவாமிகள் இயற்றியது.

பயக்கும் - தரும். புறங்கடை - தலைவாசலில்; வெளியிடங்களில்; பிற்காலத்தில் எனவுமாம்; இது இலக்கணப் போலி. இசை - கீர்த்தி. உற்ற உழி என்பது உற்றுழியென நின்றது. உற்றுழி - வந்த இடத்தில். ஊங்கு - சிறந்தது. சிற்றுயிர் - சில வாழ்நாளை யுடைய உயிர். (1)

கற்றன - கற்றுணர்ந்த நூற் பொருள்களை. ஓம்புதல் - பாதுகாத்தல். பரிந்து - அன்புற்று. சில - சில நூல்களை. கருந்தனம் - பொன். அரிப்பரித்தல் - சல்லடையினால் அரித்தல். எய்த்து - இளைத்து. (2)

இலம்பாட்டார் - வறுமையுடையவர். சீர்பாடு - சிறப்படைதல். மனைத்தக்காள் - மனைக்குத் தகுந்தவள்; மனைவி. நல்லறம் - இல்லறம். (3)

இவறன்மை - உலோபகுணம். உடையாரை - பொருளுடையவரை. குற்றேவல் - அடிமைத் தொழில். நோலாதார் - தவம் செய்யாதவர். கற்பன்றே - கற்றறிந்த தன்மையல்லவோ. (4)

கல்விநலனே - கல்வியின் நன்மையே. முழு மணிப்பூண்-தொழில் முற்றிய இரத்தினுபாணம். (5)

முழுவதூஉம் - எல்லா நூல்களையும். களியற்க - செருக்குக் கொள்ளற்க. கல்லும் - மலையும். கனம் குழாய் - கனமான காதணியையுடையவளே. கூடம் - சம்மட்டி. (6)

தம்மின் - தம்மைக் காட்டிலும். உடைமை - செல்வம். அம்மா, வியப்பிடைச்சொல். கருத்தழிக - மனம் வருந்துக. எற்று - எத்தன்மையுடையது; ஒன்று மில்லை. (7)

பெருஞ் சுட்டு - மிக்க மதிப்பு. யாண்டும் - எப்போதும். நோற்பது - விரதமாக மேற்கொள்ளுவது. சீர் - சிறப்பு; நற்குணம். தூற்றி - பலருமறிய எடுத்துச் சொல்லி. சிறுமை - தீயகுணம். புறம் காத்து - வெளித்தோன்றுதபடி மறைத்து. தாழ்ச்சி - பணிவான மொழியை. (8)

குலமகட்கு - நற்குடியிற் பிறந்த பெண்ணுக்கு. கொழுநன் - கணவன். மன்ற - நிச்சயமாக. அறவோர்க்கு - தருமநெறி தவறுதவர்க்கு. அடிகள் - ஆசிரியர்கள்; குருமார். இலைமுகம் பைம்பூண் - இலைவடிவமான பசும்பொன்னுலாகிய ஆபரணமணிந்த. இறை - அரசன். (9)

கண்கூடா - கண்ணுக்கெதிரே. பட்டது - தோன்றியது. கேடு - தீயது. மண்டு எரிதான் வாய்மடுப்பினும் - மிகுந்த நெருப்பானது தன்னை வந்து வளைந்திருந்தாலும். மாசுணம் - மலைப்பாம்புகள். போா - பெயரமாட்டா. (10)

நட்பு - நட்பினர்; பகை - பகைவர்; இரண்டும் ஆகுபெயர். நட்டல் - சிநேகஞ் செய்தல். ஒற்று - வேவுகாரர்.

பக்கத்தார் - பக்கத்தே இருப்பவராகிய மந்திரிமார். தக்கார் - பெரியோர். நெடுமொழி - சிறந்த நன்மொழிகளை. கோறல் - கொல்லுதல்; மேற்கொள்ளாது ஒழித்தல். (11)

வாங்கும் - (பாகனிட மிருந்து) வாங்கிய. தூங்கும் - அசையுந் தன்மையுடைய. களிறு - ஆண்யானை. அது கொண்டு - (சிந்திய சிறிய) உணவைக்கொண்டே. உய்யும் - பிழைக்கும். கிளை - சுற்றம். ஆயின்று - நின்று. (12)

மெய் - உடம்பு. கண் துஞ்சல் - நித்திரை செய்தல். தீமை - துன்பம். செவ்வி - (அவ்வக்) காலத்தின். கருமமே - காரியத்திலேயே. கண்ணுயினர் - கருத்துடையவர். (13)

புறம் நட்டு - வெளிக்குச் சிநேகராயிருந்து. அகம்வேர்ப்பார் - மனத்தில் சினமுற்றிருப்பவரது. நச்சு - விஷம்; இது வலித்தல் விகாரம். கழிபெரும்-மிகப்பெரிய. கண்ணோட்டம்- தாட்சணியம். கருவியிட்டு - வாளாலறுத்து. (14)

இனியவர் - நல்லவர். இன்னார் - பகைவர். கனியும் மொழியும் - இன்மொழியும். கடுவே - விஷம் போன்றதே. ஊனல் கொளுந்தும் - தீப்போல் சுடுகின்ற. வெங்காரம் - வெங்காரம் என்னும் மருந்து. வெய்து - கொடியது. மெய் பொடிப்ப - (குளிர்ச்சியால்) உடம்பு மயிர்க்குச்செறிய. சிங்கி - விஷம். கொலும் - கொல்லும். (15)

வள்ளன்மை - ஈகைக் குணம். மற்றையோன் - ஈகைக் குணமுடைய வறிய நிலைமையுடையவனது. நல்குரவே - தரித்திரமே. நனி நல்ல - மிகவும் நல்லதாகும்; நல்லது என பதில் துவ்விகுதி தொகுத்தல். கொன்னே - வீணுக. கண்ணறையன் - தாட்சணியம் இல்லாதவன. (16)

வஞ்சித்து - (பிறரை) ஏமாற்றி. வஞ்சித்த - (யாவரும் தன்னில்லைமையை யறியாதபடி) மறைந்துள்ள; வஞ்சித்தவைகளை எனவுமாம். எங்கும் உளன் ஒருவன்-எப் பொருள்களிலும் நிறைந்துள்ளவனுகிய கடவுள். அங்கம்-உடல். (17)

அறநெறிச்சாரம்

தருமநெறியின் சாரமான செய்யுட்களாலாகிய நூல்; இதனை யியற்றியவர் முனைப்பாடியார்.

மெய்ம்மை-பொய் பேசாமை. பொறையுடைமை - (பிறர் செய்யும் தீங்கைப்) பொறுத்திருத்தல். மென்மை-மிருதுவான தன்மை. அடக்கம் - (மனம் மொழி மெய்கள் தீயவழியிற் செல்லாமல்) அடக்குதல். செம்மை - நல்லொழுக்கம். ஒன்று இன்மை - தனக்கென ஒரு பொருளும் இல்லாமை; ஒன்றும் என்பதன் உம்மை தொக்கது. திறம்பா - மாறுபடா. (1)

இன்சொல்-இன்மொழியே. விளைநிலமா-கழனியாகவும். ஈதலே - கொடுத்தலே. வித்தாக - விதையாகவும். களைகட்டு-களையைப் பறித்தெறிந்து. வாய்மை - மெய்ம்மொழி யாகிய. எரு அட்டி-எருவிட்டு. அன்பு நீர் - அன்பாகிய நீரினை. அறம் கதிர் - தரும நெறியாகிய நெற்கதிர். ஈன - தரும்படி. பைங்கூழ் - (புண்ணியமாகிய) பயிரை. (2)

வைகலும் - (பல) நாளும். மெல் என்றல்-மென்மைத் தன்மையாதல். நல்லறம் - சிறந்த தரும நெறிகளை. கீழ்கட்கு-கீழ்மக்கட்கு. வல் என்னும் நெஞ்சு - வலிய மனமேயாம். (3)

காய்தல் - வெறுத்தல். உவத்தல் - விரும்புதல். கண்ணதே - இடத்தேயாகும். உற்ற - (அப் பொருளிடத்துப்) பொருந்திய. தோன்றாது ஆகும் - காணப்படாதிருக்கும். தோன்றா - காணாமல். கெடும் - மறையும்.

பல - பலநூல்களையும். அலர் கதிர்-பரந்த கிரணங்களை யுடைய. ஞாயிறு - சூரியன். அச்சு ஆணி-கடையாணி.(5)

இம்மை - இப்பிறப்பில். அடக்கத்தை . (திரிகரணங்களையும்) அடக்குங்குணத்தை. உம்மை - மறுமையில். உயர் கதிக்கு-முத்தியில். உய்த்தலால் - சேர்த்தலால். பட்டாங்கு-நீதி. நூல்களிற் கூறப்பட்டவாறு. பண்புடையாளரே - நற்குணமுடையவரே. நட்டார் - சிநேகிக்கத்தக்கவர். (6)

உசாத்துணை - ஆலோசனை கேட்கத்தக்க துணைவனும். பழியா - (பிறரால்) பழிக்கப்படாதபடி. பழியாமல் வாழுந் திறமும் மானமும் அழியா ஒழுக்கத்தின் மிக்கதும் இல்லை. (7)

வினைப்பயன்; நல்வினை தீவினைகளின் பயன்; துய்த்தலால் - அநுபவிப்பதனால். கரி - சாட்சி. (8)

வினைகாத்து - தன்னிடத்தில் தீவினைகள் நிகழாதபடி காத்து. ஓம்பி - பேணி. புனை கோதை - சூடிய மாலையினையுடைய; பூமாலைசூடிய. சொல் - கணவன் சொல்லுக்கு. (9)

குறிப்புஒழுகல் - குறிப்பின்படி நடத்தல். நாண்-வெட்கம். கண்டது - பார்க்கும் பொருள்களையெல்லாம். விழையாமை - விரும்பாமை. விண்டு - வேறுபட்டு. வெறுப்பன - வெறுக்கத் தக்கவற்றை. வெஃகாமை - கவரநினையாமை. (10)

புறந்தரான் - பேணமாட்டான். வேளாண்மை - உபகாரம். இருள் - கேட்டைத் தருவதாகும். (11)

ஆய்ந்து - ஆராய்ந்து. அடங்கினோர்க்கு - (மனம் முதலியவற்றை) அடக்கிய ஞானிகளுக்கு. ஈந்து - ஈந்து. என்ற இரண்டும்-என்று சொல்லப்பட்ட இவ்விரண்டினாலும். குன்றா-குறையாத. வாயில் திறந்து நின்றது எனக் கூட்டுக. (12)

IV - செய்யுட் கதைகள்

இடைக்காடன்பின் போனது :

இது, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தினுள்ளது. இதனைச் செய்தவர், செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி.

நான்மாடம் - நான்கு மாடங்களையுடைய; அவையாவன: திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர். பின்னம் - வேறுபாடு. இயல்வாணர் - புலவர். இதவியோன் - நன்மை செய்பவன். தென்னன் - பாண்டியன். (1)

உத்தரம் - பதில். பொலாமணி - பொல்லாமணி, இது பொள்ளாமணி என்பதன் திரிபு; பொள்ளாத - துவாரம் செய்யாத. இறை - கடவுள்; சொக்கநாதர். (2)

உமாதேவி சொல்லாகவும், சிவபெருமான் அதன் பொருளாகவும் அமைந்துள்ளனர் என்பது அறிக. அாற்றும்-சொல்லும். அன்னம் - அன்னவடிவாகிய பிரமன். (3)

மாது - உமாதேவி. மா நிலன் - பெரிய பூமி. (4)

எழில் நலம் - எழுச்சியுடைய நன்மை. கூர-மிக. எய்துவம் - அடைவோம். மின் - உமாதேவி. (5)

மறு - குற்றம். நெறிபட - முறைமை யுண்டாக. புலருமுன்னம் - விடியும்முன். தொழுவான் - தொழுவதற்கு. (6)

விதிர்த்தார் - நடுங்கினர். என் ஆம் - யாதாகும். (7)

தாழாது - தாமதியாமல். கவிமனர் - பெரும்புலவர். (8)

வீழா - வீழ்ந்து. மெய்ப்படு - உடலில் உண்டாகிய. மேதகு - மேன்மையுடைய. ஒல்லை - விரைவில். (9)

மால்போல் - இந்திரன்போல. வஞ்சி - தேவி. பஞ்சவ-பாண்டியனே. கிஞ்சில் - சிறிது. (10)

செற்றம் - பகைமை. அந்தாதி - சிவபெருமான் திருவந்தாதி. சொன்னவன் - சொன்னவனாகிய. ஓராது - உணராமல். நென்னல் - நேற்று. (11)

புல்லர் - அறிவில்லாதவர். நம் புடைமாது - நமது இடப் பக்கத்தி லிருக்கின்ற உமாதேவி. நேர்ந்தது - உண்டான வருத்தம். (12)

ஆறி - தணிந்து. வருவல் - வருவேன். (13)

தலம் - உலகத்திலுள்ளவர். ஆர்ந்தது - பொருந்தியது; அமைந்தது. (14)

இடைக்காடன் - இடைக்காடனை. பன்னிய - சொன்ன. தமிழ் - தமிழ்ப்பாட்டு. ஓடை - முகபடம். பருப்பதம் - மலை; ஓடைப்பருப்பதம் என்றதனால் யானையை யுணர்த்திற்று. எருத்தம் - பிடரி. வரிசை - சிறப்பு. கூர - மிக. (15)

(2) இளங்கோவடிகள்

இது, கா. நமச்சிவாய முதலியார் இயற்றியது.

குலமகள் - உயர் குலத்திற் பிறந்த பெண். நாய்கன் - வைசியன். தகை - பெருமை. சால்பு - ஒழுக்கம். மலர்மகள் - இலக்குமி. வனப்பு - அழகு. வாய்ப்பு - நற்குணம் முதலிய அமைதி. கலைமதிப்பு அடைய - காவியத்திற்குரிய இலக்கண விதிகள் பொருந்தும்படி; தமிழ்க்கலை சிறக்க (1)

புலப்பகை - ஐம்புலனாகிய பகை. புனிதன் - மனத் தூய்மையுடையவன். புலமை சான்றோன் - அறிவிற் சிறந் தவன். உலப்பு - அழிவு. ஒள்ளியன் - புகழுடையவன். உறுத்த - எதிர்த்து வந்த. வேலான் - வேற்படை ஏந்தியவன். இளைய கோமான் - தம்பியாகிய அரசிளங்குமரன். (2)

பொரு - ஒப்பு. கணிதன் - ஜோதிடன். போந்தனன் - வந்து; முற்றெச்சம். ஆதன் (தந்தையாகிய) சேரலாதன். இயல்பினை - இரேகைகளின் தன்மையை. இயம்புகென்றான் - இயம்புக என்றான்; சொல்லுக என்றான். (3)

பற்றிப்பற்றி - மாறிமாறிப் பிடித்து. ஐயுறவு - சந்தேகம். அறைமதி - சொல்லுவாய்; மதி என்பது முன்னிலையில்வரும் அசைச்சொல்.

கோள்கள் - கிரகங்கள். செறிந்தன - அமைந்துள்ளன. இன்னார் - இவ்விருவரும். திறல்-வலிமை. மாதிரம் - (எட்டுத்) திக்கிலுமுள்ளவர்கள்; இடவாகு பெயர். மற்றும் - மீண்டும். ஒன்று - ஒரு காரியம்; எண்ணலளவை யாகுபெயர். ஒருபடி - ஒரு நிலையில். (5)

ஆங்கண் - அது பொழுது. தன் இயல் - தனது தன்மை. குன்றிக்காட்ட - குறைவாகத் தோற்றுவிக்க. முது உலகு - பழமையாகிய நிலவுலகம். தேறான் ஆகி - தெளியாதவனாகி. (6)

நண்ணுறும் - வந்தடையக்கூடிய. இயைபு - சம்பந்தம். என்னோ - யாதோ. நவில்க - சொல்லுக. அண்ணல் - மூத்தோன். எண்ணி - யோசித்து. கண்உறும் - நினைக்கத் தக்க. காலபேதம் - காலத்தின் வேறுபாடு; பருவங்கள். கவின் - அழகு. பண்ணுற - செவ்வையாக. (7)

நவிற்றினை-சொல்லினை. ஒன்றும்-பொருந்திய. இயல்பு-இயற்கை. அறிதி - அறிவாய். (8)

காசினி - உலகம். ஏல - பொருந்த. இயன்றில - அமைந்தில. கோலம் - அழகு. சால - மிக. கரிந்து - தீய்ந்து. (9)

சோதனைக்கு - ஆராய்ச்சிக்கு. தோன்றல் - முன்னே தோன்றினவன்; அண்ணன். போதும் - போவோம். வம் என - வாரும் என. தீது - மனவருத்தம். (10)

இளங்கோ - இளங்கோவடிகள். தமிழ் வேந்தன் - தமிழ்க்கரசன். ஒருவந்தம் - முழுவதும். அற - நீங்க. குளம் காணும் - நெற்றியைப் பார்க்கும்; புருவங்களுக்கு நடுவிடத்தை நோக்குகின்ற; யோகஞ் செய்கின்ற. (12)

தவராச கோளரி - தவராச சிங்கம். குலவினான் - விளங்கினான். (12)

Printed at the 'Tamil Kadal' Press, San Thome, Madras.